# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | குற்றம் | 5 |
| 2. | பாவ மன்னிப்புக் கோருவது கடமையா? | 9 |
| 3. | மன்னிப்பு எப்போது? | 19 |
| 4. | குற்றத்தின் காலம் | 25 |
| 5. | பாவம் என்றால் என்ன? | 43 |
| 6. | சிறிய, பெரிய பாவங்கள் | 46 |
| 7. | சிறிய பாவங்கள், பெரிய பாவங்களாகின்றன! | 53 |
| 8. | பாவத்தை வெறுக்க முடியுமா? | 59 |
| 9. | கடந்த வாழ்க்கையைத் திரும்பிப்பார்! | 61 |
| 10. | மனோ இச்சைக்கு முற்றுப்புள்ளி | 72 |
| 11. | பாவ மன்னிப்புக் கோருபவர்களின் பிரிவுகள் | 74 |
| 12. | குற்றவாளியின் முதற் கடமை | 81 |
| 13. | வியாதிக்கு மருந்து | 86 |


# பாவ மன்னிப்பு

## குற்றம்

பரந்து விரிந்த இம்மாநிலத்தில் எத்தனையோ கோடி மக்கள் வாழ்கிறார்கள். ஆனால் அவர்களில் குற்றமே செய்திராத ஒரு மனித்னைப் பொறுக்கி எடுக்க முடியுமா? பொறுக்கி எடுப்பது சாத்தியம் என்று எண்ணிப் பார்க்க வாகிலும் முடியுமா? முடியாது; கண்டிப்பாய் முடியாது. ஏனெனில், குற்றம் புரிவது இயற்கை. அந்த இயற்கைக்கு, உலகில் காலை வைத்த எந்த மானிடனும் தப்பமுடியாது; தப்பியதுமில்லை. நபி ஆதம் (அலை) அவர்கள் கூட அதன் வேட்டைக்கு இரையாகிவிட்டார்கள் என்றால் மற்றவர்களைப் பற்றி கேட்க வேண்டியதேயில்லை.

ஆனால், தான் செய்த குற்றத்தை எண்ணி, மனம் நொந்து எல்லாம் வல்ல இறைவனிடம் பாவ மன்னிப்புக் கோரும் மனப்பான்மைதான் இறைநெறியில் செல்லும் அறிஞர்களுக்கு முதலடியாக அமைகிறது.

நபி ஆதம் (அலை) அவர்கள் குற்றம் புரிந்தார்கள். ஆனால், அதே குற்றத்தை அவர்கள் மீண்டும் மீண்டும் செய்ய வில்லை; தாம் செய்த குற்றத்தைக் கட்டோடு மறந்து விட்டுக் காலம் கழிக்கவுமில்லை. மனம் கலங்கிஅழுதார்கள்; உளம் நொந்து கதறினார்கள். இறைவனின் கட்டளைக்கு அவர்கள் இழைத்த தீங்கை எண்ணி எண்ணிக் கண்ணீர் விட்டார்கள். "இறைவா! வணக்கத்திற்குரியவன் நீயே. உன்னைத் தவிர்த்து வேறு நாயன் இல்லை. நீ என் நாயன். நான் உன் அடிமை. நான் உன்னுடைய கட்டளைக்கு களங்கம் விளைவித்துப் பாவியாகிவிட்டேன். ஏகனே! என் குற்றத்தை மன்னித்தருள்! நீ என் குற்றத்தை மன்னித் தருளவில்லையாயின், நான் வெற்றி பெற்வே முடியாது" என்று இறைஞ்சினார்கள்.

ஆனால், இறைவனின் மன்னிப்பு அவ்வளவு சீக்கிரத்தில் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. ஆதம் (அலை) அவர்கள் அழுதார்கள்; தவற்றை உணர்ந்து புழுங்கினார்கள். சுருங்கச்

சொன்னால், அவர்களின் குற்றத்திற்குரிய தண்டனையை அவர்கள் மனோ வேதனையாகவே அனுபவித்தார்கள். இதற் கிடையில் எத்தனையோ ஆண்டுகள் உருண்டோடிவிட்டன.

பின்னர் ஆதம் (அலை) அவர்களின் குற்றம் மன்னிக்கப்படும் தினமும் வந்தது. "இறைவா! என் சந்ததியில் உதிக்கவிருக்கும் முஹம்மது (ஸல்) அவர்களுக்காகவாகிலும் என்னை மன்னித்தருள்வாயாக!" என்று பிரார்த்தித்தார்கள். இறைவன் அவர்களின் குற்றத்தை மன்னித்தான். "குற்றத் திலிருந்து மன்னிப்புப் பெற்றவன் குற்றமே செய்யாதவன் போல் ஆகிவிடுகிறான்" என்னும் திருநபி (ஸல்) அவர்களின் கருத்திற்கொப்ப, அவர்கள் முழுக்க முழுக்க புது மனிதராய் மாறினார்கள்.

நபி ஆதம் (அலை) அவர்கள் குற்றம் புரிந்தார்கள் என்ற காரணத்தைக் கூறிக்கொண்டு சிலர் குற்றம் புரிய முற்படுகிறார்கள்; குற்றம் புரிகிறார்கள். இது முற்றிலும் தவறு. இவர்கள் குற்றம் செய்யும் விஷயத்தில் மட்டுமே ஆதம் (அலை) அவர்களைப் பின்பற்றுகிறார்கள். ஆதம் (அலை) அவர்களை இவ்வாறு பின் பற்றக் கூடாது. ஏனெனில், பாவமன்னிப்புக் கோரும் விஷயத்தில் அவர்களைப் பின்பற்றலாமே தவிர, குற்றம் புரிவதில் அல்ல.

இதிலிருந்து, ஒரு மனிதன் சிறியதொரு குற்றமும் செய்யாதவனாக வாழ முடியும் என்று நான் கூறுவதாக எண்ணிவிடாதே! அப்படி இருப்பது சாத்தியமில்லை. ஏனெனில், மனிதனின் இயற்கையில் நன்மையும் தீமையும் கலந்திருக்கின்றன. சில சமயங்களில் நன்மை ஆட்கொண்டு விடும். அப்போது அவன் அமரனாக மாறுவான்; நன்மையான காரியங்களை விழுந்து விழுந்து செய்வான். வேறு சில சமயங்களில் அவனைத் தீமை ஆட்கொண்டுவிடும். அப்போது அவன் 'ஷைத்தானி'ன் பிரதி பிம்பமாகத் தோன்றுவான்; தீமையானவற்றை ஆர்வத்தோடு செய்வான். தீமையைத் திரும்பியும் பாராமல் நன்மையிலேயே புரள்வது அமரர்களின் இயல்பு. நன்மையை நினைத்துப் பாராமல் தீமையிலேயே திளைப்பது ஷைத்தான் என்னும் மூதேவியின் குணம். குற்றத்தைச் செய்துவிட்டு அதற்குப் பரிகாரமாக பாவமன்னிப்புக் கோருவது ஆதம் (அலை) அவர்களின் தன்மை. இத்தன்மை ஒவ்வொரு மனிதனிடமும் பிரதிபலிக்க வேண்டும் என்று தான் நான் கூறுகிறேன்.



இப்போது, பாவமன்னிப்பு என்றால் என்ன, அதற்குரிய நிபந்தனைகள் யாவை என்பன போன்றவற்றை ஆராய்வோம்.

பாவமன்னிப்பின் அந்தரங்கம் குறித்தும் பலர் பலதரப்பட்ட அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கின்றனர். அவற்றையெல்லாம் இங்குக் கூறி நேரத்தை வீணாக்குவதை நான் விரும்பவில்லை. என்றாலும் நீ புரிந்துகொள்ளப் போதுமான அளவிற்கு இதோ எழுதுகிறேன்.

"ஆண்டவனே! என் குற்றத்தை மன்னித்துக்கொள்!" என்று வாயால் சொல்லிவிட்டால் மட்டும் அது மன்னிப்பாகி விடாது. பாவமன்னிப்பிற்கு மூன்று அங்கங்கள் உள்ளன. அவை அனைத்தும் ஒன்று சேரும்போது தான் பாவ மன்னிப்பு தன் முழு உருவத்துடன் தோற்றமளிக்கும். அந்த மூன்று அங்கங்களில் ஒன்றே ஒன்று தவறிவிட்டாலும் போதும், அதற்குப் பாவமன்னிப்பு என்னும் பெயர் பொருந்தாது.

முதல் அங்கம் அறிவு. பாவங்களினால் விளையும் விளைவுகளையும் விபரீதங்களையும் அறிய வேண்டும். அவை மனிதனுக்கும், இறைவனுக்கும் இடையில் திரையென நிற்கின்றன என்று உணரவேண்டும். இந்த அறிவுதான் பாவமன்னிப்பின் அங்கம். இத்தகைய அறிவு உன் உள்ளத்தில் ஏற்படும்போது, நீ செய்த குற்றங்களும், அதனால் ஏற்பட்ட கசப்பான சம்பவங்களும் உன் உள்ளத்திரையில் பிரதி பலிக்கும். நீ செய்த குற்றத்தினால் நீ அடைய வேண்டிய குறிக்கோளை உன்னால் அடைய முடியாமற் போய் விட்டதையும் நீ உணர்வாய்.

இப்படி நீ உணர ஆரம்பித்தால், தவறிப்போன உன் குறிக்கோளை உன்னால் நினைக்காமலிருக்க முடியாது. தவறிப் போனதை எண்ணி வருந்துவாய். அதற்குக் காரணமா யிருந்த பாவங்களை வெறுப்பாய். இந்தக் கவலை - கைசேதம் தான் இரண்டாவது அங்கம். பாவங்கள் மனிதனை முன்னேற்றப் பாதையில் செல்லவிடாமல் தடுக்கின்றன என்ற அறிவினால் தான் இத்தகைய கைசேதம்-கவலை உண்டாகிறது.

இவ்விரு அங்கங்களும் உண்டாகி விட்டால் அதைத் தொடர்ந்து மூன்றாவது அங்கமும் உண்டாகிவிடும். உன் உள்ளத்தில் ஒரு தீர்மானம்-உறுதி ஏற்பட்டுவிடும்

இத்தீர்மானம், கடந்த காலம், எதிர்காலம் ஆகிய முக்காலங்களிலும் தொடர்பு கொள்ளும். அதாவது கடந்த காலத்தில் நீ செய்து திரிந்த பாவங்களுக்குப் பரிகாரமாக, அவற்றையழிக்க வல்ல நன்மைகளைச் செய்ய முற்படுவாய்; நிகழ் காலத்தில் நீ செய்து வரும் குற்றத்தை விட்டுவிடுவாய்; எதிர் காலத்தில் எவ்விதப் பாவச் செயலும் உன்னிடமிருந்து வெளிப்படாதவாறு பார்த்துக் கொள்வாய்.

இதுவரை 'தௌபா' (பாவ மன்னிப்பு)வின் அங்கங்களைப் பற்றி ஓரளவு அறிந்து கொண்டிருப்பாய் என்று எண்ணுகிறேன். அறிவு, கைசேதம், தீர்மானம் ஆகியவையே அதன் அங்கங்கள் என்பதை மறந்துவிடாதே! இவற்றை நீ நினைவில் பதித்துக் கொள்ளாவிட்டால் போகப் போக உன்னால் விஷயங்களை உணர்ந்து வர முடியாது.

இவற்றில் முந்தியது அறிவு. இதன் உதவியால்தான் தீமைகளின் தீங்குகளையும், நன்மைகளின் பலன்களையும் உணர முடியும். இந்த அறிவு உன் உள்ளத்தை ஆட்கொள்ளும் போது, உன் உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து கை சேதத் தீ மூள ஆரம்பித்துவிடும். இத்தீயின் ஒளியில், நீ செய்த பாவங்கள் உன் குறிக்கோளை கெடுத்துவிட்டதோடு உன்னையும் இறையருளுக்கு அப்பாற்பட்டவனாக ஆக்கிவிட்டன என்று அறிவாய்.

மேற்குறிப்பிட்ட மூன்று அங்கங்களுக்கும் சேர்த்து தான் 'பாவ மன்னிப்பு' என்று சொல்லப்படுகிறது. ஆனால் சில வேளைகளில் செய்த குற்றம் குறித்து வருந்துவதையே பாவமன்னிப்பு என்று குறிப்பிடுவதுமுண்டு. இம்முறையை யொட்டித்தான் அண்ணல் நபி (ஸல்) அவர்கள், "செய்த தீமையை எண்ணி வருந்துவதே தௌபா" என்று கூறினார்கள்.

தௌபா என்பது மூன்று அங்கங்கள் கொண்டது என்று நான் கூறினேனல்லவா? திருநபி (ஸல்) அவர்களின் மொழியில் 'தௌபா' என்பது கைசேதம் என்ற ஒரே ஒரு அங்கம் கொண்டது என்று தெரிகிறது. இவ்விரு கருத்துக் கிடையில் முரண் இருப்பதாக உனக்குத் தோன்றலாம். ஆனால் உண்மையில் முரண் எதுவுமில்லை. திருநபி (ஸல்) அவர்களின் கருத்திலும் மேற்குறிப்பிட்ட மூன்று அங்கங்கள் இருக்கத்தான் செய்கின்றன. ஒரு மனிதன் கைசேதப் படுகிறான் என்றால், அவன் அப்படிக் கைசேதப்படும்



அளவிற்கு அது குறித்து அவன் ஓரளவாகிலும் அறிந்திருக்க வேண்டும். ஏனெனில், ஒன்றும் அறியாத ஒருவன் ஏன் கவலைப்படப்போகிறான்? எனவே கவலைப்படுபவன் அறிவு பெற்றிருக்க வேண்டும் என்பது திண்ணம். இந்த அறிவும், அதனால் ஏற்படும் கைசேதமும் சேர்ந்து விட்டால் அவற்றிலிருந்து கட்டாயம் ஒரு தீர்மானம் உண்டாகிவிடும். ஆகவே திருநபி (ஸல்) அவர்களின் கருத்து எவ்வகையிலும் முரணாகாது.

பாவ மன்னிப்பைப் பற்றி அநேக அறிஞர்கள் விவரித்திருக்கிறார்கள். பாவமன்னிப்பிற்குரிய வியாக்யானங்கள் எண்ணற்றவை. அவற்றையெல்லாம் இங்கு எழுதுவது சாத்தியமில்லை. இதுவரை நான் விவரித்து வந்தவற்றை நீ உணர்ந்து கொண்டால் போதும். உண்மையான ஞானத்தைப் பெறுவது, வெறும் ஏட்டுப் படிப்பைவிட எத்தனையோ மடங்கு உயர்ந்தது.

## 2. பாவமன்னிப்புக் கோருவது கடமையா?

ஆம்; செய்த குற்றத்திற்குப் பாவமன்னிப்புக் கோருவது கட்டாயக் கடமையே. இதற்கு குர்ஆனின் திருவசனங்களும் திருநபி (ஸல்) அவர்களின் கருத்துரைகளும் ஆதாரங்கள். உளத் தெளிவு பெற்றவர்கள் இதை நன்கு உணர்கிறார்கள். தங்கள் ஞானோதயத்தின் உதவியால் அவர்கள் அறியாமை இருள் சூழ்ந்த எல்லாப் பாதைகளிலும், எவருடைய உதவியையும் எதிர்பார்க்காமல் தாங்களாகவே நடக்கிறார்கள்.

ஒரு பாதையில் பிரவேசிக்கும் வழிப்போக்கர்களை இருவகையினராகப் பிரிக்கலாம்.

முதல் வகையினர்: இவர்கள் தாங்கள் பிரவேசிக்கும் பாதையை நன்கு உணராதவர்கள். இவர்கள் துணிவுடன் அப்பாதையில் பிரவேசிக்கமாட்டார்கள். யாரேனும் ஒரு வழிகாட்டியின் உதவியுடன் தான் இவர்கள் பிரவேசிப் பார்கள். அந்த வழிகாட்டியின் உதவி அவர்களுக்கு அடிக்கடி தேவைப்படும்.

இரண்டாம் வகையினர்: இவர்கள் தாங்கள் பிரவேசிக்கும் பாதையைப் பற்றி ஓரளவு உணர்ந்தவர்கள்; உளத் தெளிவு பெற்றவர்கள். இவர்கள் முதலில் அப்பாதையை நன்கு அறிந்து கொள்வார்கள். அதன் பின்னர், அப்பாதையில் நடக்க ஆரம்பிப்பார்கள். எனவே, இவர்கள் எடுத்து வைக்கும் முதலடியே இவர்கள் செல்லவேண்டிய இடத்திற்கு நேராக அமைந்து விடும். இவர்களின் முதலடியே கொஞ்சமும் சாயாமல் நேராக விழுந்து விட்டதால், இவர்கள் யாருடைய உதவியையும் எதிர்பார்க்காமல் தாங்களாகவே தங்கள் குறிக்கோளை அடைந்துவிடுவார்கள்.

இதே போன்று, மதப் பாட்டையில் பிரவேசிக்கும் மனிதர்களையும் இரண்டு வகையினராகப் பிரிக்கலாம்.

முதல் வகையினர்: இவர்கள் குருடர்களைப் போன்ற வர்கள். இவர்கள் தாங்களாகவே மதப்பாட்டையில் பிரவேசிக்கமாட்டார்கள். இவர்களால் அப்படிப் பிரவேசிக்க முடியாது. யாரேனும் ஒரு மார்க்க ஞானியின் உதவியால் தான் இவர்கள் மதப் பாட்டையில் பிரவேசிப்பார்கள். சிறிய, பெரிய விஷயங்கள் ஒவ்வொன்றுக்கும் குர்ஆனிலிருந்தும், நபிமணி அவர்களின் மொழியிலிருந்தும் ஆதாரங்களை எதிர்ப்பார்ப்பார்கள். சில நேரங்களில் இவர்களுக்குத் தேவையான ஆதாரம் கிட்டாமலும் போகலாம். அப்போதெல்லாம் இவர்கள் கலக்கத்திற்கும், திகைப்பிற்கும் இரையாவார்கள். இவர்கள் எத்தனை ஆண்டுகள் அப்பாட்டையில் நடந்தாலும் இவர்களின் பீதி நீங்காது.

இரண்டாம் வகையினர்: இவர்கள் அகப்பார்வை யுடையவர்கள்; எந்த விஷயத்தையும் நுணுகி ஆராயும் பேராற்றல் பெற்றவர்கள். இவர்களின் உள்ளங்களையும் இறைவன் விரிவாக்கி விட்டான். ஏதேனுமொரு விஷயத்தை உணர வேண்டியிருந்தால், அதற்காக இவர்கள் சிரமப்பட மாட்டார்கள்; குழப்பத்திற்கும் கலக்கத்திற்கும் இலக்காக



மாட்டார்கள். இவர்கள் அறிய முனைந்த விஷயம் இவர்களின் அறிவாற்றலை விட்டு அப்பாற்படாது. மிகவும் மெல்லிய குறிப்புகளைக் கொண்டே இவர்கள் எல்லா வற்றையும் அறிந்து கொண்டு விடுவார்கள். ஏனெனில் இவர்களின் உள்ளங்கள் திருமறையின் ஒளியாலும், நபிமணி அவர்களின் கருத்துச் சுடராலும் ஒளிவிட்டுப் பிரகாசிக் கின்றன. இவர்கள் எந்த விஷயத்திலும் குர்ஆனின் தீர்ப்பை ஆராயமாட்டார்கள். குர்ஆனின் தீர்ப்புத்தான் தேவையான போது அவர்களின்உளத்திரையில் பளிச்சிட்டு விடுகிறதே! பின்னர் குர்ஆனைப் புரட்டி ஆராய்வதற்குத் தேவை என்ன?

இந்த இரண்டாம் வகையினர் பாவ மன்னிப்பின் காரியத்தில் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்று பார்ப்போம். "பாவ மன்னிப்பு கடமையா என்னும் கேள்வி அவர்களுக்கு உதயமாகும் போது என்ன செய்வார்கள்?" என்று தானே கேட்கிறாய்? இதோ சொல்கிறேன். அவர்களுக்கு இவ்வினா உண்டாகிவிட்டால், அவர்கள் குர்ஆனைப் புரட்டி ஆராய மாட்டார்கள்; 'பாவமன்னிப்புக் குறித்துத் திருமறையின் தீர்ப்பென்ன?' என்று மூளையைப் போட்டுக் குழப்பிக் கொள்ள மாட்டார்கள்.

வேறு என்ன செய்வார்கள்? அவர்கள் குறுக்கு வழியில் செல்வார்கள். பாவமன்னிப்பு என்றால் பொருளென்ன என்று சிந்திப்பார்கள்; அலசிப் பார்ப்பார்கள். பிறகு, கடமையை ஆராய்வார்கள், 'கடமை என்பது எதைக் குறிக்கும்?' என்று யோசிப்பார்கள்... இத்தனையும் அவர்களின் உள ஒளியால் தான் நடைபெறும்.

இவ்விரு வார்த்தைகளையும் அறிந்துகொண்ட பிறகு, அவர்கள் 'பாவ மன்னிப்பை'க் 'கடமை'யோடு இணைத்துச் சிந்திப்பார்கள். இப்படி அவர்கள் சிந்திக்கும் போது பாவமன்னிப்புக் கோருவது கடமை என்று அவர்களுக்கு சந்தேகத்திற்கிடமின்றித் தெரிந்துவிடும்.

'தௌபா' எனும் பாவ மன்னிப்பின் அர்த்தம் தான் உனக்கு முன்னமே தெரியுமல்லவா? அதை நினைவுபடுத்திக் கொள்! பாவ மன்னிப்பு என்றால் செய்த குற்றத்திற்குப் பரிகாரம் தேடுவதாகும்.

கடமை என்றால் என்ன? இதைத்தான் நீ நன்கு கவனிக்க வேண்டும். ஒரு காரியத்தைச் செய்வது கடமை என்றால்,

அக்காரியத்தைச் செய்வதால் இம்மையிலும், மறுமையிலும் குறிப்பிடத்தக்க பயன் ஏற்படும் என்று பொருள். ஏனெனில் ஒரு வேலையைச் செய்வதால் நன்மையும் அதை விடுவதால் தீமையும் உண்டாகாவிடில், அந்தச் செயலுக்குக் 'கடமை' என்று பெயர் சொல்வதில் தான் அர்த்தமென்ன? இம்மையிலோ, மறுமையிலோ எத்தகைய பயனையும் தராத-தரமுடியாத ஒரு செயலை நாம் ஏன் செய்ய வேண்டும்? அத்தகைய செயலைச் செய்வது கடமை என்று மார்க்கம் ஏன் குறிப்பிட வேண்டும்?

உதாரணமாய் வணக்கத்தை எடுத்துக் கொள்வோம். இறைவனை நாம் வணங்குவதால் இம்மையிலும், மறுமையிலும் நமக்குப் பலன் கிடைப்பதோடு அதை விடுவதால் இம்மையிலும், மறுமையிலும் துன்பம் உண்டாகிறது. எனவே, "இறைவனை வணங்குவது கடமை" என்று யாரேனும் கூறினால், அதை எவராலும் மறுக்க முடியாது. கடமை என்னும் பெயர் அதற்கு மிகவும் பொருத்தமாக இருக்கும். ஆகவேதான் வணக்கத்தைக் கடமை என்று குர்ஆன் கூறுகிறது.

இதற்கு மாற்றமாக, வணக்கத்தால் இம்மையிலோ மறுமையிலோ எவ்விதப் பயனும் ஏற்படாமல், அதற்குக் கடமை என்னும் பெயர் எப்படிப் பொருந்தும்? இத்தகைய வீணான செயலில் நம் பொன்னான நேரத்தை ஏன் பாழாக்க வேண்டும்?

இதிலிருந்து நீ அறிவது என்ன? இம்மை, மறுமை ஆகிய இரு வாழ்க்கையிலும் குறிப்பிடத்தக்க பயனைத் தரும் செயலே கடமை எனப்படும் என்று அறிகிறாயல்லவா?

ஒரு மனிதனுக்கு உலகில் எத்தனையோ குறிக்கோள்கள் உள்ளன. ஆனால் அவற்றிலெல்லாம் சிறந்த உயர்ந்த ஒரு குறிக்கோளும் இருக்கத்தான் செய்கிறது. இக்குறிக்கோளை அடைவது, இதர குறிக்கோளைப் போன்று அவ்வளவு எளிதான காரியமல்ல. அதை அடைய எத்தனையோ மேதைகள் இரவு பகலெனப்பாராமல் இறை வணக்கம் செலுத்தினார்கள். அதுதான் இறை சந்திப்பு; ஒரு மனிதன் தன் நாயகனை நயனம் குளிரக்காணும் லட்சியம் இதைவிட உயர்ந்த ஒரு வெற்றி கிடையாது. இது கிட்டாதாயின், இதைவிடக் கேடு கெட்ட ஒரு தோல்வியும் கிடையாது. இந்த வெற்றிக்குக் குந்தகம் விளைவிப்பது எது? பாவங்கள் செய்வதுதான் இவ்வெற்றியை அடித்து விரட்டுகிறது என்பது திண்ணம். இதில் சந்தேகத்திற்கு இடமே இல்லை. இந்த வெற்றியை-குறிக்கோளை நீ அடைய வேண்டுமென்றால் முதலில் நீ புரிந்த குற்றங்களுக்குப் பாவமன்னிப்புக் கோர வேண்டும். ஏனெனில், பாவத்தினால் ஏற்பட்ட கறையை அகற்றும் ஆற்றல், பாவமன்னிப்பிற்குத்தான் உண்டு. எனவே, பாவ மன்னிப்புக் கோருவது மகத்தானதொரு வெற்றியைத் தரவல்லது என்று தெளிவாகிவிட்டது; அதைத் தொடர்ந்து, பாவமன்னிப்புக் கோருவது கடமை என்றும் உறுதியாகி விட்டது.



இந்த விளக்கம் உளத் தெளிவுடையவர்களுக்குத்தான். இதைப் புரிந்து கொள்ளாதவர்களுக்கு, இதோ, குர்ஆனின் ஆதாரங்களையும், நபி (ஸல்) அவர்களின் கருத்தின் தெளிவுரைகளையும் தருகிறேன். கவனித்துப் படி!

இறைவன் கூறுகிறான்:

"விசுவாசிகளே, நீங்கள் வாழ்க்கையில் வெற்றியடையும் பொருட்டு இறைவனிடம் பாவமன்னிப்புக் கோருங்கள். இறைவன் உங்கள் குற்றங்களை மன்னித்தருளப் போதுமானவன்."

"இறைவன் பாவமன்னிப்புக் கோருபவர்களை விரும்புகின்றான்."

இவை போன்று அநேக வசனங்கள் குர்ஆனில் உள்ளன. மேற்குறிப்பிட்ட வசனங்களை நீ நன்கு ஆராய்ந்து பார்த்தால், பாவமன்னிப்புக் கோருவது எத்தனை மேலான நன்மை என்பதை உணர்வாய். அவற்றில் ஒன்று, பாவமன்னிப்புக் கோருவது கடமை என்று அறிவிக்கிறது; மற்றொன்று, பாவ மன்னிப்பு வேண்டுவது இறைவனின் அன்பை உண்டாக்கவல்லது என்று தெரிவிக்கிறது; இன்னொன்று, "கலப்பற்ற முறையில் மன்னிப்புக் கோருங்கள்!" என்று எச்சரிக்கிறது. பாவமன்னிப்புத் தேடுவது கடமை என்பதற்கு இவ்வளவு ஆதாரங்கள் போதுமானவை என்று எண்ணுகிறேன்.

அடுத்தபடியாக திருநபி (ஸல்) அவர்களின் கருத்தைப் பார்ப்போம். பாவமன்னிப்புக் குறித்து அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று ஆராய்வோம்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

"பாவமன்னிப்புக் கோருபவன் இறைவனின் நண்பன்; குற்றத்திலிருந்து மன்னிப்புப் பெற்றவன் குற்றமே செய்யாதவனைப் போல் ஆகிவிடுகிறான்."

இதில் பொதிந்துள்ள கருத்து எவ்வளவு தெளிவாக இருக்கிறது! இதைவிட உயர்ந்த ஓர் ஆதாரம் தேவையா என்ன?

ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் ஒரு சம்பவத்தைக் குறிப்பிடுகிறார்கள். அதை நீயும் படித்துப்பார்!

நபி ஆதம் (அலை) அவர்களின் பாவமன்னிப்பு ஒப்புக் கொள்ளப்படும் நேரம். ஆதம் (அலை) அவர்கள் இறை வணக்கத்தில் கண்ணீரும் கம்பலையுமாக மூழ்கியிருந்தார்கள். "என் பாவம் எப்போது மன்னிக்கப்படும்? இறைவன் என் குற்றத்தை மன்னிப்பானா?" என்று புலம்பியழுதார்கள்.

"அஸ்ஸலாமு அலைக்கும்" என்ற குரல் கேட்டு ஆதம் (அலை) அவர்கள் திரும்பினார்கள்.

எதிரில், ஜிப்ரயீல், மீக்காயில் ஆகிய இரு அமரர்களும் நின்றார்கள்.

"வ அலைக்கு முஸ்ஸலாம்; வரஹ்மதுல்லாஹ்" என்று கூறி ஆதம் (அலை) அவர்கள் ஆச்சரியத்தோடு பார்த்தார்கள்.

"ஆதம், உம்முடைய பாவமன்னிப்பை இறைவன் ஏற்றுக் கொண்டு விட்டான்; உம் குற்றத்தை மன்னித்து விட்டான். இந்த நற்செய்தியை அறிவிக்கவே நாங்கள் வந்திருக்கிறோம்" என்றார்கள் வந்தவர்கள்.

இச்செய்தி ஆதம் (அலை) அவர்களைச் சந்தோஷக் கடலில் ஆழ்த்திற்று என்று நான் சொல்ல வேண்டியதில்லை. அது சொல்லாமலே தெரியும் விஷயம். அவர்களின் மகிழ்ச்சி எல்லையைக் கடந்தது. ஆனந்தப் பெருக்கால் துள்ளி எழுந்தார்கள் அவர்கள்.

ஆனால், மறு வினாடி அவர்களின் சிந்தனை ஓடியது. அந்தச் சிந்தனை புதியதொரு கவலையையும் உருவாக்கிற்று. "சந்தோஷத்திற்குப்பின் கவலையுண்டு" என்பது எவ்வளவு உண்மை! நபி ஆதம் (அலை) அவர்களை இறைவன் சிறப்பாக நடத்தினான். ஆதம் (அலை) அவர்கள் தவறிழைத்தார்கள். அதனால் தண்டனையடைந்தார்கள். பாவ நிவர்த்திக்காக அவர்கள் பட்ட கஷ்டங்கள் எண்ணிலடங்காதவை; மட்டிட முடியாதவை. இவ்வளவு தூரம் சிரமப்பட்ட பிறகு அவர்கள் வெற்றியைக் கண்டார்கள். அப்படியானால், அவர்களுக்குப் பின் வரப்போகும் சந்ததியினரின் கதி? அவர்கள் குற்றமே செய்யாமலிருக்க முடியுமா அல்லது குற்ற நிவர்த்திக்காக அவர்களால் இத்தனை தூரம் சிரமப்படத்தான் முடியுமா?



"ஜிப்ரயீல்! எனக்குக் கிடைத்த இந்த வெற்றியைக் கண்டு நான் மகிழ்கிறேன். என்னால் மகிழாமல் இருக்க முடியாது. ஆனால், என் சந்ததியினரின் கதி என்ன? அவர்கள் குற்றம் புரிந்துவிட்டால், இறைவன் அவர்களை மன்னிப்பானா?...." என்று நபி ஆதம் (அலை) அவர்கள் கேட்டார்கள்.

அதே நேரத்தில் அசரீரிக் குரல் ஒலித்தது: "ஆதம் உமது சந்ததியினருக்கும் பாவமன்னிப்புண்டு. குற்றம் புரிந்துவிட்டு அதை எண்ணிப்பார்த்து என்னிடம் முறையிடுபவர்களுக்கு என் அன்பு எப்போதும் உண்டு. உம்முடைய குற்றத்தை நான் மன்னித்தது போன்று அவர்களின் குற்றங்களையும் நான் மன்னிப்பேன். என்னிடம் மண்டியிட்டு, உளம் நொந்து பாவமன்னிப்புக் கேட்போருக்கு நான் என் கொடையை இழுத்துப் பிடிப்பதில்லை. ஆதம்! நான் மிகவும் நெருங்கியவன். எனவே, அவர்களின் முறையீட்டை நன்கு கேட்பேன்."

பாவமன்னிப்புக் கோருவது கடமை எனும் விஷயத்தில் மார்க்க மேதைகளுக்கிடையில் அபிப்பிராய பேதமில்லை. அது கடமை என்பதை யாரும் மறுக்கவில்லை. பாவமன்னிப்பின் அடிப்படை என்ன? பாவங்கள் மனிதனைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கிவிடுகின்றன என்னும் அறிவுதான் பாவமன்னிப்பின் அடிப்படை, இவ்வாறு நம்புவது கட்டாயக் கடமை என்று சொல்லாமலே தெரியும். ஏனெனில், ஒரு செயலால் ஏற்படும் விளைவையுணராமல் அந்தச் செயலை விட முடியாது.

அடுத்தபடியாகச் செய்த குற்றம் குறித்து கைசேதப் படுதல், இது பாவமன்னிப்பின் இரண்டாம் அங்கம் என்று முன்னரே நீ அறிந்துவிட்டாய். இப்படி கைசேதப்படுவதும் கடமையே என்பது தெளிவு. ஏனெனில் கை சேதமே பாவ மன்னிப்பின் உயிர். இது நீ அறிந்ததுதான்.

இங்கு ஒரு வினா எழுகிறது. அதற்கு முதலில் பதிலளித்துவிட்டு பிறகு விஷயத்தைத் தொடர்வோம்.

சிலர் கேட்கிறார்கள்:

"கடமை (வாஜிப்) என்பது செய்யத் தகுந்த காரியத்திலும், செய்யாமலிருப்பது சாத்தியமான விஷயத்திலுமே நடைபெறும். ஒரு மனிதனைத் தூங்காதே என்று கட்டளையிடலாம். தூங்காமலிருப்பது சாத்தியம். தூக்க மயக்கம் அவனை என்னதான் ஆட்கொண்டு விட்டாலும் ஓரளவு சமாளிக்கலாம். ஆனால், அந்த மனிதனுக்கு, "தூங்கினால் கனவு காணக்கூடாது" என்று கட்டளையிடக் கூடாது. ஏனெனில் இதை அவன் எப்படி நிறைவேற்றுவான்? கனவு காண்பதும், காணாதிருப்பதும் ஒரு மனிதனின் உரிமையில் பட்டவையா என்ன? இதுபோன்று, பாவமன்னிப்பின் முதல் அங்கமான அறிவை கடமை என்றீர்கள். நாங்கள் ஒப்புக் கொள்கிறோம். பாவத்தின் தன்மையை அறியாதவன் அந்த அறிவை உண்டாக்கிக் கொள்வது சாத்தியமே; அது அவன் சக்திக்கும், உரிமைக்கும் உட்பட்டதே. ஆனால், இரண்டாவது அங்கமான கைசேதத்தை கடமை என்கிறீர்களே அதைத்தான் நாங்கள் மறுக்கிறோம். ஏனெனில், ஒரு மனிதனால் நினைத்த நேரத்தில் கைசேதப்பட முடியுமா? முடியாது. கைசேதப்படுவது மனிதனின் உரிமையின் பால் பட்டதல்ல."

இவ்வினா முக்கியமானதுதான். ஆனால், கைசேதத்தை உண்டாக்கிக் கொள்வது மனிதனின் சக்திக்கு அப்பாற்பட்டதல்ல. அதை உண்டாக்குவது சாத்தியமே. மேற்குறிப்பிட்ட அறிவை உண்டாக்கிக் கொண்டால் - அந்த அறிவை வலுப்படுத்திக் கொண்டால், கைசேதம் தானாகவே உண்டாகிவிடும். எனவே, கைசேதப்படுவதும் கடமையே என்பதில் சந்தேகமில்லை.

மனிதனின் உரிமையைப் பலர் பலவாறாகக் கூறுகிறார்கள்: இவற்றையும் நீ அறிந்துகொள்வது நல்லது.

"மனிதன் வெறும் மரம் போன்றவன். இறைவனே அவனை இயக்குகிறான். இறைவனே அவனுக்கு வழி காட்டுகிறான். இறைவனே அவனைப் பாவமன்னிப்புக் கேட்கவைக்கிறான்" என்று சிலர் கூறுகிறார்கள்.

"அதெல்லாம் கிடையாது. மனிதனை மரக்கட்டைக்கு ஒப்பிடுவதை நாங்கள் சகிக்க மாட்டோம். அவனுக்கும் சகல ஆற்றல்களும் உள்ளன. அவன் எதுவேண்டுமானாலும் செய்யலாம். அவன் ஒழுங்காகச் செயலாற்றினால் நடக்காதது ஒன்றுமில்லை" என்று வேறு சிலர் தாக்கினார்கள்.



இன்னும் சிலர் வாதிக்கிறார்கள்:

"இவ்விரு கருத்துக்களும் தவறானவையே. மனிதன் மரக்கட்டையைப் போன்றவனுமில்லை; சர்வ சக்தனுமல்ல. மனிதனால் நடக்காத காரியங்கள் எத்தனையோ இருக்கின்றன. வானத்து மதியைக் கூடத்து விளக்காக்குவது மனிதனால் முடியும் காரியமா?

இக்கருத்துக்களையெல்லாம் எடுத்துப் போட்டுக் கொண்டு ஆராயத் தேவையில்லை. இவற்றில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் நேர்மையானதே. ஏன் ஆச்சரியப்படுகிறாய்? "அதெப்படி முடியும்? ஒன்றுக்கொன்று முரணான இக்கருத்துக்கள் எப்படி நேர்மையாக இருக்க முடியும்?" என்று தானே கேட்கிறாய்? இதோ பதில் சொல்கிறேன். கவனித்துக்கேள்!

இது கொஞ்சம் சிக்கலான விஷயம்தான. இதை உதாரணத்தின் உதவியால் தான் விளக்க முடியும்.

ஒரு சமயம் மூன்று குருடர்கள் ஒன்று சேர்ந்து யானையைப் பார்க்கப்போனார்கள். ஆமாம், கையாலேயே தொட்டுப்பார்த்து யானையை அறிந்துவிடலாம் என்றுதான் போனார்கள். அவர்கள் அதற்கு முன் யானையைப் பற்றிக் கேள்விப்பட்டதுமில்லை.

அவர்கள் யானைக்கருகில் நின்று கொண்டு யானையைத் தொட்டுப் பார்த்தார்கள். ஒருவன் யானையின் காலைத்தொட்டான்; மற்றொருவன் அதன் தந்தத்தைத் தடவினான்; மூன்றாமவன் அதன் காதைப் பிடித்துப் பார்த்தான்.

அவர்கள் மூவரும் யானையைக் கண்டு கொண்ட திருப்தியில் தங்கள் தங்கள் இருப்பிடம் வந்தடைந்தார்கள்.

அவர்களிடம் ஒருவன் கேட்டான்: "யானை எப்படி இருந்தது?"

ஒரு குருடன் பதிலளித்தான்: "யானையா? அது கரடு முரடான தூணைப் போலவே இருந்தது. ஆனால் தூணைவிடக் கொஞ்சம் மிருதுவாக இருந்தது."

"மிருதுவாக இருந்ததா! ஒரு போதும் கிடையாது. அது வழவழப்பான எலும்பைப்போலல்லவா இருந்தது? நான் நன்றாகத் தொட்டுத் தடவிப் பார்த்து விட்டேன். சந்தேகமேயில்லை. யானை என்பது வழவழப்பான எலும்புதான்" என்றான் மற்றொரு குருடன்.

"என்ன உளறுகிறீர்கள்? யானை என்ன அப்படியா இருந்தது? அது தூணைப்போலவுமில்லை, எலும்பைப் போலவுமில்லை. அகன்று விரிந்த ஒரு தோலைப் போலல்லவா அது இருந்தது?" இது மூன்றாம் குருடனின் குரல்.

இப்போது பார்! இவர்களில் யாரும் பொய்யுரைக்க வில்லை. ஒவ்வொரு குருடனும் தான் அறிந்தவற்றை வெளியிட்டான். ஆனால், ஒன்று மட்டும் சர்வ நிச்சயம். இவர்களில் யாரும் யானையைச் சரிவரப் புரிந்து கொள்ளவில்லை.

இந்த உதாரணத்தை வைத்துக் கொண்டு ஆராய்ந்து பார்! உண்மை பளிச் சென்று தெரிந்துவிடும்.

மேற்குறிப்பிட்ட உதாரணத்தைப்போலவே மனிதனின் உரிமையைப் பற்றி விவாதித்த ஒவ்வொரு வகுப்பினரும் உண்மையையே கூறினார்கள்; தாங்கள் அறிந்தவற்றையே வெளியிட்டார்கள். ஆனால் ஒன்று மட்டும் சர்வநிச்சயம். அவர்களில் யாரும் அது குறித்துப் பூரணஞானம் பெறவில்லை.

எங்கேயோ ஆரம்பித்த நான் எங்கேயோ வந்து விட்டேன். பாவமன்னிப்பின் இரண்டு அங்கங்களும் கடமைகளே என்று ஆதாரத்துடன் அறிந்தோமல்லவா? இப்போது மூன்றாவது அங்கத்தையும் பார்த்துவிடுவோம். பாவமன்னிப்பின் கடைசி அங்கம் 'தீர்மானம்' - இனிபாவம் செய்வதில்லை என்ற முடிவு. இதுதான் பாவமன்னிப்பிற்குக் கனி போன்றது. எனவே இதுவும் கடமையாவதில் ஆச்சரியமில்லை. பாவமன்னிப்பின் மூன்று அங்கங்களும் கடமையாகும் போது, அந்த மூன்றினாலும் உருப்பெற்ற பாவமன்னிப்பும் கடமையாகிறது.



# 3. மன்னிப்பு எப்போது?

பாவமன்னிப்புக் கோருவது கடமை என்று அறிந்து கொண்டோம். இப்போது, ஒரு குற்றவாளி எப்போது தன் குற்றத்திற்குப் பாவமன்னிப்புக் கோர வேண்டும், பாவம் செய்து பல்லாண்டுகள் கழித்த பிறகு மன்னிப்புக் கோரலாமா என்பன போன்றவற்றை ஆராய்வோம்.

குற்றம் புரிந்த ஒருவன் தன் குற்றத்திற்காக உடனுக்குடனேயே மன்னிப்புக் கோரியாக வேண்டும், இச்செயலை எக்காரணம் கொண்டும் ஒத்திப் போடக் கூடாது. இஸ்லாத்தின் புனிதத்தன்மையை உணர்ந்த ஒருவன் எப்படி உடனே முஸ்லிமாக வேண்டுமோ, அப்படியே குற்றம் செய்தவன் உடனுக்குடன் தன் குற்றத்திற்குப் பரிகாரம் தேடிக்கொள்ளவேண்டும். இச்செயலை ஒத்திப் போடுவது. விஷமுண்ட ஒருவன், அதை உடனே வெளியேற்றாது ஒத்திப் போடுவதற்கு ஒப்பாகும். இவ்வாறு ஒத்திப் போடுவதன் விளைவை அனைவரும் அறிவர்.

பாவங்களிலும் ஏற்படும் விளைவை அறிவது அவசியம் என்றுதான் ஆரம்பத்திலும் குறிப்பிட்டேன். "அது ஏன்?" என்று சிலர் கேட்கிறார்கள். அந்த அறிவின் உதவியால் தான் ஒரு மனிதன் குற்றம் புரிவதைவிட்டுத் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியும். தீமையின் விளைவை உணராத ஒருவன், குற்றம் புரிவதை விடுவான் என்று எவ்வகையிலும் எதிர்பார்க்க முடியாது. ஆனால், குற்றத்தின் விளைவுகளை உணர்ந்தவர்களெல்லாம் தாங்கள் செய்யும் குற்றங் களிலிருந்து விலகிவிடுவார்கள் என்று சொல்லமுடியாது. நன்குணர்ந்தவர்களில் எத்தனையோ பேர் குற்றம் புரிவதை நாம் காண்கிறோம். இத்தகையவர்கள் தங்கள் ஈமானின் (மத நம்பிக்கை) ஒரு பகுதியை இழந்துவிடுகிறார்கள். ஏனெனில், பாவங்களின் விளைவுகளை உணர்ந்து, அவற்றில் ஈடுபடாமல் விலகியிருப்பது ஈமானின் அங்கங்களில் ஒன்றாகும். இக்கருத்தைத்தான் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் "குற்றம் புரிபவன், அவன் குற்றம் புரியும் நேரத்தில் உண்மை முஸ்லிமாய் இருப்பதில்லை" என்னும் வாக்கியம் மறைமுகமாய்க் குறிப்பிடுகிறது.

பாவச் செயலை நஞ்சுக்கு ஒப்பிடலாம். நஞ்சு எப்படி ஒரு மனிதனின் உயிரைக் குடித்துவிடுகிறதோ, அப்படியே பாவச் செயல் ஈமானின் உயிரைக் குடித்துவிடுகிறது. இதே முறையில் ஈமானை மனிதனுக்கு ஒப்பிடலாம். மனிதனின் பிரதான அங்கம் உயிர். அதனால் தான் அவன் இயங்குகிறான். உயிரில்லையேல் மனிதனுமில்லை. இதேபோன்று, ஈமானின் பிரதான அங்கம் 'லாஇலாஹ இல்லல்லாஹ்' (வணக்கத்திற் குரியவன் இறைவன் ஒருவனே) என்பதாகும். இந்த வாக்கியத்தினால் தான் ஈமான் இயங்குகிறது. இது இல்லையேல் ஈமானுமில்லை.

சிலர் ஏகத்துவத்தையும், நபித்துவத்தையும் மட்டுமே நம்புகிறார்கள். இவர்கள் வேறு எந்த நன்மையையும் செய்வதில்லை; தீமையிலிருந்து விலகுவதுமில்லை. இவர்களின் ஈமான் கை கால்கள் துண்டிக்கப்பட்டு உள் உறுப்புகள், வெளியுறுப்புகள் எல்லாம் பாதிக்கப்பட்டு, அவல நிலையில் கிடக்கும் மனிதனுக்கு ஒப்பாகும். இந்த நிலையையடைந்து விட்ட மனிதனால் அதிக நாட்கள் உயிரோடிருக்க முடியாது. சில நாட்களிலேயே அவன் உயிர் விடைபெற்று விடும். இது போலவே, மேற்குறிப்பிட்ட சிலரின் நம்பிக்கை (ஈமான்) அதிக நாட்கள் உயிரோடிருக்காது. விரைவிலேயே அந்த ஒளியின் இடத்தை இருள் பற்றிக் கொண்டுவிடும். இவ்வித நிலையிலிருப்பவர்கள் நல்ல நம்பிக்கையோடு இறப்பது துர்லபம். உள்ளத்தில் உறுதி பெற்று, ஒவ்வொரு செயலிலும் பிரதிபலிக்காத நம்பிக்கையுள்ளவர்கள் மரணத் தருவாயில் வெற்றி காண்பது கடினம். இவர்களும் முஸ்லிம்கள் தான். இவ்விருவருக்குமிடையே எத்தனை வித்தியாசம்! பெயரளவில் இருவரும் ஒன்றே. ஆனால் உள்ளே நுழைந்து பார்த்தால் வானத்திற்கும் பூமிக்குமுள்ள வித்தியாசம் காணப்படுகிறதே! மின் மினிப் பூச்சிக்கும் மின்னலுக்குமிடையிலுள்ள வேற்றுமை தோன்றுகிறதே!

சந்தன மரத்தைப் பார்த்து முருங்கை மரம் சொன்னதாம், "நாமிருவரும் ஒரே இனத்தவர்கள்; உன்னைப் போலவே நானும் ஒரு மரம்" என்று.

அதற்குச் சந்தன மரம் பதிலளித்தது. என்ன சூடான பதில்? "ஆமாம், ஆமாம். நான் ஒரு மரம், அதுபோல் நீயும் ஒரு மரம். பெயரளவில் நாமிருவரும் ஒரே இனத்தவர்களே. ஆனால், இப்போது விஷயம் தெரியாது. இலையுதிர் காலம் வரட்டும்! அப்போதுதான் உன் வண்டவாளமெல்லாம் தெரியும். வேகமாய் வீசும் காற்றினால் உன் கால்களும் கைகளும் முறிந்துவிழும்; உன்மேல் ஒட்டிக் கொண்டிருக்கும் இலைகளெல்லாம் மூலைக்கொன்றாய் சிதறிப்பறக்கும்..."



என்ன அழகான பதில்! எத்தனை அர்த்தச் செறிவான விடை!! இதேபோலத்தானிருக்கிறது மேற்குறிப்பிட்டவர்களின் நிலைமை. இதெல்லாம் இப்போது ஒன்றும் தெரியாது. மரணத்தின்போதுதான் இதன் விளைவு கண்ணெதிரில் தோன்றும்.

ஒரு குற்றவாளி, தான் நிரந்தர நரக வேதனை அனுபவிக்க நேரிடும் என்று எதிர்பார்க்கமாட்டான். அவனுக்குத் தன் ஆரோக்கியத்தின் மீது அத்தனை நம்பிக்கை! ஏனெனில், மரணம் திடீரென்று அணுகி விடாது.

அவனிடம் இப்படிக் கூறலாம்: "ஆரோக்கியமானவனுக்கு நேரடியான மரணத் தாக்குதல் ஏற்படாது. அவனை வியாதி முதலில் அணுகும். அதனால், அவன் ஆரோக்கியம் பாதிக்கப்படும். முடிவென்ன? அவனைப் போலவே, குற்றம் புரிபவன் நேரடியான நரகத் தாக்குதலுக்கு ஆளாக மாட்டான். முதலில் அவன் செய்துவந்த பாவங்களின் காரணமாக அவனுடைய மரணப்படுக்கையில் கலவரம் ஏற்படும். இதனால் பயங்கரமான நிலையில் உயிர் துறக்க நேரிடும். அப்போது அவன் உள்ளத்தில் ஈமானே இருக்காது. ஈமானின்றி மாண்டவனின் கதி என்ன? அவன் போய்ச் சேருமிடம் கொடிய நரகம் என்பதில் சந்தேகமும் உண்டா என்ன?"

உடம்புக்கு ஒத்துக் கொள்ளாதவற்றை ஒருவன் உட்கொண்டுவிட்டால், அதனால் அவன் ஆராக்கியம் உடனுக்குடன் பாதிக்கப்பட்டுவிடாது. அவை எல்லாம் வயிற்றில் ஒன்று சேர்ந்துகொண்டு புரட்சியை ஆரம்பிக்கும், இதனால் அவன் ஆரோக்கியம் சின்னாபின்னமாகும். உடல் நிலை பாதிக்கப்பட்டு, அவன் படுத்த படுக்கையாகும் வரை அதை அவன் உணரமாட்டான். முதலில் வியாதி; பின்னர் அது வலுவடையும். அதன் பிறகு, வைத்தியம் பயன் தராது என்னும் நிலைமை ஏற்படும். பிறகு என்ன? மரணம் தான்.

இதே போன்றுதான் குற்றம் புரிபவர்களின் நிலைமையும். ஈமான் என்னும் நம்பிக்கைக்கு ஒவ்வாத தீய செயல்களின் குணம் உடனுக்குடனேயே பிரதிபலித்து விடாது. கொஞ்சம் கொஞ்சமாய்த்தான் அவை தங்கள் குணங்களைக் காட்டும். முதலில் ஈமான் நோய்வாய்ப்பட்டு படுத்த படுக்கையாகும். பின்னர் அதைத் தேற்ற முடியாத நிலை. அப்புறம் மரணம்தான்.

இவ்வுலக வாழ்க்கையில் தோல்வியைக் காணக்கூடாது என்று எண்ணுபவன் முதலில், நஞ்சு கலந்த பொருள்களையும், தன் உடம்புக்கு தீங்கு செய்யும் பொருள்களையும் ஒதுக்கிவிட வேண்டும். அவற்றின் பக்கம் திரும்பியும் பார்க்கக் கூடாது. இதுபோலவே, மறுமை வாழ்க்கையில் தோல்வியைக் காணவிரும்பாதவன், முதலில் நஞ்சுக் கொப்பான பாவத்தைவிட்டு வெருண்டோட வேண்டும்.

அடுத்தபடியாக, ஒருவன் தவறுதலாகவோ, வேண்டுமென்றோ விஷத்தை உட்கொண்டுவிட்டான் என்று வைத்துக் கொள்வோம். அவன் உயிர் அதிக நேரம் தங்காது என்பது திண்ணம். இப்போது அவன் செய்ய வேண்டியது என்ன? உடனுக்குடனே வாந்தியெடுத்து, அந்த நஞ்சை வெளியேற்ற வேண்டும். இது விஷயத்தில் சற்றும் தாமதிக்கக் கூடாது. தாமதித்தால் உயிருக்கு அபாயம்தான்.

இதே போன்று, ஈமானை அழிக்கவல்ல பாவத்தை ஒருவன் செய்துவிட்டால், அவன் அதற்கு உடனுக்குடனேயே பரிகாரம் தேடிக்கொள்ள வேண்டும்; பாவ மன்னிப்புக் கோரி மீட்சியடைய வேண்டும். இல்லையேல் ஈமானுக்கு அபாயம் தான்.

பாவம் என்னும் விஷம், ஈமான் என்னும் மனிதனைக் கொல்லுமுன் பாவ மன்னிப்புக் கோரவேண்டும். ஈமான் மடிந்து போன பிறகு என்ன செய்தாலும் பயனேற்படாது.

விஷத்தை உட்கொண்டவன் தீவிரமான முயற்சி எடுத்துக் கொள்ளாவிட்டாலும் அவ்வளவு கவலைப்பட வேண்டியதில்லை. இழிவான இவ்வுலக வாழ்க்கையைத்தான் அவன் இழக்க நேரிடும். ஆனால், மார்க்க விஷம் என்னும் குற்றத்தைப் புரிபவர்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் பரிகாரம் தேடிக் கொள்ள வேண்டும். ஏனெனில் இந்த



விஷத்தின் விளைவால் இம்மை மட்டுமல்ல, மறுமையும் கிட்டாமற்போய்விடலாம். இதற்குப் பின்னால் அவனுக்காக நரகம் காத்திருக்கும்; கொடிய தண்டனையை அனுபவிக்க நேரிடும். அதுவும் எத்தனை ஆண்டுகளுக்கு? முடிவில்லாத நாட்கள் வரை! ஏனெனில், மறுமை வாழ்க்கைக்கு ஒரு முடிவு கிடையாது.

எனவே, உன் குற்றங்களுக்கு இப்போதே மன்னிப்புத் தேடிக்கொள்! "இறைவா! இனிமேல் நான் பாவமே செய்ய மாட்டேன்!" என்று தீர்மானம் செய்துகொள்! சமயத்தை நழுவ விட்டு விடாதே! வைத்தியர்களெல்லாம் கையை விரித்தும், உதட்டைப் பிதுக்கியும் தங்கள் இயலாமையை வெளியிடும்வரை காத்திருக்காதே!

இத்தகைய நிலைமை ஏற்படாமல் பார்த்துக் கொள்வது உன் கடமை. அப்படி ஏற்பட்டுவிட்டால், பின்னர் எந்த முயற்சியாலும் எவ்விதப் பலனும் ஏற்படாது. அப்போது 'படுகுழியில் விழுந்தவர்கள்' என்று இறைவன் குறிப்பிடுவது உனக்குப் பொருத்தமாக இருக்கும். 'அவர்களின் கழுத்துக்களை நாம் விலங்குகளால் பிணைத்திருக்கிறோம்.' "அவர்களின் பார்வையை நாம் மறைத்து விட்டோம். அவர்கள் எதையும் பார்த்துணர மாட்டார்கள். "முஹம்மதே! நீர் அவர்களுக்கு உபதேசம் செய்வதும், செய்யாதிருப்பதும் ஒன்றுதான்; அவர்கள் உம்மை நம்பமாட்டார்கள்" என்பன போன்ற இறை கருத்துக்களுக்கு நீ ஓர் உதாரணமாக அமைந்து விடுவாய். உன்னை எச்சரிக்கிறேன். செயலாற்றத் தவறிவிடாதே!

இன்னொரு விஷயத்தையும் சொல்லிவிடுகிறேன். அதையும் நினைவில் வைத்துக்கொள்! நீ செய்த குற்றத்தின் காரணமாக நீ இஸ்லாத்தின் வட்டத்தைவிட்டு வெளியேறவில்லை. இப்படிப் பார்க்கும்போது நீ இன்னும் முஸ்லிமாகத் தானிருக்கிறாய் பெயரளவில்.

ஈமான் என்பது ஒரு பொருளல்ல. எழுபது சொச்சம் அங்கங்கொண்டதே அது; அதன் அங்கங்கள் யாவும் ஒன்று சேரும் போதுதான் ஈமான் தன் முழு உருவத்துடன் தோன்றும். நீ பெயரளவில் முஸ்லிமாயிருப்பதால் எவ்விதப் பலனுமில்லை. உன்னிடம் ஈமானின் அசல் உண்டு. அசல் மட்டும் இருந்தால் போதுமா?

இப்போது இன்னும் கொஞ்சம் ஆழமாக ஆராய்வோம். நன்றாகக் கவனித்துப் படி! விஷயம் கொஞ்சம் சிரமமாயிருப்பதால் படிக்காமல் போட்டுவிடாதே! பயன் தரும் மருந்து கசக்கத்தான் செய்யும்.

குர்ஆனை ஆராய்ந்து பார்த்தால் பாவமன்னிப்புக் கோருவது கட்டாயக் கடமை என்று நன்கு விளங்கும். இதோ குர்ஆன் அறை கூவுகிறது. உற்றுக் கவனி.

“விசுவாசிகளே! நீங்கள் அனைவரும் இறைவனிடம் மன்னிப்புக் கோருங்கள்!”

இத்திரு வசனத்திலிருந்து ஒவ்வொரு விசுவாசியும் தன் குற்றத்தை உணர்ந்து இறைவனிடம் பாவமன்னிப்புக் கோருவது அவசியம் என்று தெரிகிறது. இதை யாரும் மறுக்க முடியாது. அகப்பார்வையுடையவர்கள் இதை நன்கு அறிவார்கள். பாவமன்னிப்பின் தாத்பரியம், இறையருளுக்குத் தூரமான பாதையை விட்டு விட்டு இறையருளுக்குச் சமீபமான பாதையில் பிரவேசிப்பதுதான். எனவே, இது கட்டாயக் கடமை என்பதை யாரும் மறுக்க முடியாது.

பாவமன்னிப்புக் கோருவது பொதுவாக எல்லோருக்குமே கடமையாக இருந்தாலும் அதைத் தெளிந்த அறிவுடைய மனிதனிடம் தான் எதிர்பார்க்க முடியும். அவன் தான் தன் குற்றங்களை எண்ணிப் பார்ப்பான்; பாவ மன்னிப்புக் கோருவான்.



# 4. குற்றத்தின் காலம்

ஒரு மனிதன் நாற்பதாவது வயதை வந்தடையும்போது தான் அவனது அறிவு பூரணத்துவம் பெறுகிறது. ஆனால், அவனது அறிவு வளர்ந்து முதிர்ச்சியடையுமுன் அவனுடைய காம உணர்ச்சியும், தீய குணங்களும் வளர்ந்து முதிர்ச்சியடைந்து விடுகின்றன. இது மட்டுமல்ல. மனிதனைத் தீய வழிகளில் நடத்திச் செல்லும் குணங்கள் அனைத்தும் அறிவொளியின் வளர்ச்சிக்கு முன்பே வளர்ச்சியுற்று, உச்சியையடைந்து விடுகின்றன.

மன உணர்ச்சியையும் காம உணர்ச்சியையும் ஷைத்தானின் சைனியங்கள் என்று குறிப்பிடலாம். அறிவொளியையும், ஞானச் சுடரையும் அமரரின் சைனியம் என்று குறிப்பிடலாம். இவ்விரு படைகளுக்கிடையில் சில வேளை கடுமையான போர் மூளும். இவ்விரு சைனியங்களும் ஒன்றுக்கொன்று சளைக்காமல் போர் புரியும். இரவையும் பகலையும் போன்று, இருளையும் ஒளியையும் போன்று இவர்களின் யுத்தம் கனவேகத்துடன் நடைபெறும். இவற்றில் ஒன்று வெற்றி காணும் போது மற்றொன்று அதனிடம் சரணாகதியடையும்.

மனிதன் வாலிபத்தை அடையும்போது அவன் அறிவு முதிர்ச்சியுற்றிராது. ஏனெனில், 40 வயதுக்கு பிறகல்லவா அறிவு முதிர்ச்சி பெறுகிறது? எனவே, காமப்படை அவன் உள்ளத்தைக் கைப்பற்றிக் கொண்டு விடும். அது தன் சர்வாதிகாரத்தை அவனுடைய ஒவ்வொரு அங்கத்திலும் செலுத்தும். அதற்கொப்ப அவனும் கூத்தாடுவான். இத்தகைய நிலையில் அவன் சில நாட்கள் இச்சைக்குக் கட்டுப்பட்டு நடந்துவிட்டால், பின்னர் அவனால் இந்த நிலைமையிலிருந்து மீளவே முடியாது.

அவனின் உள்ளப் பீடத்தில் இப்படி காம மன்னனின் ஆட்சி நடந்து கொண்டிருக்கும்போது, அறிவு மெதுவாகத் தலைதூக்க ஆரம்பிக்கும். இந்த அறிவைத்தான் ‘இறைபடை’ என்று சிலர் குறிப்பிடுகிறார்கள். இப்படை, தன் குடிமக்களை எதிரியின் பிடியிலிருந்து மீட்கப் பெரிதும் பிரயத்தனப்படும். உடனுக்குடனேயே எதிரியைக் கவிழ்த்திப் பீடத்தை வசப்படுத்த அது முனைந்து வரத் தவறாது.

அறிவு என்பது இப்படையினால் எதிரியை முறியடிக்க முடியாவிட்டாலும் எதிரியின் கட்டை தளர்த்திவிடும். அவன் அதிகாரம் பன்மடங்காய்ப் பெருகிவிடும்.

இந்தச் சர்வாதிகாரியின் ஆட்சியை எதிர்த்து நின்று அவனது கட்டளைக்குச் சிரம் பணியாமல் விறைத்து நின்று. அவன் ஆட்சியைக் கவிழ்ப்பது தான் 'தௌபா'- பாவமன்னிப்பு.

இப்படிக் காம மன்னனின் அதிகாரத்தை உதறி எறிந்துவிட்டு, அறிவொளியின் உதவியால் நேரிய பாதையைப் பார்த்து அதில் பிரவேசிப்பது ஒவ்வொரு மனிதனுக்கும் கடமையே. அவன் கூரிய புத்தியுள்ள வனாயிருந்தாலும் சரி, மந்தபுத்தி படைத்தவனாயிருந்தாலும் சரி. என்ன எண்ணுகிறாய்? "இப்படிப் பாவமன்னிப்புக் கோருவது ஆதம் (அலை) அவர்களுக்குத்தான் கடமையாக இருந்தது. அதனால் அவர்கள் பாவமன்னிப்புக் கோரினார்கள். அந்தக் கடமை நமக்கு உண்டா என்ன?" என்றுதானே எண்ணுகிறாய்?

பாவமன்னிப்புக் கோருவது ஆதம் (அலை) அவர்களுக்கு கடமையாக்கப்படவில்லை. மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவனுக்கும் அது கடமையே. இது இறைவனின் தீர்ப்பு. இக்கடமையை இறைவனே மாற்றினாலன்றி, இது எக்காலமும் மாறாது. மாறும் என்று எதிர்பார்க்கவும் முடியாது.

எனவே, காபிராயிருந்தவன் முஸ்லிமாகும்போது, அவன் காபிராயிருந்தது குறித்து பாவமன்னிப்புக் கோர வேண்டும். முஸ்லிம்களான பெற்றோருக்குப் பிறந்த ஒருவன் பருவத்தைவந்தடையும்போது அவன் இத்தனை நாட்களாக இஸ்லாத்தைப் பற்றி அறியாமலிருந்தது குறித்து குற்ற நிவர்த்தி செய்துகொள்ள வேண்டும். ஏனெனில், அவன் பெற்றோர் இஸ்லாத்தைப் பற்றி அறிந்திருப்பதால் அவனுக்கு எவ்விதப்பலனுமில்லை. அவன் அறிவதால் அவன் தன்னுடைய கவனத்தை நேரிய பாதையில் செலுத்தலாம்.

மேலே குறிப்பிட்ட வகைகள் அனைத்தும் பாவ மன்னிப்பே. இதிலிருந்து வெளிப்படும் கருத்து இதுதான். பாவமன்னிப்புக் கோருவது கட்டாயக் கடமையே. அதை விட்டு எந்த மனிதனும் விலக முடியாது.



நபி ஆதம் (அலை) அவர்களால் எப்படிப் பாவ மன்னிப்புக் கோராமலிருக்க முடியவில்லையோ அப்படியே அவர்களின் சந்ததியிலுதித்த எந்த மனிதனாலும் பாவமன்னிப்புக் கோராமலிருக்க முடியாது. ஏனெனில் தந்தையின் இயற்கை இடம் தராத ஒன்றுக்கு, மைந்தனின் இயற்கை எப்படி இடந்தரும்?

மானிடனாய்ப் பிறந்த எவனும் முழுக்க முழுக்க குற்ற மற்றவனாய் இருக்க முடியாது. ஒவ்வொரு மனிதனும் குறைந்தது ஏதேனும் ஒரு குற்றத்தைச் செய்து தானிருப்பான். உலகை உய்விக்க வந்த உத்தமர்கள், நல்வழி காட்ட வந்த நபிமார்கள் முதலியோரும் கூட இந்த நியதிக்கு விலக்கில்லை என்றால் பார்த்துக் கொள்ள வேண்டியதுதான். அவர்கள் பெருங்குற்றங்களைச் செய்திரா விட்டாலும், சிறிய குற்றங்களையாவது கண்டிப்பாய் செய்திருப்பார்கள். நபிமார்கள் இழைத்த குற்றங்கள், அவற்றிற்கு அவர்கள் செய்த பாவமன்னிப்புகள் எல்லாம் குர்ஆனிலும் ஹதீதிலுமாய்க் காணப்படுகின்றன. நபிமார்களிலெல்லாம் சிறந்த முஹம்மது நபி (ஸல்) அவர்களைப் பார்ப்போம். அவர்களாவது குற்றம் செய்யாதிருந்தார்களா என்று ஆராய்வோம்.

அண்ணல் நபியவர்கள் என்ன சொன்னார்கள்? "நான் தினம் ஒன்றுக்கு 'ஆண்டவனே! என் குற்றத்தை மன்னித் தருள்!' என்று எழுபது தடவை இறைவனிடம் பாவ மன்னிப் புக் கோருகிறேன்" என்றுதான் அவர்கள் கூறினார்கள்.

இறைவனும் அவர்களின் வேண்டுகோளை அங்கீகரித்தான்: "முஹம்மதே! உம்முடைய முந்திய, பிந்திய பாவங்களனைத்தையும் நான் மன்னித்து விட்டேன்" என்று செய்தியனுப்பினான்.

இதிலிருந்து அண்ணல் நபி (ஸல்) அவர்களும் குற்றம் அது எவ்வளவு சிறிய குற்றமானாலும் சரியே - புரிந்திருக் கிறார்கள் என்று தெளிவாகிறது. நபியவர்களே இப்படி யானால், சாதாரண மானிடனைப் பற்றிக் கேட்கவும் வேண்டுமா?

மனிதன் பிராயத்தை எட்டிப் பிடிக்கும்போது அவனைத் தீய குணங்கள் எட்டிப் பிடித்துவிடுவது சகஜம்; அதனால் இந்த வயதில் தவறான பாதையில் பிரவேசிக்

காமலிருப்பது சாத்தியமில்லை. ஒரு கண்ணாடிக் கெதிரில் நின்று கொண்டு அதன் மேல் மூச்சுவிட்டால் அதில் புகை படிவதுபோல், அவன் செய்யும் தீயசெயல் ஒவ்வொன்றினாலும் அவனது உள்ளக் கண்ணாடியில் புகை படிய ஆரம்பிக்கும். கண்ணாடியில் படிந்த அப்புகை வலுப்பெற்றால் அழுக்காக மாறுவது போல், உள்ளத்தில் படியும் புகை நாளடைவில் நீங்காத கறையாக மாறிவிடும். அதையகற்றி உள்ளத்தைத் துலங்க வைப்பது சாத்திய மில்லாமலும் போகலாம்.

இந்த நிலையில் அவன் என்ன செய்வான்? தன் உள்ளக் கறையை எப்படி அகற்றுவான்? அகற்றுவதற்கு வழியுண்டா?.... மேற்கண்ட உதாரணத்தை வைத்தே ஆராய்வோம். அந்தக் கண்ணாடியின் கறை, அதன் மேல் மூச்சுவிடாமல் இருந்தால் மட்டும் நீங்கிவிடாது. அதில் படிந்துள்ள கறையை அகற்றுவதற்குத் தனி முயற்சியும் எடுத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் கண்ணாடியில் முகம் தெரியும்.

இதே போன்று உள்ளம் தெளிவடைய வேண்டும் என்று விரும்புபவர்கள், மேற்கொண்டு பாவங்கள் செய்யாமலிருந்து விட்டால் மட்டும் போதாது. ஏற்கனவே அதில் படிந்திருந்த பாசியை அகற்றுவதற்கும் தனி முயற்சி எடுத்துக் கொண்டாக வேண்டும்.

தீய செயல்களைச் செய்யும் மனிதனின் உள்ளம் இருளடைவது போல், நன்மையைச் செய்யும் மனிதனின் உள்ளம் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும். இந்த ஒளியின் உதவியால் முன்னர் குடிகொண்டிருந்த இருளை அடித்து விரட்டலாம்.

இதைத்தான், "தீமைக்குப்பின், அதை அழிக்கவல்ல நன்மையைச் செய்யுங்கள்!" என்னும் திரு நபி (ஸல்) அவர்களின் கருத்து தெளிவுபடுத்துகிறது. எனவே எந்த மனிதனாலும், தன் உளக் கறையை நன்மை செய்வதை விடுத்து வேறு எந்த முறையாலும் அகற்ற முடியாது.

மேலே நாம் விவரித்தவையாவும் முன்னர் தெளிவா யிருந்து பின்னர் இருளடைந்த உள்ளத்தைப் பற்றியவையே. ஆரம்பத்திலேயே இருண்டு கிடந்த உள்ளத்தைத் தெளிவுபடுத்துவது இலேசான காரியமல்ல. அதை இங்கு விவரிப்பது சாத்தியமில்லை. ஏனெனில் மரக்கட்டையைக்



கண்ணாடியாக்கும் வேலை அழுக்கடைந்த கண்ணாடியைச் சுத்தம் செய்யும் வேலையைப் போன்றதல்ல.

இப்போது நீ கேட்கலாம்: "இவ்வாறு உள்ளத்தைத் தெளிவுபடுத்துவது கடமை என்பதற்கு ஆதாரமில்லை. தெளிவுபடுத்துவது நல்லது; அவ்வளவுதான். எனவே, உளத் தெளிவடைவதைக் கடமை என்று சொல்ல முடியாது."

நான் சொல்வதைக் கொஞ்சம் கவனித்துக் கேள்! ஆம், நீ கூறுவதும் ஒரு வகையில் சரியானதுதான். இத்தகைய முறையில் உள்ளத்தைத் தெளிவுபடுத்துவது எல்லாருக்கும் கடமையல்ல. இவ்விதமான தெளிவை விரும்புபவர்களுக்கு இது கடமையாகும்.

உதாரணமாக: "கண், காது, கால், கை முதலியவை மனிதன் உண்டாவதற்கு நிபந்தனைகள்" என்று ஒருவன் கூறுவதாக வைத்துக் கொள்! இந்த வாக்கியம் நேர்மையானது தானா? "தவறானது" என்றுதான் நீ சொல்வாய். ஏனெனில், கண், காது, கை, கால் முதலியவை இல்லாத மனிதனுமுண்டு என்று உனக்குத் தெரியும். ஆனால் அதைக் கூறியவன் இப்படிப் பொருள் கொள்ளவில்லை. பொதுவாக மனிதன் உண்டாவதற்கு இவை நிபந்தனைகளல்ல. பரிபூரண மனிதன் உண்டாவதற்குத்தான் இவை நிபந்தனைகள்.

இதே போன்று உள்ளத்தைத் தெளிவாக்குவது பொதுவாக எல்லோருக்கும் கடமையல்ல. அப்படி அது கடமையாயிருப்பின், பொதுமக்களால் செயலாற்ற முடியாது. உள்ளம் கண்ணாடி போல் பிரகாசிக்க வேண்டும் என்று விரும்புபவர்களுக்குத்தான் அது கடமை.

இக்கருத்துக்காதாரமாக ஒரு சம்பவம்:

நபி ஈஸா (அலை) அவர்கள் ஒருநாள் உறங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் தம் தலைக்கு ஒரு கல்லை வைத்துக் கொண்டு படுத்திருந்தார்கள்.

இப்லீஸ் வந்தான், "என்ன விபரீதம்! நீர் உலகப் பற்றையே அறுத்தெறிந்தவர் என்று கேள்விப்பட்டேன்!" என்றான்.

"ஆமாம். அதற்கென்ன உலகப்பற்றை அறுத்தெறிந்தவர் கள் உறங்கக் கூடாதா என்ன?" என்று ஈஸா (அலை) அவர்கள் கேட்டார்கள்.

அவன் சிரித்தான், "நீர் உறங்குவதை நான் குறிப்பிட வில்லை. அதோ, தலைக்கடியில் வைத்திருக்கிறீரே ஒரு கல், அதைத்தான் நான் குறிப்பிடுகிறேன். உலகப்பற்றை விட்டுயர்ந்தவர், உலகிலுள்ள கல்லை மட்டும் உபயோகிக்கலாமோ?" என்று கிண்டலாகக் கேட்டான்.

அப்போது ஈஸா (அலை) அவர்கள் என்ன செய்திருப் பார்கள் என்று எண்ணுகிறாய்? கல்லில் தலையை வைத்து உறங்குவது குற்றமல்ல என்பதும் வெறும் தரையில் படுப்பது கடமையல்ல என்பதும் அவர்கள் அறியாத விஷயங்களல்ல. இருந்தும், அவர்கள் அக்கல்லை வீசி எறிந்து விட்டு வெறும் தரையில் படுத்தார்கள். அப்படி அவர்கள் விட்டெறிந்தது தான் பாவமன்னிப்பு.

இன்னுமொரு சம்பவம்,

ஒரு நாள் அபூபக்கர் (ரலி) அவர்கள் கொஞ்சம் பாலருந்தினார்கள். குடித்த பிறகுதான் அது குடிக்கத் தகாதது என்பதை உணர்ந்தார்கள். குடித்த பாலை வெளியேற்றிவிட முனைந்தார்கள். தம் விரல்களிரண்டையும் தொண்டைக்குள் திணித்து வாந்தி எடுக்க முனைந்தார்கள். ஆனால், வாந்தி வரவில்லை. மீண்டும் மீண்டும் அதே முயற்சியை அவர்கள் செய்தார்கள். இதனால் அவர்களின் உயிருக்கே ஆபத்து ஏற்படும் போல் ஆகிவிட்டது.

அவர்கள் இத்துணை தூரம் ஏன் கடப்பட வேண்டும்? அறியாமல் உட்கொண்டு விட்டதால் குற்றமில்லை என்று அவர்களுக்குத் தெரியாதா அல்லது தொண்டைக்குள் விரலைத் திணித்து வாந்தி எடுக்க முயல்வது கடமையல்ல என்றுதான் அவர்களுக்குத் தெரியாதா?

இதையெல்லாம் பார்க்கும்போது இதில் ஏதோ மர்மம் இருக்கிறது என்று தெரிகிறதல்லவா? அந்த ரகசியம் என்ன என்று விவரிக்க நான் தயாராயில்லை. மெய்ஞ்ஞானிகளைத் தவிர்த்து வேறு யாருக்கும் அந்த மர்மம் தெரியாது.

உன்னை மீண்டும் எச்சரிக்கிறேன். உலக வாழ்க்கையில் அறிவையிழந்துவிடாதே! இறைவனை மறந்து திரியும் மூடர்களின் காற்றும் உன் மீது படாதவாறு பார்த்துக் கொள்! இவையாவும் ரகசியங்கள். அவற்றின் வாடையை நீ முகர்ந்துவிட்டாலும், உனக்கு எத்தனையோ அதிசயங்கள் தோன்ற ஆரம்பித்துவிடும். இறைநெறியில் நடக்கும்



ஒவ்வொருமனிதனுக்கும் அவனது ஒவ்வொரு மூச்சிற்கும் பாவமன்னிப்புக் கோருவது கடமை என்றும், ஒரு மனிதன் நபி நூஹ் (அலை) அவர்களைப் போன்று நீண்ட ஆயுளைப் பெற்றிருந்தாலும், அவன் பாவமன்னிப்பை ஒத்திப் போடக்கூடாது என்றும் உனக்குத் தெளிவுறத் தெரிந்து விடும்.

அபூ சுலைமான் தாரானீ (ரஹ்) அவர்கள் கூறினார்கள்:

"ஒரு மனிதன் தன் கடந்த காலம் தவறான முறையில் கழிந்தது குறித்து அழவேண்டுமாயின், அவன் ஆயுள் பூராவும் அழவேண்டும்."

அபூசுலைமான் இப்படிக் கூறியதில் வியப்பில்லை. ஏனெனில், அறிவுடையான் ஒருவன் தன்னிடமுள்ள வைரக்கல் ஒன்றை அதிலிருந்து எவ்விதப் பலனும் அடையாமல் தவற விட்டுவிட்டானாயின் அவன் அது குறித்து கண்டிப்பாய் வருந்தியழுவான். அந்த வைரம் தவறிப் போவதற்குக் காரணம் தான்தான் என்பதை அவன் உணரும் போது அவன் வருத்தமும், அழுகையும் பன்மடங்காகும்.

மனிதனின் வாழ்க்கையில் ஒவ்வொரு மணியும், ஏன், ஒவ்வொரு மூச்சும் விலை மதிக்கவொண்ணாத ஒவ்வொரு வைரக்கல்லுக்கு ஒப்பாகும். அவற்றிற்கு, உன்னை நிரந்தர ஆனந்தத்தில் கொண்டு சேர்க்கும் ஆற்றலுண்டு; நிரந்தர வேதனையிலிருந்து உன்னைக் காப்பாற்றும் சக்தி உண்டு. இதைவிட உயர்ந்த ஒரு வைரம் இருக்கவா போகிறது? அதை நேர்மையாக நீ செலவிட்டால் இன்பமடைவாய்; தீய வழியில் செலவிட்டால் படு குழியில் விழுவாய்.

இவ்வாறு தவறிப்போன உன் வைரங்களைப் பற்றி நீ சிந்தித்து வருந்தவில்லையாயின், அதற்குக் காரணம் உன் அறியாமையே. உலகிலுள்ள எல்லாப் பிணிகளையும் விடக் கொடியது அறியாமையே. ஏனெனில், இப்பிணி கொண்டவன், தான் பிணி கொண்டவன் என்று ஒப்புக் கொள்ளமாட்டான்.

இதையெல்லாம் உணராது-உணர விரும்பாது மக்கள் உறங்குகிறார்கள். அவர்கள் எப்போது துயிலெழுவார்கள் என்று நிச்சயமாய்ச் சொல்ல முடியாது. அவர்கள் துயிலெழாமலேயே இருந்து விடவும் செய்யலாம்.

ஆனால் ஒன்று மட்டும் சர்வ நிச்சயம். எது எப்படி யானாலும் அவர்கள் இறந்தால் எல்லா உண்மைகளையும் உணர்ந்து கொள்வார்கள். அவர்களின் வியாதியும் அதனால் ஏற்பட்ட விளைவுகளும் அவர்களுக்கு எடுத்துக் காட்டப்படும்.

மெய்ஞ்ஞானிகளில் சிலர் கூறினார்கள்.

“ஒரு மனிதன் மரணப் படுக்கையில் கிடக்கும்போது இஸ்ராயீல் (அலைஹி) அவர்கள் வருவார்கள். படுக்கையில் கிடப்பவனைப் பார்ப்பார்கள். ‘உன் ஆயுள் இன்னும் ஒரே விநாடியில் முடிவடைகிறது. அதற்கு மேல் உன் உயிர் கால் விநாடியும் தங்காது’ என்பார்கள். படுக்கையில் கிடப்பவன் பெருமூச்சு விடுவான். ‘அந்த ஒரு விநாடியோடு இன்னொரு விநாடியையும் சேர்த்து விடுங்களேன். அதற்குள் இறைவனிடம் பாவமன்னிப்புக் கோரி, நல்லவனாகி விடுகிறேன்’ என்று துடிப்பான்; கதறுவான். ஆனால், அதெல்லாம் அப்போது யார் காதில் விழப்போகிறது? இதைத்தான், இறைவன், ‘அவர்களின் விருப்பம் தடை செய்யப்படும்’ என்று கூறுகிறான். மேலும் சொல்கிறான்: ‘ஒவ்வொரு மனிதனும் அவனுக்கு மரணம் சம்பவிக்கும் போது சொல்வான். இறைவா! என் உயிரைச் சற்று நேரம் வரை கைப்பற்றாமலிருக்க மாட்டாயா? நன்மையான காரியம் செய்து நல்லவனாகிவிடுகிறேன்.’ ஆனால், “குறிப்பிட்ட காலவரையறை வரும்போது இறைவன் எள்ளளவும் பிற்படுத்தமாட்டான். அவன் நீங்கள் செய்பவற்றை எல்லாம் நன்கு அறிந்தவன்.”இவ்வாறு குர்ஆன் கூறுகிறது.

மற்றும் சில மேதைகள் கூறினார்கள்.

மரணம் அணுகும்போது ஒருவன் இஸ்ராயீலிடம் கேட்பான்: “என் உயிரை இன்னும் ஒரே ஒரு நாளைக்கு விட்டு வையுங்கள்! அதற்குள் நான் இறைவனிடம் குற்ற நிவர்த்தி செய்து கொண்டு விடுகிறேன்.”

அதற்கு உடனே பதில் கிடைக்கும்: “உள்ள நாட்களை எல்லாம் நீ வீணாய்ப் போக்கிவிட்டாய். இனிமேல் உனக்குச் சலுகை கிடையாது.”

“அப்படியானால் ஒரு மணி நேரமாவது அவகாசம் கொடுக்கலாகாதா? என்று அவன் கேட்பான்.”



“அதுவும் முடியாது!” என்று சுடச் சுடப் பதில் வரும். அதன் பிறகு அவன் பாவ மன்னிப்புக் கோர முடியாது. கோரினாலும் அங்கீகரிக்கப்படாது. பின்னர், அவன் உயிர் உடலை விட்டுப் பிரிந்தகலும்.

இத்தகையவர்களைக் குறித்துத்தான் இறைவன், “மரணம் வரும்வரை பாவங்களையே செய்து கொண்டிருப் பவர்களுக்குப் பாவ மன்னிப்புக் கிடையாது” என்று கூறுகிறான்.

மீண்டும் கூறுகிறான்: “ஏதோ தெரியாத்தனமாய்க் குற்றம் புரிந்துவிட்டு. பின்னர் பாவ மன்னிப்புக் கோருபவர்களை நான் மன்னித்துவிட்டேன்.”

“தீமைக்குப் பின், அதை அழிக்கவல்ல நன்மையைச் செய்யுங்கள்!” என்னும் நபிமொழியை நினைவிலிருத்திக் கொள்!

அறிஞர் லுக்மானுல் ஹகீம் (ரஹ்) அவர்கள் தம் மைந்தனுக்குக் கீழ்கண்டவாறு உபதேசம் செய்தார்கள்:

“மகனே! பாவமன்னிப்புக் கோருவதை ஒத்திப் போடாதே! அப்படி ஒத்திப் போடுபவன் குறிப்பாக இரண்டு அபாயங்களுக்கு ஆளாவான்.

1. அவனது தீய செயல்களின் பிரதிபிம்பமாக அவன் உள்ளம் இருளடைந்துவிடும். அந்த இருள் விரைவில் நீங்காத-நீக்க முடியாத கறையாக மாறிவிடும்.

2. அவனை மரணமும் வியாதியும் அண்டிவிடும், அப்போது அவனுக்குத் தன் உள்ளத்தைத் தேய்த்துக் கழுவிக் கறையகற்றுவதற்கு அவகாசம் கிடையாது.

முன்னோரில் அநேகர் படுகுழியில் விழுந்ததெல்லாம் பாவமன்னிப்பை ஒத்திப் போட்ட காரணத்தினால்தான் என்பது நபி (ஸல்) அவர்களின் உயர் கருத்து.

உள்ளமும், வயதும் இறைவன் தன் அடியானிடம் ஒப்படைத்த பொருள்கள். இவ்விரண்டையும் முறையோடு பயன்படுத்த வேண்டியது ஒவ்வொரு மனிதனுக்கும் கடமையாகும். முறை தவறி உபயோகிப்பவன் இறைவனிடம் பதில் கூறியாக வேண்டும்.

சில ஞானிகள் சொன்னார்கள்:

"இறைவன் தன் அடியாளிடம் இரண்டு நேரங்களில் பேசுகிறான். ஒன்று, அவன் பிறக்கும் நேரம். அப்பொழுது இறைவன் கூறுவான். 'உன்னை உலகில் உதிக்கச் செய்துவிட்டேன். உன்னிடம் உன் ஆயுளையும் ஒப்படைத்துவிட்டேன். அதை நீ எப்படி செலவு செய்யப்போகிறாய் என்று நான் கண்காணிப்பேன்.' மற்றொன்று இறக்கும் நேரம். அப்போது இறைவன், 'நான் உன்னிடம் ஒப்படைத்ததை எப்படிச் செலவு செய்தாய்? நான் கூறியதை நிறைவேற்றினாயா?' என்று கேட்பான்."

இக்கருத்தைத்தான், "உங்கள் வாக்கை நிறைவேற்றுங்கள்! என் வாக்கை நிறைவேற்றுகிறேன்" என்னும் இறைவசனம் எடுத்துரைக்கிறது.

நேர்மையானவர்களைக் குர்ஆன், "அவர்கள் தங்கள் வாக்குகளைக் காப்பாற்றக் கூடியவர்கள்" என்றும், "அவர்கள் இறைவனிடம் செய்த உடன்படிக்கையை முறிக்கமாட்டார்கள். அவர்கள் இறைவனுக்குக் கொடுத்த உறுதிமொழியை நிறைவேற்றத் தவற மாட்டார்கள்" என்றும் குறிப்பிடுகிறது.

பாவமன்னிப்பிற்குரிய நிபந்தனைகளை மேலே நான் விவரித்து விட்டேன். அந்த நிபந்தனைகள் யாவும் ஒன்று சேரும்போது நீ கேட்கும் பாவமன்னிப்புக் கண்டிப்பாய் அங்கீகரிக்கப்படும். இதில் எள்ளளவும் சந்தேகம் கிடையாது.

மனிதனின் உள்ளம் பரிசுத்தமானது; இறைவனால் ஒப்புக் கொள்ளப்பட்டது. அதற்கு இறைவனைக் காணும் பேறு கட்டாயம் உண்டு. "ஒவ்வொரு குழந்தையும் இயற்கையை யொட்டி பரிசுத்தமாகத்தான் பிறக்கிறது" என்னும் நபி (ஸல்) அவர்கள் கருத்தும் இதை நிரூபிக்கிறது. ஆனால் அப்பரிசுத்தத் தன்மையில், அவன் புரியும் பாவச் செயல்களால் துருவேறுகிறது. எனினும் அத்துருவையகற்றி அதற்கு மீண்டும் பரிசுத்தத் தன்மையளிக்கும் ஆற்றல் நன்மையான காரியங்களுக்குத்தான் உண்டு என்று அறிஞர்கள் கூறுகிறார்கள்.

இரவின் இருளுக்குப் பகலின் ஒளியை எதிர்க்கும் ஆற்றல் இல்லாதது போன்று, துணியின் அழுக்குக்குச் சவர்க்கார நுரையை எதிர்க்கும் சக்தி இல்லாததுபோல பாவ இருளுக்கு நன்மையொளியை எதிர்க்கும் ஆற்றல் கிடையாது.



அழுக்கடைந்த துணியை-பார்க்க அருவருப்பை யூட்டும் ஆடையை அரசன் ஏற்றுக் கொள்ளமாட்டான்; அதற்குத் தன்னைக் காணும் அருளைக் கொடுக்கமாட்டான்.

துணியைக் கீழ்த்தரமான வேலைகளில் உபயோகப் படுத்தினால் அது அழுக்கடைந்துவிடும். அந்த அழுக்கைச் சவர்க்காரத்தாலும், வெந்நீராலுமே அகற்ற முடியும். இது போலவே, உள்ளத்தைக் காம உணர்ச்சிகளில் உபயோகப்படுத்தினால் அது அழுக்கடைந்துவிடும். அந்த அழுக்கை கைசேதத்தினால் பொங்கிவரும் சூடான கண்ணீரின் உதவியால் தான் அகற்ற முடியும். பரிசுத்தமான துணி அனைவராலும் விரும்பத்தக்கதாய் இருப்பதுபோல் இருளில்லாத, தூய்மையான உள்ளம் இறைவனிடம் அங்கீகாரம் பெறும்.

உனக்கு மீண்டும் சொல்கிறேன், உன் உள்ளத்தைத் தெளிவுபடுத்திக்கொள்! அதில் தீய குணங்களின் சாயல் படியாதவாறு பார்த்துக்கொள்!

இறைவன் கூறுகிறான்:

"விசுவாசிகள் வெற்றியடைந்து விட்டார்கள்."

"உள்ளத்தைத் தூய்மைப்படுத்தியவன் வெற்றி கண்டு விட்டான்."

இவ்வசனங்களில் பளிச்சிடும் கருத்துக்களைப் பற்றிக் கொள்! ஒரு விஷயத்தை நீ என்றும் மறந்துவிடாதே! தீய செயலால் உள்ளம் இருள்கிறது. நற்செயலால் உள்ளம் ஒளிவிடுகிறது. இவை இரண்டும் ஒரே இடத்தில் சேர முடியாது.

இதை ஒருவன் நன்கு உணரவில்லையாயின் அவன் மதம் என்னும் கனியின் மேல் தோலைமட்டுமே சுவைத்த வனாவான். 'முஸ்லிம்' என்னும் பெயரைத் தவிர அவனிடம் வேறு எதுவுமில்லை. அவன் உள்ளத்திற்கும், மார்க்கத் தத்துவங்களுக்குமிடையில் கனத்ததொரு திரை விழுந்துவிடும். எனவே, அவன் மார்க்கத்தின் ஆழ்ந்த கருத்துக்களை அறிவது சாத்தியமில்லை.

"பாவமன்னிப்பிற்குரிய நிபந்தனைகள் எல்லாம் ஒன்று சேர்ந்திருந்தாலும் அது இறைவனால் ஒப்புக் கொள்ளப்படுவது சிரமமே. ஏனெனில் பாவத்தை

மன்னிப்பது அவன் உரிமை. அவன் நாடினால் மட்டுமே மன்னிக்கலாம். மன்னித்தே தீர வேண்டும் என்று யாரும் அவனை வற்புறுத்த முடியாது. எனவே, பாவ மன்னிப்பிற்குரிய அங்கங்கள் ஒன்று சேர்ந்து விட்டாலும் அந்தப் பாவமன்னிப்பு ஏற்றுக்கொள்ளப்படும் என்று சொல்வதற்கில்லை" என்று சிலர் கூறுகிறார்கள்.

நீயும் அப்படித்தானே எண்ணுகிறாய்? அப்படியானால் இதோ விடை தருகிறேன். அதைக் கருத்தில் பதித்துக்கொள்!

இவ்வாறு கூறுவது மகத்தான தவறு. இப்படிச் சொல்வது "சூரியன் உதயமாகியும் பொழுது விடியவில்லை" என்று சொல்வதற்கொப்பாகும். சவர்க்காரம் போட்டு அலசிய பிறகும் துணியில் அழுக்கு இருக்குமா என்ன? இருக்காது.

ஆனால், பாவமன்னிப்புக் கோரும் மனப்பான்மை பொதுவாக மக்களிடம் காணப்படவில்லை. இதுவரை நான் விவரித்து வந்தவை கூரிய புத்தியுள்ளவனுக்குப் போதும். இவற்றைக் கொண்டு அவன் பாவமன்னிப்பின் அந்தரங்கம், அதன் முக்கியத்துவம், அதனால் ஏற்படும் நன்மை முதலிய யாவற்றையும் அறிந்து கொள்வான். எனினும், குர்ஆனிலிருந்தும் ஹதீதிலிருந்தும் வேறு ஆதாரங்களைத் தருகிறேன். ஏனெனில் குர்ஆனும், ஹதீதும் ஏற்றுக் கொள்ளாத கருத்துக்கள் யாவும் குப்பையில் போடத் தகுந்தவை. அவற்றை எடுத்து நடப்பது அறிவுள்ள எந்த மனிதனுக்கும் அழகல்ல.

இறைவன் அருள்கின்றான்:

"இறைவன் தன் அடியானின் பாவமன்னிப்பை ஏற்றுக் கொள்வான்."

மீண்டும் நவில்கிறான்:

"இறைவன் குற்றங்களை மன்னிப்பவன். பாவ மன்னிப்பை ஏற்பவன்."

இவ்விரு திருவசனங்களிலிருந்து நீ அறிந்து கொள்வது என்ன? ஆமாம். மனிதனின் பாவமன்னிப்பு இறைவனால் அங்கீகரிக்கப்படுகிறது என்று நீ அறிந்து கொண்டாய்; இறைவன் மன்னிப்பவனாயிருப்பதால், அவன் உன் குற்றங்களைக் கட்டாயம் மன்னிப்பான் என்று உணர்ந்து கொண்டாய்.



சரி, இப்போது திரு நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்: "இறைவன், தன் அடியான் பாவமன்னிப்புக் கோருவதைக் கண்டு மகிழ்கிறான்." இதில், இறைவன் மகிழ்கிறான் என்று குறிப்பிடப்படுகிறது. ஆகவே, பாவமன்னிப்பை அவன் ஏற்றுக் கொள்வான் என்பது திண்ணம். ஏனெனில், மகிழ்ச்சியடைவது அங்கீகாரத்திற்குப் பிறகு தான் ஏற்பட முடியும்.

திரு நபியவர்கள் மீண்டும் சொன்னார்கள்: "இறைவன் தன்னிடம் பாவமன்னிப்புக் கோரும் அடியானைக் கை நீட்டி வரவேற்கிறான்." கரம் நீட்டி வரவேற்பவனது வேண்டுகோளை பாவமன்னிப்பை நிராகரிப்பானா என்ன?

திருநபியவர்கள் மீண்டும் கூறினார்கள்: "உங்கள் பாவங்கள் மலையைப் போன்றிருந்தாலும் நீங்கள் இறைவனிடம் பாவமன்னிப்புக் கோரினால், இறைவன் உங்களை மன்னித்தருள்வான்."

ஒருநாள் நபி (ஸல்) அவர்கள் தம் நண்பர்களிடம் கூறினார்கள்: "ஒரு மனிதன் நிறையப் பாவங்கள் செய்தான்; அளவுக்கதிகமாய்க் குற்றங்கள் புரிந்தான். இருந்தும் அவன் இறையருளுக்குப் பாத்திரமாகிவிட்டான்..."

"அதெப்படி முடியும்? பாவியானவன் இறையருளை எப்படிப் பெற முடியும்?" என்று நபி (ஸல்) அவர்களின் தோழர்கள் கேட்டார்கள். கேட்கவேண்டிய கேள்விதானே!

"அவன் குற்றங்கள் செய்தான் என்பது உண்மை தான். ஆனால், அவன் குற்றம் செய்வதையே குறிக்கோளாய்க் கொண்டிருக்கவில்லை. தன் பாவங்களுக்காக வருந்தி, கண்ணீர் விட்டுக் கதறினான். பாவமன்னிப்புப் பெறுவதையே அவன் குறிக்கோளாய்க் கொண்டிருந்தான். அந்தக் குறிக்கோளையடைய அவன் இரவுபகலாய்ப் பாடுபட்டான் அப்படியிருக்க அவனுக்கு இறையருள் கிடைப்பதில் ஆச்சரியமென்ன?" என்று நபி (ஸல்) அவர்கள் பதிலிறுத்தார்கள்.

ஆதாரங்கள் போதுமா? இன்னும் உண்டு. இதோ தருகிறேன்; "குற்றத்திற்குப் பரிகாரம் தேடிக்கொண்டவன் குற்றமே செய்யாதவன் போலாகிவிடுகிறான்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதை நீ ஏற்கனவே புரிந்துகொண்டு விட்டாய். நபி (ஸல்) அவர்களின் வாணாளில் நடந்த ஒரு

சம்பவத்தை எழுதுகிறேன். படித்துப்பார்! என்ன திடுக்கிடும் சம்பவம்!

அன்று ஒரு நாள் இறை தூதரிடம் ஒரு நீக்ரோ வந்தார். கவலைதோய்ந்த முகத்துடன் வந்த அவர் அண்ணலவர்களைப் பார்த்து, "அஸ்ஸலாமு அலைக்கும்" என்றார்.

"வ அலைக்கு முஸ்ஸலாம்; வரஹ்மத்துல்லாஹ்" - அண்ணலவர்கள் பதிலுரைத்தார்கள்.

"நபிகள் நாயகமே! நான் நிறையப் பாவங்கள் செய்திருக்கிறேன் . என் வாழ்க்கையின் பெரும் பகுதி தவறான வழியிலேயே கழிந்திருக்கிறது. என்னை இறைவன் மன்னிப்பானா? நான் மன்னிப்புக் கோரினால், அது அங்கீகாரம் பெறுமா?" என்று நீக்ரோ கேட்டார்.

"தாராளமாக! நீர் உமது செயல் குறித்து மனம்வருந்தி பாவ மன்னிப்புக் கோரினால், இறைவன் உம்முடைய வேண்டுகோளைக் கண்டிப்பாய் ஏற்றுக்கொள்வான்" என்று நபி (ஸல்) அவர்கள் பதிலுரைத்தார்கள்.

வந்தவர் சென்று விட்டார். சற்று நேரத்திற்கெல்லாம் அவர் மீண்டும் திரும்பி வந்தார். "நான் செய்த குற்றங்களை எல்லாம் இறைவன் பார்த்துக் கொண்டுதானிருந்தானா?" என்று கலவரத்துடன் கேட்டார்.

"ஆமாம்! இதிலென்ன சந்தேகம்? 'நீங்கள் செய்யும் ஒவ்வொரு செயலையும் இறைவன் அறிகிறான்' என்னும் இறை வசனத்தை நீர் கேட்டதில்லையா" என்றார்கள் நபி (ஸல்) அவர்கள்.

அந்த நேரத்தில் அங்குத் திடுக்கிடும் சம்பவம் ஒன்று நடந்தது!

நபியவர்களின் பதிலைக் கேட்ட அந்த நீக்ரோவின் கண்களிரண்டும் நெற்றிக்கு ஏறின; முகம் வெளிறிற்று. "அல்லாஹ்" என்று அவர் அலறியது வெகு தூரத்திற்குக் கேட்டது. அவர் எவ்வித உணர்ச்சியால் தாக்கப்பட்டாரோ! நின்றிருந்த அவர் 'மடால்' என்று சாய்ந்தார். மறுவிநாடி அவரது உயிர் உடலை விட்டுப்பிரிந்தது.

"இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்" என்று நபி (ஸல்) அவர்கள் மெதுவாய்ச் சொல்லிக் கொண்டார்கள்.



அந்த நீக்ரோ தம் குற்றங்களை எண்ணிப் பார்த்தபோது, அவற்றை அவர் செய்தபோதெல்லாம் இறைவன் பார்த்துக் கொண்டுதானிருந்தான் என்பதை அவர் உணர்ந்தபோது, அவருக்கு அதிர்ச்சி ஏற்பட்டுவிட்டது. அந்த அதிர்ச்சியே அவரது உயிரையும் குடித்துவிட்டது.

நபிமணியின் கருத்துக்களை ஓரளவு ஆராய்ந்து விட்டோ மல்லவா? இப்போது, பெரியோரின் கருத்துக் களைப் பார்ப்போம்.

ஸயீத் பின் முஸய்யப் (ரஹ்) அவர்கள் கூறினார்கள்:

"நபிகள் திலகமவர்களின் காலத்தில் ஒரு முஸ்லிம் வாழ்ந்து வந்தார். அவர் முஸ்லிமாக இருந்தாலும் நிறையக்குற்றங்கள் செய்தார். ஆனால், குற்றம் புரிந்துவிட்டு அவர் பேசாமலிருந்து விடமாட்டார். உடனே தம் குற்றத்திற்குப் பாவமன்னிப்பும் கேட்டுக் கொள்வார். அதன் பிறகு மறுபடி பாவமன்னிப்பும் கோருவார். இதுதான் அவர் வாழ்க்கை, குற்றம் செய்வதும், பிறகு அதற்குப் பாவமன்னிப்புக் கோருவதும்தான் அவரது குறிக்கோள்கள். பாவமன்னிப்புக் கோரும்போது, அவர் 'இனிப் பாவம் செய்வதில்லை' என்று திடசங்கற்பம் செய்துகொள்வதில்லை. அவருடைய காரியத்தில்தான், "இறைவன் தன்னிடம் பாவமன்னிப்புக் கோருபவர்களை மன்னிக்கிறான்" என்னும் திருவசனம் அருளப்பட்டது.

தலக் பின் ஹபீப் (ரஹ்) அவர்கள் சொன்னார்கள்.

"ஒரு மனிதன் புரிந்த பாவச் செயலை எண்ணி வருந்துவானாகில், அவனுடைய குற்றங்கள் யாவும் மன்னிக்கப்படும்."

உலக மக்களை நேரிய வழியில் செலுத்தும் பொருட்டு எத்தனையோ தீர்க்கதரிசிகள் உலகில் உதயமாகி இருக்கிறார் கள். இஸ்ரவேலர்கள் என்னும் யாக்கூப் நபி (அலை) அவர்களின் சந்ததியினரில் அநேக நபிமார்கள் தோன்றினார்கள்.

அவர்களில் ஒருவர் ஏதோ ஒரு குற்றம் செய்து விட்டார். அவ்வளவுதான்! இறைவனிடமிருந்து அவருக்குக் கீழ்க்கண்ட எச்சரிக்கை வந்துவிட்டது,

"நபியே! உம்மை நான் நேர் வழிக்காகவே அனுப்பினேன்; குற்றம் புரிந்து மக்களின் உள்ளங்களைக் கெடுப்பதற்கல்ல! எனவே, நீர் என்னிடம் வரும்போது உம்மை நிச்சயமாய்த் தண்டிப்பேன்."

அந்த நபி (அலை) அவர்கள் துடித்துவிட்டார்கள். "இறைவா; நீ நீயேதான்;நான் நானேதான். நீ என் இறைவன். நான் உன் அடிமை. அடியேனின் குற்றத்தை உன்னைத் தவிர்த்து வேறு யாரால் மன்னிக்க முடியும்?" என்று இறைஞ்சினார்கள்.

நீ நன்குணர்ந்து செயலாற்ற வேண்டும் என்பதற்காக இவற்றையெல்லாம் நான் இங்குக் குறிப்பிடுகிறேன். இன்னும் தருகிறேன். படித்து செயலாற்று!

இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்களிடம், ஒருவர் தான் செய்த குற்றத்தை எடுத்துச் சொல்லி, அதற்கு மன்னிப்புக் கிடைக்குமா என்று கேட்டார்.

அதற்கு இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள் பதிலளிக்க வில்லை. தம் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டார்கள். அவர்கள் அப்படிச் செய்தது அந்த மனிதரின் உள்ளத்தில் என்ன உணர்ச்சியை உண்டாக்கிற்றோ! இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள் மீண்டும் அவர் பக்கம் திரும்பியபோது. அவரது கண்களிரண்டும் நீர் தேக்கிக் கலங்கி நிற்பதைக் கண்டார்கள. அவர்கள் உடனே கூறினார்கள்: சுவர்க்கத்திற்கு எட்டு வாயில்கள் உள்ளன. அவை திறக்கப்படுவதுமுண்டு, மூடப்படுவதுமுண்டு. ஆனால் பாவ மன்னிப்பு என்னும் வாயில் என்றுமே மூடப்படுவதில்லை. எனவே நீர் செயலாற்றும்! இறைவனின் அருள் கிட்டாது என்று எண்ணாதீர்!"

அபூகாஸிம் என்னும் அறிஞரும், அபூகாலித் என்னும் பெரியாரும் ஒரு நாள் காபிரின் (-முஸ்லிமல்லாதாரின்) பாவமன்னிப்பு ஏற்றுக்கொள்ளப்படுமா என்பது குறித்துத் தர்க்கம் செய்து கொண்டிருந்தார்கள்.

அப்போது அபூகாலித் அவர்கள் கூறினார்கள்:

"இறைவன் கூறுகிறான்: 'நபியே! நீர் காபிர்களுக்குச் சொல்லும், அவர்கள் தங்கள் தீய செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, இஸ்லாத்தின்பால் திரும்பினால், அவர்கள் செய்திருந்த பாவங்கள் யாவற்றையும் இறைவன் மன்னித்து விடுவான்.' இப்படி குர்ஆன் கூறுகிறது. இது காபிரின் விஷயத்தில் அருளப்பட்டது, காபிரின் விஷயமே இப்படி என்றால், முஸ்லிமுடைய விஷயத்தைப்



பற்றிக் கேட்கவா வேண்டும்? அவன் குற்றம் மன்னிக்கப்படும் என்பதில் என்ன ஐயம்? ஆனால், ஒன்று மட்டும் நிச்சயம். ஒரு முஸ்லிம் பாவ மன்னிப்புப் பெற்றுத் தூய்மையடைவது அவன் இரண்டாம் தடவையாக முஸ்லிமாவதற்கு ஒப்பாகும்.

இஸ்ரவேலர்களில் ஒரு வாலிபர் இருந்தார். அவர் இறைவனை இருபது ஆண்டுகள் வணங்கினார். 'வணக்கமே மனிதனின் பிரதான குறிக்கோள்' என்பதை உணர்ந்து அவர் இரவு, பகல் என்று பாராமல் இறைவனைத் தொழுதார். ஆனால், அந்த இருபது ஆண்டுகளும் கழிந்த பிறகு அவர் மனம் வணக்கத்தில் ஈடுபட மறுத்தது. எனவே, அவர் அடுத்த இருபது ஆண்டுகளையும் தீயசெயல்களிலேயே கழித்தார்.

ஒரு நாள் அவர் தம் முகத்தைக் கண்ணாடியில் பார்த்தார். மறுகணம் திடுக்கிட்டார். வெள்ளிக் கம்பியைப் போன்று சில நரை முடிகள் அவரது தாடியில் மின்னின.

அது அவரைப் பெரிதும் பாதித்தது; 'ஆ-நான் வயோதிகத்தையல்லவா அணுகிக்கொண்டிருக்கிறேன்!" என்று புலம்பினார். அவர் தம் வாலிபத்தின்போது செய்த பாவங்களெல்லாம் பயங்கர உருவங்களைத் தாங்கி அவர் எதிரே வந்துநின்றன. மலை போன்று குவிந்து கிடக்கும் அவரது பாவங்களை அவரால் எப்படி அப்புறப்படுத்த முடியும்? அவற்றிற்கு இறைவனிடம் மன்னிப்புக் கிடைக்குமா? "இறைவா! நான் பாவியாகிவிட்டேன். கடந்த இருபது ஆண்டுகளாக நான் பெரும் குற்றங்களை எல்லாம் செய்துவிட்டேன். பிழை பொறுக்கும் நாயனே! நான் உன்னிடம் வந்தால் என் குற்றங்களை மன்னிப்பாயா?" -என்று இறைவனிடம் முறையிட்டார்.

அசரீரிக்குரல் ஒன்று ஒலித்தது. "நீர் குற்றம் செய்தீர்: நான் அதற்கு உடனுக்குடன் தண்டனையளிக்காமல் பொறுத்திருந்தேன்; குற்றத்தை நீர் உணரும்வரை தாமதித்திருந்தேன். நீர் உமது குற்றங்களை உணர்ந்து மன்னிப்புக் கோரினால், நான் மன்னித்தருள்வேன்."

துந்நூன் மிஸ்ரீ (ரஹ்) அவர்களைப் பற்றி நீ அறிந்திருப்பாய் என்றே எண்ணுகிறேன். அவர்கள்தலை சிறந்த ஆத்மஞானிகளில் ஒருவர். அவர்கள் சொன்னார்கள்:

"இறைவனின் அடியார்களில் குறிப்பான சிலரைப் பற்றி இங்கு நான் குறிப்பிடுகிறேன். அவர்கள் தீமை என்னும் மரத்தை உள்ளம் எனும் பூமியில் நடுவார்கள். பின்னர் அதைப் பாவ மன்னிப்பு என்னும் பெரு வெள்ளத்தால் பிடுங்கி எறிவார்கள்..."

வளர்த்துவானேன்? இதுவரை நான் எழுதி வந்த வற்றிலிருந்து நீ உண்மையை நன்றாக அறிந்திருப்பாய். எல்லா நிபந்தனைகளும் ஒன்று சேர்ந்தால் பாவ மன்னிப்பு நிச்சயமாக ஒப்புக்கொள்ளப்படும் என்று தெளிவுற உணர்ந்திருப்பாய்.

இங்கு உனக்கு ஒரு சந்தேகம் ஏற்படலாம். "மனிதன் கோரும் பாவ மன்னிப்பை இறைவன் ஏற்றுக்கொள்வது அவனுக்குக் கடமையா?

பாவ மன்னிப்பை ஏற்றுக்கொள்வது இறைவனுக்குக் கடமையல்ல. இதுமட்டுமல்ல, வேறு எந்தக் கடமையும் அவனுக்குக் கிடையாது. ஆனால், பாவத்தின் கறையைப் பாவமன்னிப்பினால் அவன் அகற்றுகிறான்-தண்ணீரினால் தாகத்தை அவன் தணிப்பது போன்று.

மறுபடியும் என்ன கேட்கிறாய்?" நீங்கள் கொடுத்த உதாரணம் பொருத்தமானதல்ல, ஒரு மனிதன் தண்ணீரைக் குடிக்கும்போது, அத்தண்ணீர் அவனுடைய தாகத்தை தணிக்கும் என்பதில் அவனுக்கு எவ்விதச் சந்தேகமும் ஏற்படாது. ஏனெனில், தண்ணீர் குடித்துத் தாகம் தீராதவர் எவருமில்லை. ஆனால், பாவ மன்னிப்பின் விஷயம் இப்படிப்பட்டதல்ல. ஏனெனில் ஒரு மனிதன் பாவமன்னிப்புக் கோரும்போது, அது ஏற்றுக்கொள்ளப்படும் என்னும் திடமான நம்பிக்கை ஏற்படுவது க டம்" என்று தானே கேட்கிறாய்?

இதோ விடை தருகிறேன். பாவ மன்னிப்புக் கோரு பவனுக்கு, ஏற்றுக்கொள்ளப்படுமோ, ஏற்றுக்கொள்ளப் படாதோ என்னும் ஐயம் எழுவது இயல்பு. அதை நானும் ஒப்புக்கொள்கிறேன். ஆனால், அந்தச் சந்தேகம் எல்லா நேரங்களிலும் ஏற்பட்டுவிடாது. பாவமன்னிப்பின் நிபந்தனைகள் யாவும் ஒன்றுசேர்ந்து விட்டால், அது ஏற்றுக்கொள்ளப்படும் என்பதில் யாருக்கும் சந்தேகம் உண்டாகாது.



பேதிக்கு மருந்து குடிக்கப்போகும் ஒரு மனிதன், தான் குடிக்கப்போகும் மருந்து பயன் தருமா, தராதா என்று சந்தே கப்படலாம். ஆனால், அந்தச் சந்தேகம் எப்படி உண்டானது, பேதியை யுண்டாக்கும் மூலிகைகள் யாவும் அந்த மருந்தில் கலந்திருக்கின்றனவா, இல்லையா என்னும் குழப்பத்தினால் தான் இந்தச் சந்தேகம் தலை தூக்குகிறது. இந்த உதாரணத்தைக் கொண்டு உண்மையை அறிந்துகொள்.

❀

## 5. பாவம் என்றால் என்ன?

பாவ மன்னிப்பு என்பது, செய்து வரும் பாவங்களை விடுவதனால் தான் உண்டாகிறது. ஒரு காரியத்தைச் செய்வதனாலும் சரி, அதை விடுவதனாலும் சரி, அது குறித்து ஞானம் பெற்றிருக்க வேண்டியது முக்கியம். பாவ மன்னிப்புக் கோருவது கடமையாயிருப்பதால், அதற்குக் காரணமாயுள்ள பாவத்தைப் பற்றி நாம் அறிந்து கொள்வதும் முக்கியமே. எனவே பாவம் என்றால் என்ன என்று அறிந்து கொள்வதும் கடமையாகும். இறைவனின் கட்டளைக்கு எதிராக இருக்கும் ஒவ்வொரு செயலும் பாவமே. அவற்றை எல்லாம் விவரிப்பதற்கு இந்நூல் இடந்தராது. தவிர பாவத்தையே விவரித்துக் கொண்டு போவது என் நோக்கத்தை விட்டு அப்பாற்பட்டதுங்கூட. என்றாலும், பாவங்கள் எத்தனை வகை, அவற்றின் தன்மைகளென்ன. அவற்றினால் விளையும் விபரீதங்கள் யாவை என்பவற்றை மட்டும் இங்கு விளக்குகிறேன்.

மனிதனின் குணங்கள் அநேகம் உள்ளன. அதனால் அவன் செய்யும் பாவங்களும் மட்டிலடங்காதவை. அவற்றை எல்லாம் 'உள்ளத்தின் விந்தைகள்' என்னும் நூலில் விவரித்து விட்டேன்.

என்றாலும், மனிதனைப் பாவத்தில் நுழைக்கும் குணங்களை நான்கு வகைகளாய்ப் பிரிக்கலாம். அந்த நான்கு வகைகளிலே எல்லாப் பாவங்களும் கட்டுப்பட்டு விடுகின்றன. ஏனெனில் மனிதன் அந்நான்கு குணங்களாலும் குழைத்துத் தயாரிக்கப்பட்டிருக்கிறான். எனவே அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான தன்மையை அவனிடம் புகுத்திவிடுகின்றன.

முதற்குணம்: இக்குணம்தான் சகல பாவங்களுக்கும் அஸ்திவாரம்; பிறப்பிடம், பெருமை கொள்ளுதல், திமிராக நடத்தல், தன்னைப் பிறர் பாராட்டவேண்டும் என்று எதிர்பார்த்தல், உலகில் நிரந்தரமாக உயிர் வாழ்வதை விரும்புதல், மக்களின் மத்தியில் முக்கிய 'புள்ளி' யாய்த் திகழ்வதை வரவேற்றல் முதலியவைகளை இதற்கு உதாரணங்களாக வைத்துக் கொள்ளலாம்.

இக்குணம் படைத்தவன் "நான்தான் ஆண்டவன்" என்று சொன்னாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இரண்டாம் குணம்: இதை 'மூதேவிக் குணம்' என்று குறிப்பிடலாம். பெருமை கொள்ளுதல், அட்டூழியம் செய்தல், சூழ்ச்சியும் மோசடியும் நிறைந்த திட்டம் வகுத்தல் முதலியவை இக்குணத்தைச் சார்கின்றன.

மூன்றாம் குணம்:இதை 'மிருகக் குணம்' என்றும் சொல்லலாம். பேராசைப் பேயால் பீடிக்கப்படுதல், காமப் பிணி கொண்டு அலைதல், விபச்சாரம் செய்தல், ஆண் புணர்ச்சி புரிதல் முதலியவை இக்குணத்திற்குச் சரியான உதாரணங்கள்.

நான்காம் குணம்: கோபத்தை அடக்கியாளாமல் குதித்தல், பொது மக்களை வாய்க்கு வந்தவாறு திட்டுதல், கொலை செய்தல் முதலியவை இக்குணத்தைச் சேர்கின்றன.

இந்நான்கு குணங்களின் அடிப்படையில் எத்தனையோ குற்றங்கள் நிகழ்கின்றன. இந்த நான்கு ஊற்றுக்களிலிருந்தும் பாவ நீர் மனிதனின் ஒவ்வோர் அங்கத்திலும் பாய்ந்து அவனை நிலை கொள்ளாது குதிக்கச் செய்யும். இவற்றினால் விளையும் தீமைகளுக்கு அளவே கிடையாது. அவற்றில் சில கண்களாலும், காதுகளாலும் உற்பத்தியாகும். இன்னும் சில, கை கால்களோடு தொடர்பு கொள்ளும்...இவற்றை யெல்லாம் விவரிப்பதை நான் விரும்பவில்லை. ஏனெனில், இது மிகவும் தெளிவான விஷயம்.



மனிதனின் குணத்தை வைத்துக்கொண்டு மேற்கண்ட பாவப் பிரிவினையைச் செய்தோமல்லவா? இப்போது வேறொரு வகையில் குற்றங்களைப் பங்குபோடுவோம். நன்கு கவனித்துப்படி!

குற்றம் இரு வகைப்படும்.

1. மனிதனுக்கும், இறைவனுக்குமிடையிலுள்ளவை. தொழுகையை விடுதல், நோன்பு வைக்காதிருத்தல், தன்மீது கடமையானவற்றைத் தவற விடுதல் முதலியவை இதற்கு உதாரணங்கள். இச் செயல்களில் மற்றொரு மனிதனுக்கு எத்தகைய சம்பந்தமுமில்லை.

2. ஒரு மனிதனுக்கும் மற்றொரு மனிதனுக்கும் இடையிலுள்ளவை: ஜகாத் கொடுக்காதிருத்தல், கொலை செய்தல், கொள்ளையடித்தல் முதலியவை இவ்வகையைச் சேர்கின்றன. இச்செயல்கள் ஒவ்வொன்றிலும், சம்பந்தப் பட்ட மனிதனுக்குத் துன்பம் ஏற்படுகிறது.

அறிஞர்கள் கூறினார்கள்.

குற்றங்களை மூன்று வகைகளாய்ப் பிரிக்கலாம்; மன்னிக் கப்படுபவை; மன்னிக்கப்படாதவை; தண்டனையளிக்கத் தகுந்தவை. இறைவனுக்கும் மனிதனுக்குமிடையிலுள்ள குற்றங்கள் மன்னிக்கப்படுபவை. மன்னிக்கப்படாதவை; இணை வைத்தல், விக்கிரக வணக்கம் முதலியவை. மனிதனுக்கும், மற்றொரு மனிதனுக்கும் இடையிலுள்ள குற்றங்கள்தாம் தண்டனையளிக்கத் தகுந்தவை. இத்தகைய குற்றங்களை இறைவன் மன்னிக்கமாட்டான்; இக்குற்றங் களுக்குத் தண்டனையடைந்தே தீரவேண்டும். ஏனெனில் அவற்றில் இன்னொரு மனிதனின் உள்ளக் கொதிப்புமல்லவா சேர்ந்திருக்கிறது!

# 6. சிறிய, பெரிய பாவங்கள்

இரண்டு விதங்களில் பாவங்களைப் பங்கு போட்டாகிவிட்டது. இப்போது மூன்றாவது விதத்தையும் கவனித்து விடுவோம்.

1. சிறிய பாவங்கள்.

2. பெரிய பாவங்கள்.

ஆனால், இவ்விஷயத்தில் அறிஞர்களுக்கு மத்தியில் அபிப்பிராய பேதமுண்டு.

சிலர் கூறுகிறார்கள்: "சிறிய பாவம் என்பதே கிடையாது. இறைவனின் ஆக்ஞைக்கு எதிரான ஒவ்வொரு செயலும் பெரிய பாவமே.

இது தவறு என்பதற்கு குர்ஆனிலிருந்து ஆதாரம் தருகிறேன்.

" விலக்கப்பட்ட பெரும் பாவங்களிலிருந்து நீங்கள் விலகினால் உங்கள் குற்றங்களை இறைவன் மன்னித்துவிடுவான்."

இதிலிருந்து சிறிய பாவங்களும் உண்டு என்று தெரிகிறதல்லவா?

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"ஐங்காலத் தொழுகை, பெரும் பாவங்களைத் தவிர்த்துள்ள சகல சிறு பாவங்களையும் அழித்துவிடும்."

நபி (ஸல்) அவர்கள் மீண்டும் நவின்றார்கள்.

"இணை வைத்தல், பெற்றோரைத் துன்புறுத்தல், கொலைசெய்தல், பொய்ச் சத்தியம் செய்தல் ஆகியவை பெரும் பாவங்களாகும்."

இந்தத் தர்க்கம் இப்படியே இருக்கட்டும். பெரும் பாவங்கள் எத்தனை என்று ஆராய்வோம். இதிலும் ஏகோபித்த அபிப்பிராயம் காணப்படவில்லை. சிலர் 'நான்கு' என்றும், 'வேறு சிலர் 'ஏழு' என்றும் இன்னும் சிலர் 'ஒன்பது' என்றும் மற்றும் சிலர் 'பதினொன்று' என்றும் சொல்கிறார்கள்.

இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள், "பெரும் பாவங்கள் நான்கு" என்று சொல்கிறார்கள்.



"இல்லை, இல்லை....பெரும் பாவங்கள் ஏழு" என்று சொல்கிறார்கள். அப்துல்லாஹ்பின் உமர் (ரலி).

"எந்தக் காரியத்தைச் செய்வதால் உலகிலேயே தண்டனை (ஹத்து) பெறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறதோ அந்தக் காரியம் தான் பெரும் பாவம்" என்று சில அறிஞர்கள் கூறுகிறார்கள்.

அபூதாலிப் மக்கீ (ரஹ்) அவர்கள் சொல்வதைச் சற்று கவனித்துக் கேள்!

"பெரும் பாவங்கள் பதினேழு. திருநபி (ஸல்) அவர்களின் கருத்துக் களினாலும், இப்னு அப்பாஸ், இப்னு மஸ்ஊத், இப்னு உமர் (ரலி) முதலிய அறிஞர்களிடமிருந்து நான் கேட்டறிந்தவற்றினாலும்தான் நான் இந்த முடிவிற்கு வந்தேன். அந்தப் பதினேழு பாவங்களில் நான்கு பாவங்கள் உள்ளத்தோடு தொடர்பு கொள்கின்றன. இணைவைத்தல். குற்றத்தையே தொடர்ந்து செய்தல், இறையருள் கிட்டாது என்று எண்ணுதல், இறைவனுக்கு அஞ்சாதிருத்தல். இன்னும் நான்கு பாவங்கள் நாவோடு தொடர்பு வைக்கின்றன. பொய் சாட்சி கூறுதல், நல்ல பெண்களின்மீது அவதூறு பேசுதல், பொய்யாணை இடுதல், ஏகத்துவத்திற்கு எதிரான மந்திரம் ஜபித்தல். இன்னும் மூன்று பாவங்கள் வயிற்றினால் ஏற்படுகின்றன: கள், சாராயம் முதலிய போதைப் பானங்கள் அருந்துதல், தாய் தந்தையற்ற அநாதைகளின் பொருளைப் புசித்தல், வட்டியினால் வரும் லாபத்தைச் சாப்பிடுதல். மேலும் இரண்டு பாவங்கள் அபங்களினால் உண்டாகின்றன: விபச்சாரம் செய்தல், ஆண்புணர்ச்சி புரிதல், இன்னும் இரண்டு பாவங்கள் கரங்களினால் உண்டாகின்றன. கொலை செய்தல், திருடுதல். இன்னும் ஒன்று கால்களைப் பொறுத்தது: யுத்தகளத்திலிருந்து புறமுதுகு காட்டி ஓடுதல். இன்னும் ஒரு பாவம் உடல் முழுமைக்குமே சம்பந்தப் படுகிறது: பெற்றோரை இம்சித்தல்."

இவர்கள் கூறியது ஓரளவு திருப்தியளிக்கக்கூடியது என்பதில் சந்தேகமில்லை. என்றாலும். பெரும் பாவங்கள் பதினேழைவிட அதிகமாகவும் இருக்கலாம். ஏனெனில் அபூதாலிப் அவர்கள் வட்டி தின்பதையும், அநாதைகளின் பொருளை அபகரிப்பதையும், பெரும் பாவங்களில் சேர்த்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் கரத்தின் பாவத்தில்

கொலையை மட்டுமே குறிப்பிட்டிருக்கிறார்கள். கண்ணைத் தோண்டுதல், கரங்களை வெட்டுதல் முதலியவற்றை அவர்கள் குறிப்பிடவில்லை. அநாதைகளை அடித்தல், அவர்களை இம்சித்தல் முதலியவை அவர்களின் பொருளை அபகரிப்பதைவிட கொடிய பாவங்கள் என்பதில் ஐயமில்லை. இருந்தும் அவர்கள் அவற்றைக் குறிப்பிடத் தவறி விட்டார்கள்.

எனவே, பெரும்பாவங்கள் பதினேழுதான் என்று நம்புவதற்கில்லை.

அபூ ஸயீத் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

"சில காரியங்கள் இருக்கின்றன, அவற்றை நீங்கள் சாதாரணமானவை என்று எண்ணுவீர்கள். ஆனால் அவை யாவும் பெரும் பாவங்கள் என்பதை நாங்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் காலத்திலேயே அறிந்தோம். இறைவன் மறுத்தவை அனைத்தும் பெரிய பாவங்கள்."

நன்குகவனித்துக் கேள்! சிறிய பாவம், பெரிய பாவம் என்னும் இரு வார்த்தைகளும் மிகவும் சிக்கலானவை. ஒரே செயல் ஒரு சமயத்தில் பெரிய பாவமாகவும் வேறொரு சமயத்தில் சிறிய பாவமாகவும் மாறிவிடுகிறது. ஒவ்வொரு பாவமும் அதற்கு க் கீழுள்ள பாவத்தைப் பார்க்கும் போது பெரிய பாவமாகவும்,அதற்கு மேலுள்ளதைப் பார்க்கும்போது சிறிய பாவமாகவும் தோன்றுகிறது.

அன்னியப் பெண்மணியுடன் படுத்துப் புரள்வது, அவளைப் புணர்வதைவிடச் சிறிய பாவமே. ஆனால் அது அவளைக் காமக் கண்கொண்டு பார்ப்பதைவிட பெரிய பாவமாகும். ஒரு முஸ்லிமுடைய கையை வெட்டுவது, அவனை அடிப்பதைவிடப் பெரிய பாவமே. ஆனால் அவனைக் கொன்றுவிடுவதைவிடச் சிறிய பாவமே.

அப்படியானால் பெரிய பாவம் எது? சிறிய பாவம் எது? ஆம், இது சிக்கலான பிரச்னைதான் என்றாலும் இதற்குத் தீர்வு காண வழியுண்டு.

எந்தச் செயலைச் செய்தால் நரகம் உண்டு என்று குர்ஆன் கூறுகிறதோ, அந்தச் செயல் பெரும் பாவம் என்று அறியலாம்.



என்னதான் இருந்தாலும் பெரும் பாவங்களின் எண்ணிக்கை என்ன என்று அறிய யாருக்கும் ஆவலாகத்தானிருக்கும். இது இயற்கையும்கூட. ஆனால், அவற்றைப்பற்றி அறிய வேண்டுமென்றால், நபிமணி அவர்களின் மொழியின் வாயிலாகத்தான் அறிய வேண்டும். இந்த இடத்தில் அப்படியும் முடியவில்லை. ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் குறிப்பான எண்ணைச் சொல்லவில்லை. சில இடங்களில் ஏழு என்றும், இன்னும் சிலஇடங்களில் ஒன்பது என்றும் காணப்படுகின்றன. எனவே இது விஷயத்தைத் தீர்மானமாக உணர்வது துர்லபம்.

இதிலிருந்து நபி (ஸல்) அவர்களே சரியான எண்ணைக் குறிப்பிட விரும்பவில்லை என்று தெரிகிறதல்லவா? நபியவர்களே மறைத்த விஷயத்தை நாம் ஏன் வெளிப்படுத்த முனைய வேண்டும்?

ஆனால், பாவத்தின் வகைகளையறிய ஒரு வழியுண்டு. அதன் மூலம் ஓரளவு விஷயத்தை அறியலாம்.

உலகம் தோன்றிய நாளிலிருந்து ஒவ்வொரு காலத்திற்கும் ஒவ்வொரு நபி வந்துகொண்டிருந்தார்கள். இவ்வாறு உலகின்கண் நபிமார்கள் வருவதில் குறிக்கோள் என்ன? மனிதனை இறைவனின் பக்கம் இழுக்கவேண்டியதே முக்கிய குறிக்கோள். ஆனால், இந்தக் குறிக்கோளை ஒரு மனிதன் அடைய வேண்டுமென்றால் அவன் இறைவனைக் கட்டாயம் அறிய வேண்டும். இதைத்தான் இறைவன், "மனிதனையும், ஜின்னையும் என்னை அறிந்து வணங்கி, எனக்கு அடிமையாய் இருக்கவே நான் படைத்தேன்" என்று கூறுகிறான்.

மனிதன் இறைவனின் அடிமையாக வாழ வேண்டுமானால் இறைவனை அறியாமல் முடியுமா? அதே சமயத்தில் இறைவன் தனக்கு எஜமானன் என்றும், தான் இறைவனுக்கு அடிமை என்றும் அவன் உணர வேண்டும். எனவே, அவனுக்குத் தன் எஜமானை அறியவேண்டிய தேவை ஏற்படுவதோடு, அறிய வேண்டிய நிர்ப்பந்தமும் உண்டாகிறது.

இதுதான் உலகில் நபிமார்கள் அனுப்பப்படுவதற்குரிய குறிக்கோள். ஆனால் இக்குறிக்கோளை இம்மையில் தான் நிறை வேற்ற முடியும். உலகில் வாழும்போதுதான் ஒரு மனிதனால் தன்னையும், தன் நாயனையும் ஓரளவேனும் உணர முடியும். இதைத்தான் நபி (ஸல்) அவர்கள், "இவ்வுலக வாழ்க்கையே மறுமைக்குரிய வயல்" என்று அருளினார்கள்.

எனவே, மார்க்கத்திற்காக உலக விவகாரங்களில் வெகு கவனத்தோடு இருப்பது அவசியம். ஏனெனில் உலகம் தானே மறுமைக்குப் பாலமாக இருக்கிறது. பாலமின்றி அக்கரையை அடைவது எப்படி?

உலகில் உயிரும், பணமும்தான் பெரிதும் பயன்படுகின்றன. இவற்றினால் தான் மறுமையில் வெற்றியைக் காணமுடியும்.

எனவே, இறைஞானத்தைத் தடுக்கும் ஒவ்வொரு செயலும் மகா கொடிய குற்றமாகும். அடுத்தபடியாக மனிதனின் உயிரைப் பாதிப்பவை. அதற்கும் அடுத்தவை பொருளை பாதிப்பன.

ஆகவே உள்ளத்தில் இறைஞானத்தைப் பேணிக் காப்பாற்றுதல், உயிரைக் கண்காணித்தல், பொருளைப் பத்திரப்படுத்தல் ஆகிய மூன்று காரியங்களும் மார்க்கத்தில் முக்கிய இடம் பெறுகின்றன. இந்த நியதிக்கு எந்தத் தேசமும் விலக்கில்லை.

ஆதலால்தான் உலகிற்கு அனுப்பப்பட்ட எந்த நபியும் இறைஞானத்தைத் தடுக்கவில்லை: உயிரை மாய்த்துக் கொள்ளும்படி ஏவவில்லை; பொருளை வீசி எறிந்துவிடும் படியும் கூறவில்லை.

இதிலிருந்து நாம் உணர்கிறோம், ‘பெரும் பாவங்கள் மூன்று வகைகளில் கட்டுப்பட்டு விடுவன’ என்று,

1. இறைஞானத்தைத் தடுப்பவை. அவனுடைய தீர்க்க தரிசிகளைப் பற்றிய உண்மைகளுக்குக் குறுக்கே நிற்பவை. ஆகையால், இறைவனைப் பற்றியும், அவனது தீர்க்க தரிசிகளைப் பற்றியும் அறியவிடாமல் தடுக்கும் ஒவ்வொரு செயலும் கொடிய பாவமாகும். ஏனெனில் உலகிலுள்ள பாவங்கள் யாவற்றிலும் கொடிய பாவம் அறியாமையே. அதுதான் மனிதனுக்கும் இறைவனுக்குமிடையில் திரையாக நிற்கிறது. அந்தத் திரையை கிழித்தெறிந்து மனிதனுக்கு இறையண்மையைத் தரவல்லது அறிவு. எனவே, ஒவ்வொரு மனிதனும் தன் அறிவிற்குத் தக்கவாறு இறைவனை நெருங்குகிறான்; தன் அறியாமைக்குத் தக்கவாறு அவனை விட்டு விலகிப்போகிறான்.



2. உயிரைப் பாதிப்பவை. இவையும் கொடிய பாவங்களே. ஏனெனில், உயிரிருந்தால்தான் அவனால் உலகில் வசிக்க முடியும். எனவே, ஒரு மனிதனின் உயிருக்குத் தீங்கு விளைவிப்பது கொலை செய்வது, தற்கொலை செய்து கொள்வது முதலியவை கொடிய குற்றங்களாகின்றன. இவ்வகைப்பட்ட குற்றங்கள் முன்னதைவிடத் தாழ்ந்திருந்தாலும் இவையும் பெரும் பாவங்களே என்பதில் எத்தகைய சந்தேகமுமில்லை. “இவை ஏன் குற்றம்?” என்று கேட்கிறாயா? இச்செயல்களால் மனிதனின் குறிக்கோளே தவறிவிடுகிறது. மனிதனின் பிரதான குறிக்கோள், இறைவனையும், அவனது திருத்தூதர்களையும் அறிவது என்று நீ முன்னரே அறிந்திருக்கிறாயல்லவா? அந்தக் குறிக்கோளை அடைய வேண்டுமாயின், அதற்கு முதல் நிபந்தனை உயிர். ஏனெனில் உயிரற்ற பிணத்தில் இறைவனைப் பற்றிய ஞானம் மட்டுமல்ல. வேறு எவ்வித ஞானமும் உண்டாக வழியில்லை.

ஒரு மனிதனை அடித்தல், அவனது கை, கால்களை வெட்டுதல், கண்களைத் தோண்டுதல், காதை அறுத்தல் முதலியவை மேற்குறிப்பிட்ட கொடிய குற்றத்திற்கு அடிகோலுகின்றன. எனவே, இவையும் பெரும் பாவங்களே. ஆனால் இவற்றில் சில, வேறு சிலவற்றைவிட் உயர்ந்தவையாகவும், தாழ்ந்தவையாகவும் இருக்கும்.

விபச்சாரம் செய்தல், ஆண்புணர்ச்சி புரிதல் முதலியவை இவ்வகையையே சேர்கின்றன. ஏனெனில் ஆண் புணர்ச்சியினால் சந்ததித் தொடர்பு விடுபட்டுப் போகிறது. ஓர் உயிரைச் சிரு டிக்கவல்ல இந்திரியத் துளிகள் வீணாவது நிச்சயம். இது ஒரு குழந்தையைக் கொலை செய்வதற்கொப்பாகும் என்று சொல்லாமலே தெரியும். ஏனெனில் அவன் அந்த இந்திரியத்துளிகளைத் தன் மனைவியிடம் அடைக்கலம் புகச் செய்திருந்தால் அடுத்த சில மாதங்களில் அவள் ஒரு குழந்தைக்குத் தாயாகிவிடுவாள்.

விபச்சாரத்திற்கு இக்காரணம் பொருந்தாது. விபச்சாரத்தின் மூலம் குழந்தை பெறுவது சாத்தியமே. ஆனால், அக்குழந்தை, ‘தந்தை’யற்றதாகிவிடும் என்பது திண்ணம். அதன் தந்தையை யாராலும் குறிப்பாகச் சொல்ல முடியாதல்லவா? இது அக்குழந்தையின் எதிர்கால வாழ்க்கையில் இடையூறையுண்டாக்குவதும் திண்ணமே.

மதம் அருளப்படுவதெல்லாம், மக்களைச் சீர்திருத்தி அவர்களை உயர் குணத்தினர்களாகத் திகழச் செய்வதற்கே யாகும். சீர்திருத்தத்திற்கென்று அருளப்பட்ட எம்மதத்திலும் "விபச்சாரம் செய்வது ஆகும்" என்னும் சட்டத்தைக் காண முடியாது. கேவலம், மிருகங்களைப் போன்று காமத்தால் உந்தப்பட்டு அலைமோதி வீழ்வதை ஒரு மார்க்கம் எப்படி அனுமதிக்கும்? விபச்சாரத்தில் பிறந்த ஒருவனின் வாழ்க்கையைக் கொஞ்சம் எண்ணிப்பார்! அவன் அதனால் எத்துணை தூரம் மனவேதனை அடைகிறான்! எல்லாரையும் போன்று அவனால் சரி சமமாய்ப் பழக முடியுமா? அவன் பழக முற்பட்டாலும் மக்கள் அதற்கு இடந்தர மாட்டார்களே!

விபச்சாரம் செய்வது ஆண் புணர்ச்சி புரிவதைவிடக் கொடியது. ஏனெனில், இச்செயலில் ஈடுபடும் இருவரும் காமத்தால் உந்தப்படுகின்றனர். இச்செயல் மக்களிடம் மலிந்து காணப்படுகிறது. இதனால் ஏற்படும் வியாதிகளுக்கும் குறைவில்லை.

3. பொருட்சேதத்தை உண்டாக்குபவை. பொருளின் உதவியால்தான் மனிதன் உயிர் வாழ முடியும். எனவே, அவற்றை வாரி இறைப்பது கூடாது. அவற்றை வைத்துக் காப்பாற்ற வேண்டும். பொருளைத் திருடுதல், வழிப்பறி செய்தல் முதலியவை இதில் சேர்கின்றன. ஆதலால், இவையும் பெரும் பாவங்கள்தாம். அநாதைகளின் பொருளைச் சூறையாடுதல், பிறர் பொருளை மோசம் செய்தல் ஆகியவையும் இவ்வகையையே சேர்கின்றன.

இவை யாவும் பெரும் குற்றங்கள் என்பதில் எந்த மதத்திலும் அபிப்பிராய பேதம் காணப்படவில்லை.

மேற்குறிப்பிட்டவற்றிலிருந்து பொருளுக்குச் சேதம் விளைவிக்கும் முயற்சிகள் ஒவ்வொன்றும் 'பெரும் குற்றம்' என்னும் பட்டத்தைப் பெறுகின்றன என்று அறிந்தும் கொண்டாய். எனவே வட்டிக்கு விடுவது பெரும் குற்றத்தின் பாற்பட்டது என்று நான் சொல்லத் தேவையில்லை. அதை நீயாகவே உணர்ந்திருப்பாய். வட்டிக்கு விடுவதைக் குர்ஆன் பெரிதும் கண்டிக்கிறது. சிரமமற்ற சம்பாத்தியமல்லவா அது? அத்தோடு மட்டும் நின்றுவிடவில்லை. பிறருடைய பொருளுக்கு மல்லவா அது உலை வைக்கிறது?



# 7. சிறிய பாவங்கள், பெரிய பாவங்களாக மாறுகின்றன!

மேலே நான் குறிப்பிட்ட மூன்று வகைகளில் எல்லாப் பாவங்களும் கட்டுப்பட்டுவிடுகின்றன. இம்மூன்று வகைகளையும் நீ நன்கு ஆராய்ந்தால் உனக்குப் போதிய ஞானம் உண்டாகிவிடும்.

ஒரு விஷயம் சொல்கிறேன்: அதையும் நினைவில் வைத்துக்கொள்! ஒரு சிறிய பாவத்தைத் தொடர்ந்து செய்து வருவதால், அது பெரும் பாவமாக மாறிவிடும். அதே போன்று, நன்மையைத் தராத-தீமையும் விளைவிக்காத ஒரு செயலைத் தொடர்ந்து செய்வதால் அது சிறிய பாவமாக மாறிவிடுகிறது. விளையாட்டில் பொழுதைப் போக்குவது. இசை இசைத்து நேரம் கழிப்பது முதலியவை பாவங்களல்ல; இவற்றில் ஈடுபடுவது குற்றமல்ல. ஆனால் இவற்றில் நிரந்தரமாக ஈடுபட்டு நேரத்தை வீணாக்குவது சிறு பாவமாகும். இச்சிறு பாவத்தைத் தொடர்ந்து செய்வதால், அது பெரும் பாவமாக மாறிவிடும்.

இவற்றை நீ என்றுமே மறக்கக்கூடாது. அப்போதுதான், இதை உணர்ந்தால் ஏற்படும் பலனை நீ அடைவாய்.

இந்த இடத்தில் சிலர் குறுக்குக் கேள்வி கேட்கிறார்கள்: "பாவங்களில் சிறிதும் பெரிதும் உண்டு என்பதைக் குர்ஆனின் திருவசனங்களாலும், நபிமணியின் கருத்துக் களாலும் நிரூபித்தீர்கள். இதை நாங்கள் ஒப்புக் கொள்கிறோம். ஆனால் சிறிய பாவங்கள் பெரிய பாவங்களாக மாறுகின்றன என்று சொல்லுகிறீர்களே. அதைத்தான் எங்களால் ஒப்புக் கொள்ள முடியவில்லை. பெரிய பாவங்கள் என்றுமே பெரிய பாவங்கள் தாம். கள்குடிப்பது, கொலை செய்வது முதலியவை எக்காலத்திலும் சிறிய பாவங்களாக மாறியதில்லை. அதே போன்று சிறிய பாவங்கள் என்றுமே சிறிய பாவங்கள்தாம். அவை எப்படிப் பெரிய பாவங்களாக மாறமுடியும்?"

இதே சந்தேகம் உனக்கு ஏற்பட்டிருக்கும் என்றே எண்ணுகிறேன். பெரும் பாவங்கள் சிறு பாவங்களாக மாட்டாவென்பது உண்மைதான். வயோதிகன் பாலகன . க

முடியாது. ஆனால், சிறிய பாவங்கள் பெரும் பாவங்களாக மாறுவதை எவரும் மறுக்க முடியாது. இதோ அதற்குரிய ஆதாரங்களையும், உதாரணங்களையும் தருகிறேன்.

சிறிய குற்றங்கள் பெரிய குற்றங்களாக மாறுவதற்குச் சில காரணங்கள் உள்ளன. அவற்றைத் தொடர்ந்து ஆராய்வோம்.

*1. தீயச் செயல்களைத் தொடர்ந்து செய்யும் குணம்:* ஒரு செயல் சாதாரணமான குற்றமாக இருக்கலாம். ஆனால், அதைத் தொடர்ந்து செய்யும் காரணத்தினால், அது பெரிய குற்றமாக பாவிக்கப்படுகிறது. எனவேதான், "தொடர்ந்து செய்யப்படும் எச்செயலும் சிறு பாவமல்ல" என்று சில அறிஞர்கள் கூறினார்கள். தொடர்ந்து செய்யப்படுவதினால் தான் அது பெரும் பாவமாக மாறிவிடுகிறதே! பின்னர் எப்படி சிறு பாவமாக இருக்கும். ஒரே ஒரு தடவை செய்யப்பட்ட பெரும் பாவம் தொடர்ந்து செய்யப்படும் சிறு பாவத்தைவிடத் தாழ்ந்ததே. இந்தச் சிறிய பாவத்தினால் விளையும் விபரீதம் அந்தப் பெரிய பாவத்தினால் விளையும் விபரீதத்தைவிட எத்தனையோ மடங்கு கொடியதாகும்.

இதன் உண்மையை அறியத் துடிக்கிறாயல்லவா? அப்படியானால் நான் சொல்வது போல் செய்!

ஒரு செங்கல்லை எடுத்துக் கொள்! அதன் மீது தண்ணீரை ஊற்று! எப்படி ஊற்ற வேண்டும் தெரியுமா? முழுத் தண்ணீரையும் ஒரே சமயத்தில் கொட்டிவிடக்கூடாது. துளி துளியாக வடியச் செய்ய வேண்டும். இந்த வேலையை நீ தொடர்ந்து செய்! சில நாட்களுக்குப் பின் அக்கல்லை எடுத்துப்பார்! அப்போது நீயே ஆச்சரியப்படுவாய். நீர் துளி தொடர்ந்து விழுந்துகொண்டிருந்த இடத்தில் சிறியதொரு பள்ளத்தை காண்பாய்! ஆனால், அந்தக் கல்லின் மீது ஒரே சமயத்தில் நீ எவ்வளவு தண்ணீரைக் கொட்டினாலும், அதனால் அந்தக் கல்லில் எவ்வித மாற்றமும் ஏற்படாது.

இதே போன்று பெரிய பாவத்தினால் விளையாத விளைவை, தொடர்ந்து செய்யப்படும் சிறிய பாவம் விளைவித்துவிடுகிறது. தொடர்ந்து செய்யப்படும் சிறு பாவம் மனிதனின் உள்ளத்தையே துளைத்துவிடுகிறது. இச்சக்தி, தப்பித் தவறி ஒரே ஒரு தடவை செய்யப்படும் பெரும் பாவத்திற்குக் கிடையாது என்பது திண்ணம்.



இதனால்தான் நபி (ஸல்) அவர்கள், "தொடர்ந்து செய்யப்படும் நன்மையே சிறந்த நன்மை" என்று கூறினார்கள். ஏனெனில், அத்தகைய நன்மைக்குத்தான், உள்ளத்தைத் துளைத்து, அதில் ஆத்மீகச் சக்தியை உண்டாக்கும் ஆற்றல் உண்டு.

இதிலிருந்து நீ என்ன அறிகிறாய்? தொடர்ந்து செய்யப்படும் நன்மை அது எவ்வளவு சிறியதாயினும், பெரிய பலனை உண்டாக்குகிறது; தொடர்ந்து செய்யப்படாத நன்மை, அது எவ்வளவு பெரியதாயினும் அவ்வளது பெரிய பலனை உண்டாக்குவதில்லை என்று அறிகிறாயல்லவா?

இதே போன்று, சிறிய பாவங்கள், அவை தொடர்ந்து செய்யப்படுவதால், உள்ளத்தை இருளடையச் செய்கின்றன. பெரிய பாவங்கள் அவை தொடர்ந்து செய்யப்படாததால் அவ்வளவு தூரம் இதய இருளை உண்டாக்குவதில்லை.

தவிர, பொதுவாக ஒரு மனிதன் திடீரென்று பெரும் பாவத்தை செய்துவிடமாட்டான்; அவனால் அப்படிச் செய்யவும் முடியாது. அதற்கு வசதியான சிறிய பாவங்களைச் செய்து முடித்த பிறகுதான் பெரிய பாவத்திற்கு வருவான்.

ஒரு மனிதன் நினைத்த நேரத்தில் கொலை குற்றம் புரிவான் என்று எதிர்பார்க்க முடியாது. அதற்கு வசதியான எத்தனையோ சிறிய பாவங்களைச் செய்து முடித்த பிறகுதான் அவன், கொலை என்ற பெரிய குற்றத்தில் ஈடுபடுவான். எனவே, பெருங்குற்றங்கள் ஒவ்வொன்றையும், சிறு குற்றங்கள் தாம் அழைத்து வருகின்றன என்று தைரியமாகக் கூறலாம். இப்படிப் பார்க்கும்போது, மேற்குறிப்பிட்ட பெரிய குற்றத்தை வேண்டுமானாலும் மன்னித்துவிடலாம். ஆனால் அதற்கு வழிகாட்டிபோல் நிற்கும் சிறிய பாவங்களை மட்டும் மன்னிக்க முடியாது.

*2. குற்றங்களை அலட்சியம் செய்தல்:* இக்குணம் படைத்தவன், "குற்றம் புரிந்தால்தான் என்ன கெட்டு விடுகிறதாம்?" என்று கேட்கத் தவறமாட்டான்.

இத்தகைய குணம் ஒரு மனிதனுக்கு ஏற்படும்போது, அவன் எந்தப் பாவத்தையும் தயங்காது செய்வான். மகாக் கொடிய பாவமாக இருந்தாலும் அது அவனுக்குத் திகைப்பையுண்டாக்காது. இதைத்தான் நபி (ஸல்) அவர்கள்,

"நல்ல மனிதன் தன் குற்றத்தை மலைபோன்று எண்ணுவான்; கெட்டவன் தன் குற்றத்தை தன் மூக்கின்மேல் உட்கார்ந்த ஈயைப்போல் கருதுவான்" என்று குறிப்பிட்டார்கள்.

ஒரு திருத்தூதருக்கு இறைவன் அறிவித்தான்: "பாவம் சிறியதே என்று எண்ணிப்பார்க்காதீர்! 'அந்தப் பாவம் கூடாது' என்று கட்டளையிட்டவன் எவ்வளவு பெரியவன் என்று எண்ணிப்பாரும்!"

நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை மட்டுமல்ல, அவர்களின் அன்புத் தோழர்களின் வாழ்க்கையும் மக்களுக்கு படிப்பினையாகவே அமைந்திருக்கிறது; அவர்களின் வாழ்க்கை இன்னும் நமக்கு வழி காட்டுகிறது. அவர்கள் சாதாரணமாக சிறிய பாவங்களையும் கூடப் பெரிய பாவங்களாய்ப் பாவித்தார்கள். அவ்வளவு தூரம் அவர்களின் ஆத்மீகம் வளர்ந்திருந்தது. மூடர்கள் அற்பமாகக் கருதும் விஷயம், அறிஞர்களின் பார்வையில் பயங்கரமாய்ப்படுகிறது.

3. குற்றத்தைச் செய்துவிட்டு மகிழுதல்: இக்குணம் அநேகரிடம் குடிகொண்டிருக்கிறது. குற்றத்தைச் செய்து விட்டு ஒருவன் மகிழ்கிறான் என்றால், அந்தக் குற்றத்தில் அவன் இன்பம் காண்கிறான் என்றுதான் பொருள். இவ்விதக் குணத்தினால், அவன் செய்து மகிழ்ந்து வரும் சிறிய பாவங்களெல்லாம் பெரிய பாவங்களாக மாறி அவன் உள்ளத்தை இருளடையச் செய்கின்றன. இதன் காரணமாகவே சிலர் தாங்கள் செய்த குற்றத்தைத் தங்கள் நண்பர்களிடம் சொல்லிச் சிரிக்கிறார்கள்: "ஒரே வார்த்தையில் அவனைத் தலைகுனிய வைத்து விட்டேன்; வெட்கத்தினால்அவன் முகம் சிவந்து போகும் அளவிற்கு அவனை நான் கேவலப்படுத்திவிட்டேன்" என்று சொல்லி நகைக்கிறார்கள். இது இழிகுணம் என்பதில் சந்தேகமில்லை. அதே சமயத்தில் இக்குணம் சிறிய பாவத்தைப் பெரிய பாவமாக்குகிறது என்பதில் ஐயமில்லை.

4. தான் செய்த குற்றத்தை வெளியில் சொல்லிப் பிறரையும் தூண்டிவிடுதல்; இதுவும் கேவலமான குணமே என்று நான் சொல்ல வேண்டியதில்லை. இது சொல்லாமலே தெரிய வேண்டிய விஷயம்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "தான் செய்த குற்றத்தை வெளியில் சொல்லி, பிறரையும் குற்றம் செய்யத் தூண்டும் மனிதனை இறைவன் மன்னிக்க மாட்டான்."



ஏனெனில், இறைவன் மனிதனுக்கு எத்தனையோ அருட்களைக் கொடுத்திருக்கிறான். மனிதன் செய்யும் ஒவ்வொரு செயலையும் அவன் பார்த்துக் கொண்டிருந் தாலும், அவன் குற்றங்களை மறைத்துவிடுகிறான். அவன் நாடினால் அக்குற்றத்தைப் பலர் முன்னிலையில் அம்பலப்படுத்தலாம். ஆனால், அவன் செய்வதில்லை; மறைத்துவைக்கிறான். இதுவும் ஓர் அருள்தான். இறைவன் மறைத்தருளிய விஷயத்தைத் தானாகவே வெளியிட்டுக் கொள்கிறானே, இந்த மனிதன்! பரிதாபம்!

இதனால்தான் அறிஞர்கள், "குற்றம் செய்யாமலிரு; அப்படி இருக்க உன்னால் முடியாவிட்டால், செய்த குற்றத்தைப் பிறரிடம் சொல்லாமலாவது இரு!" என்று கூறினார்கள்.

"நயவஞ்சகர்கள் சிலர், சிலரிடம் தீமையைச் செய்யும்படி தூண்டிக்கொண்டே இருப்பார்கள்" என்னும் மறை வசனத்தையும் மறந்துவிடாதே!

5. குற்றம் புரிபவன் அறிஞனாயிருப்பது: குற்றம் புரிபவன், மார்க்க விஷயத்தை நன்குணர்ந்த அறிஞனாயிருந்தால், அதனால் மக்களுக்கு புதியதோர் உணர்ச்சி ஏற்படுகிறது. "அறிஞனே செய்யும் போது நாம் செய்வதற்கென்ன?" என்று எண்ணிக்கொண்டு அவர்கள் குற்றம்புரிய ஆரம்பித்து விடுவார்கள். எனவே, குற்றவாளி மடிந்துவிட்டாலும், அவனால் தோற்றுவிக்கப்பட்ட பாவங்கள் அழியமாட்டா, அவன் இட்டவித்து பெரியதொரு மரமாகிவிடும்.

ஒரு மேதை கூறுகிறார்: அறிஞன் குற்றம் செய்வது கப்பல் மூழ்குவதற்கு ஒப்பாகும். கப்பலோடு, அதில் ஏறியிருந்த மக்களும் மாண்டுவிடுவதுபோல், அறிஞனோடு, அவனைப் பின்பற்றிய மக்களும் படுகுழியில் விழுகிறார்கள்."

ஒரு கதை வெகு நாட்களாக உலவி வருகிறது. அதையும் இங்குக் குறிப்பிட்டுவிடுகிறேன்.

அறிஞர் ஒருவர் சில நாட்கள் வரை மக்களைத் தூண்டிக்கொண்டிருந்தார்; அவர்களைப் பாவமான

விஷயத்தில் ஈடுபடுத்திக்கொண்டிருந்தார். அதில் அவர் என்ன இன்பத்தைக் கண்டாரரோ! ஆனால், சில நாட்களுக்குப் பின் அவர் தம் குற்றத்தையுணர்ந்தார். என்ன இருந்தாலும் அவர் அறிஞரல்லவா? "இறைவா! என் குற்றத்தை மன்னித்தருள்!" என்று இறைஞ்சினார்.

அந்தச் சமயத்தில் மார்க்கத்தொண்டு புரிந்து வந்த ஒரு நபிக்கு இறைவன் அடியிற் கண்டவாறு செய்தியனுப்பினான்:

"நபியே! அந்த மனிதரிடம் சொல்லிவிடும்! அவருக்கும், எனக்கும் இடையிலுள்ள பாவங்களை எல்லாம் நான் மன்னித்து விட்டேன். ஆனால் அவரால் வழி தவறியவர்கள் கதி என்ன? அவர்கள் பாவங்களைச் செய்துகொண்டே போகிறார்களே! அதற்கு யார் பொறுப்பாளி?"

இவற்றிலிருந்து, அறிஞர்களின் பொறுப்பு மகத்தானது என்று அறிவது சுலபம். அவர்கள் முக்கியமாக இரண்டு காரியங்களைக் கவனிக்க வேண்டும். அவர்கள் பொதுவாகக் குற்றமே செய்யக்கூடாது; அப்படியே அவர்கள் தப்பித் தவறி செய்துவிட்டாலும், அதை மக்களிடம் வெளியிடக்கூடாது. இவ்விரண்டு காரியங்களும் பேணத் தகுந்தவை. எனவே தான், "குற்றம் புரியும் அறிஞனுக்குக் கொடிய தண்டனை உண்டு" என்னும் கருத்தை நபி (ஸல்) அவர்கள் வெளியிட்டார்கள். சாதாரண மனிதனுக்கு கிடைக்கும் தண்டனையைவிட, அறிஞனுக்குக் கிடைக்கும் தண்டனை ஒரு மடங்கு அதிகம்.

இது தீமையான காரியங்களில். இதேபோன்று, ஒரு அறிஞன் ஒரு நல்ல காரியத்தைச் செய்தால், அவனுக்கு இரட்டிப்புப் பயன் உண்டு. ஏனெனில், அறிஞன் செய்யும் நன்மையின் ஒவ்வோர் அங்கத்திலும் உயிர் இருக்கும்.

இதுவரை நீ பாவங்களைப் பற்றி ஓரளவு அறிந்திருப்பாய் என்று எண்ணுகிறேன். அது உனக்குப்போதும்.



# 8. பாவத்தை வெறுக்க முடியுமா?

பாவ மன்னிப்பின் அங்கங்களை நீ நன்கு உணர்ந்து கொண்டுவிட்டாய். அவற்றைப் போதிய அளவு தெளிவு படுத்திவிட்டேன். பாவத்தைப் பற்றிய ஞானம், அதனால் ஏற்படும் மனக்கவலை, அதற்குப் பின் உதயமாகும் சங்கல்பம் ஆகியவையே பாவமன்னிப்பின் அங்கங்கள் என்பதை நீ இதுவரை மறந்திருக்க முடியாது. அப்படியே நீ மறந்திருந் தாலும், இப்போது நினைத்துக் கொண்டிருப்பாய். இந்த மூன்று அங்கங்க்ளும் ஒன்று சேரும்போதுதான் பாவமன்னிப்பு தன் முழு உருவத்துடன் வெளிப்படும் என்று நாம் முன்னரே ஆராய்ந்து விட்டோம்; இது கடமை என்பதையும் புரிந்து கொண்டு விட்டோம்.

இந்த மூன்று அங்கங்களில் இரண்டாவது அங்கம் தான் மிகவும் உயர்ந்தது. ஏனெனில், இதனால்தான் உள்ளம் பாவத்தை வெறுக்க ஆரம்பிக்கிறது.

பாவமன்னிப்புக் கோருவது கடமையாயிருந்தாலும், அக்கடமையை ஒவ்வொரு மனிதனும் செய்து முடிப்பான் என்று எதிர்பார்க்க முடியாது. ஏனெனில், "பாவமன்னிப் பாவது, மண்ணாங்கட்டியாவது " என்று சொல்பவர் எத்தனையோ பேர் இன்னும் உயிரோடிருக்கிறார்கள். அவர்கள் பாவத்தை மட்டும் செய்ய மாட்டார்கள்; அதைச் செய்துவிட்டு, அதற்கு வியாக்கியானமும் செய்வார்கள்.

இத்தகைய குணம் படைத்தவர்கள், பாவமன்னிப்புக் கோருவதை என்றுமே எதிர்பார்க்க முடியாது. பாவமான செயல் குறித்து உள்ளத்தில் கசப்பானதொரு அபிப்ராயம் உண்டாகும்வரை பாவமன்னிப்பின் பக்கம் எந்த மனிதனும் திரும்பமாட்டான். செய்த குற்றம் குறித்து வருந்துவதால் இந்தப் பலன் ஏற்படும் என்பதில் ஐயமில்லை. இதனால் தான் நபி (ஸல்) அவர்கள், "செய்த குற்றம் குறித்து வருந்துவதே, பாவ மன்னிப்பு" என்று அருளினார்கள்.

இந்த இடத்தில் சிலர் கேட்கிறார்கள்: "குற்றம் என்பது மனிதனுக்கு விருப்பமான செயல். குற்றம் புரியும் ஒவ்வொரு மனிதனும் அதை விரும்பியே செய்கிறான். அவ்வளவு இனிப்பாக இருக்கும் அது! அப்படி இனிப்பாக இருக்கும் ஒன்று எப்படிக் கசப்பாக மாறும்? மனிதனின் உள்ளத்தில்

ஊறிப் போய், அவனை மகிழ்விக்கும் அச்செயலை அவனால் எப்படி வெறுக்க முடியும்?"

ஆம், உண்மைதான். குற்றம் என்பது இனிப்பான பொருள்தான். அது மட்டுமல்ல, விஷம் கலந்த தேனுக்கு ஒப்பானதும் கூட. விஷம் கலந்த தேனை ஒருவன் உட்கொள்ளும்போது அது அவனுக்கு இனிப்பாகத் தானிருக்கும். ஆனால், வயிற்றுக்குள் அது சென்றதும் சும்மா இருக்குமா? கண்டிப்பாய் சும்மா இருக்காது' மெது மெதுவாகத் தன் குணத்தைக் காட்டத் தவறாது. இதனால் உட்கொண்டவன் நோயாளியாகிறான், வேதனையடைகிறான். இப்படி அனுபவப்பட்ட ஒருவன் இனிப்பான தேனை வெறுப்பது அதிசயமல்ல. அத்தேன் அவனுக்குக் கசப்பாயிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இதேபோன்று, குற்றம் இனிப்பாகத்தானிருக்கும். அது கசக்கும் என்று யாராலும் சொல்லமுடியாது. நானும் அப்படிச் சொல்லவில்லை. ஆனால், அதனுள் மறைந்து கிடக்கும் பாஷாணத்தை அறிந்தவனுக்கு அது இனிக்காது என்பது மட்டும் நிச்சயமே. அது அவனுக்குக் கசப்பாயிருந்தாலும் ஆச்சரியப்படமுடியாது.

நபிமார்களில் ஒருவர் எல்லாம் வல்ல இறைவனிடம் பாவ மன்னிப்புக் கோரினார்கள். இறைவன் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

அந்த நபி அவர்கள் மீண்டும் இறைஞ்சினார்கள். பாவமன்னிப்புக் கோரினார்கள்.

இறைவன் அதற்கு பதிலிறுத்தான்:

"நபியே! உம்மை நான் நல்வழிக்காகவே அனுப்பினேன். உம்மைப் பார்த்து மக்கள் திருந்த வேண்டும் என்பதற்காகவே உமக்கு நான் நபித்துவத்தையளித்தேன். நான் குற்றத்தை மன்னிப்பவன்தான். ஆனால், உம்முடைய குற்றத்தை நான் மன்னிக்கக் கோருகிறீரே தவிர, அந்தப் பாவத்தின் தித்திப்பை நீர் அறுத்தெறியவில்லையே. உம் உள்ளத்தில் அது இன்னும் இனித்துக் கொண்டு தானே இருக்கிறது! அந்தத் தித்திப்பு மாறி, கசப்பு உண்டாகும்வரை நான் உம்முடைய பாவத்தை மன்னிக்க மாட்டேன்.

இத்தகைய மனக் கசப்பு ஓரிரண்டு பாவங்களில் மட்டும் ஏற்பட்டு விட்டால் போதாது; சகல பாவங்களையும் உன் உள்ளம் வெறுத்தொதுக்க வேண்டும்.



# 9. கடந்த வாழ்க்கையைத் திரும்பிப் பார்!

இது மட்டுமல்ல, இன்னும் சில விஷயங்களிலும் நீ வெகு சாமர்த்தியமாக நடந்து கொள்ள வேண்டும்.

உன் இளமைப் பிராயத்திலிருந்து நீ இன்று வரை செய்திருந்த சிறிய, பெரிய குற்றங்கள் யாவற்றையும் எண்ணிப் பார்க்க வேண்டும். நடந்துபோன ஆண்டுகளை மீண்டும் உன் நினைவிற்குக் கொண்டுவந்து அவற்றிற்குள் மறைந்து கிடக்கும் எண்ணிறந்த பாவங்களை ஆராய வேண்டும். உன் வாழ்க்கையில் நீ எத்தனை நன்மைகளைச் செய்திருக்கிறாய் என்று துருவித் துருவிப் பார்க்க வேண்டும். அவற்றிற்கு எதிராக நீ எத்தனை பாவமேடுகளைக் குவித்திருக்கிறாய் என்று கவனிக்க வேண்டும்.

அப்போது உன் கடந்த கால வாழ்க்கை ஓரளவு உன் முன்னால் வரும்.

நீ எத்தனையோ தொழுகைகளை விட்டிருப்பாய் அல்லது கூடாத முறையில் தொழுதிருப்பாய். அவற்றிற்கெல்லாம் நீ பரிகாரம் தேடிக்கொள்ளவேண்டும். விடப்பட்ட தொழுகையை மீண்டும்தொழ வேண்டும். நீ பிராயம் அடைந்ததிலிருந்து எத்தனை தொழுகைகளை விட்டிருக்கிறாய் என்று எண்ணிப்பார்த்து அதற்குத் தக்கவாறு பரிகாரம் தேடிக்கொள்! இது மிகவும் முக்கியம். ஏனெனில் தொழுகைக்குள்ள முக்கியத்துவம் வேறு எந்த வணக்கத்திற்கும் கிடையாது.

அடுத்து, நோன்பைப் பார்ப்போம்; நீ பிரயாணத்தின் போது எத்தனையோ நோன்புகளை விட்டிருப்பாய்; நோன்பு வைத்துவிட்டுப் பின்னர் அதை வேண்டுமென்றே முறித்திருப்பாய். இவற்றை எல்லாம் நீ நினைத்துப் பார்த்து தவறிப்போன நோன்புகளுக்குப் பதிலாக நோன்பு பிடிக்க வேண்டும்.

அடுத்தது ஜகாத் (ஏழை வரி): உன்னிடமுள்ள பொருள்கள் யாவற்றையும் முதலில் கணக்கெடுத்துக் கொள்! பின்னர், அவை உன்னிடம் எத்தனை ஆண்டுகளாக

இருக்கின்றன என்று கணக்கெடு! பின்னர் வருடாந்தர விகிதாச்சாரப்படி 'ஜகாத்' கொடுத்துவிடு!

ஹஜ் (மக்கா யாத்திரை): கடந்த காலத்தில் உன்னிடம் மக்காவிற்குச் சென்று வருவதற்குப் போதுமான பொருள் வசதி இருந்திருந்தும், நீ மக்கா யாத்திரையை விட்டிருக்கலாம். அப்படியானால் நீ மக்காவிற்குப் பிரயாணமாகியே தீரவேண்டும். இப்போது அதற்குத் தேவையான பொருள் வசதி இல்லாவிட்டாலும் சம்பாதித்தாவது நீ மக்காவிற்குப் புறப்படுவது அவசியமாகும். ஏனெனில், பொருள் இருந்தபோதே அதை நிறைவேற்றாமல் விட்டது உன் குற்றமல்லவா!

நீ செய்த குற்றத்தினால் உன் கடமை இன்னும் உன் தலைமேலேயே உட்கார்ந்திருக்கிறது. அதை எப்படியாவது நிறைவேற்றுவது உன் கடமையே.

இந்த நிலைமையிலிருக்கும் நீ திடீரென்று இறந்து விட்டால் பெரியதொரு கடமையைத் தவறவிட்ட குற்றத்திற்கு ஆளாவாய். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "தேவாலயம் நோக்கிப் பிரயாணம் செய்யாமல் இறப்பவன் ஒன்று யூதனாக இறக்கட்டும். அல்லது கிறிஸ்தவனாக இறக்கட்டும்." இதிலிருந்து 'ஹஜ்'ஜுக்காகப் பிரயாணம் செய்யாமலிருப்பது எவ்வளவு பெரிய தவறு என்று தெரிகிறதல்லவா? நன்கு உணர்ந்து கொள்! ஏனெனில் உண்மையை நன்கு உணராதவர்கள் குறிப்பிடத்தக்க பயன் அடையமாட்டார்கள்.

குற்றம் புரிபவன் தன் சிந்தனையைக் கடந்த காலத்தின் பக்கம் திருப்ப வேண்டும். அவன் கருத்தறிந்த நாளிலிருந்து. காது, கை, கால் நாவு முதலிய சகல உறுப்புகளாலும் அவன் செய்த சகல பாவங்களையும் அவன் நினைவு கூர வேண்டும். அவன் செய்த சிறிய குற்றங்களையும் பெரிய குற்றங்களையும் மனத்திரையில் பிரதிபலிக்கச் செய்ய வேண்டும்.

அப்போது, அவனால் ஓரளவுதன் குற்றங்களை எல்லாம் பார்த்துக்கொள்ள முடியும். அன்னியப் பெண்ணைக் காமக்கண்கொண்டு பார்த்தல், சுத்தமற்ற நிலையில் பள்ளியில் உட்கார்ந்திருத்தல், பரிசுத்தமில்லாமல் குர்ஆனைத் தொடுதல், கள் குடித்தல் என்பன போன்ற எத்தனையோ பாவங்களை அவன் செய்திருப்பான். இவற்றையெல்லாம்



நினைத்துப் பார்த்துப் பரிகாரம் தேடவேண்டும். இவை ஒவ்வொன்றையும் எண்ணி மனம் வெதும்பி கவலைப் படுவதோடு அவற்றினால் ஏற்பட்ட மன இருளையும் அகற்ற முனையவேண்டும். மேற்குறிப்பிட்ட பாவங்களினால் ஏற்பட்ட இருளை, அவற்றிற்கு எதிரான நன்மைகளைச் செய்வதால் அழிக்கலாம். "இறைவனை என்றும் அஞ்சுங்கள்! நீங்கள் குற்றம் புரிந்துவிட்டால், அதை அழிக்க வல்ல நன்மையை உடனே செய்யுங்கள்!" என்னும் நபி (ஸல்) அவர்களின் கருத்தையும் இங்கு நினைவு படுத்திக்கொள்!

நபி (ஸல்) அவர்கள் மட்டுமல்ல, வல்ல இறைவனும் கூறுகிறான்:

"நன்மைகளை, தீமைகள் அழித்துவிடுகின்றன."

எனவே, நீ செய்த குற்றத்தின் சாயலை, அதற்கு எதிரான நன்மையால் அடித்து விரட்டு!

வீண் கதைகளைக் கேட்டுப் பொழுது போக்கிய குற்றத்திற்கு, திருமறையின் இனிய நாதம் கேட்டுப் பரிகாரம் தேடு! சுத்தமற்ற நிலையில் குர்ஆனைத் தொட்ட குற்றத்திற்கு, அதிகமாய்க் குர்ஆனை ஓதுவதனால் பரிகாரம் செய்..! இவை யாவற்றையும் விவரித்து முடிப்பது இயலாது. ஏனெனில், பாவங்கள் எண்ணிலடங்காதவை, சுருங்கச் சொன்னால், பாவத்தினால் ஏற்படும் மன இருளை, நன்மையினால் ஏற்படும் உள ஒளியால் தான் அகற்ற முடியும். ஏனெனில் ஒரு பொருளை அழிக்கும் ஆற்றல், அதற்கு எதிரான பொருளிடம்தான் உண்டு.

உலகப்பற்றை வலுவேற்றிக்கொள்வது சகல பாவங்களுக்கும் தலைபோன்றது. இக்குற்றம் ஒரு மனிதனைப் பற்றிக் கொள்ளும்போது, அவன் உலக விவகாரங்களில் அளவு கடந்த ஆனந்தமடைவான். மறுமையைக் குறித்து அவன் எண்ணிப் பார்க்கவும் விரும்பமாட்டான். இந்தப் பாவத்திற்கு எப்படிப் பரிகாரம் தேடுவது? ஒரு மனிதனால் நினைத்த நேரத்தில் உலகப்பற்றை ஒதுக்கித் தள்ளிவிட முடியுமா? முடியாதே! அப்படியானால், அவன் என்னதான் செய்வான்?

அவன் எதுவும் செய்ய வேண்டியதில்லை! அவன் உள்ளம் அதற்குப் பரிகாரம் தேடும். அவன் உள்ளத்தில் உதயமாகும் கவலைகள் அவை அவனுக்கு உலக

வாழ்க்கையின் மீது வெறுப்பை உண்டாக்கினால்-அவையே அவனுடைய குற்றத்திற்குப் பரிகாரம் செய்கின்றன. அவனது உள்ளக் கொதிப்பில், அவனுடைய பாவம் வெந்து சாம்பலாகி விடுகிறது. இதைத்தான் திருநபி (ஸல்) அவர்கள், "மனக் கவலையால் மட்டுமே அழியத் தகுந்த குற்றங்களும் உள்ளன" என்று குறிப்பிட்டார்கள்.

ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்:

"ஒரு மனிதனின் பாவச் சுமை கனத்துவிட்டால் அவற்றை அகற்றவல்ல நன்மையை அவனால் செய்ய முடியாவிட்டால், இறைவன் அவனுடைய உள்ளத்தில் கவலையை உண்டாக்கி விடுகிறான். இந்தக் கவலையே அவனுடைய பாவங்களைத் தின்றுவிடுகிறது.

இதிலிருந்து மனிதன் படும் கவலைக்குக் கூடப் பயன் உண்டு என்று தெரிகிறது.

நீ கேட்கலாம்:

"ஒரு மனிதன் பெரும்பாலும் தன் பொருளைப் பற்றியும், தன் பந்துக்களைப் பற்றியும், தன் பதவியைப் பற்றியுமே கவலைப்படுவான். இது பொது இயல்பு. இப்படிக் கவலைப்படுவது குற்றம் என்பதில் ஐயமில்லை. அப்படியிருக்க கவலைப்படுவதால் பாவங்கள் எப்படி அழிய முடியும்? இன்னும் சொல்லப்போனால் கவலைப்படுவதால் அதிகமான பாவங்களல்லவா உண்டாக வேண்டும்?"

நான் இத்தகைய கவலையைக் குறிப்பிடவில்லை. இப்படிக் கவலைப்படுவது கூடாது. அதைவிட்டு விலகி இருப்பது நன்று.

இதுவரை நான் எழுதி வந்த குற்ற நிவர்த்திகளெல்லாம், இறைவனுக்கும், மனிதனுக்கும் இடையிலுள்ள குற்றங்களில் தான். இப்போது ஒரு மனிதனுக்கும், மற்றொரு மனிதனுக்கும் இடையிலுள்ள குற்றங்களைப் பார்ப்போம். கொலை செய்தல், விபச்சாரம் செய்தல், கொள்ளையடித்தல், அநியாயம் செய்தல் முதலியவை இதற்கு உதாரணங்கள்.

இவ்வகையைச் சேர்ந்த குற்றங்கள், ஒரு மனிதனுக்கும், மற்றொரு மனிதனுக்குமிடையில் ஏற்பட்ட போதிலும், இவையும் இறைவனின் சட்டத்திற்கு எதிராகவே அமைகின்றன. ஏனெனில் இக்குற்றங்களைச் செய்யக் கூடாது



என்று கட்டளையிட்டவன் இறைவனல்லவா? எனவே ஒரு மனிதன் கொலை செய்யும்போது, அவன் தலைமேல் இரண்டு குற்றங்கள் விழுகின்றன. ஒன்று, கொலை செய்யப் பட்டவனின் உயிர்ச் சேதத்திற்குரிய குற்றம்; மற்றொன்று, இறைவனின் கட்டளையை மீறிய குற்றம்.

இத்தகைய குற்றங்களினாலும் அவற்றிற்கு எதிரான நன்மைகளைச் செய்து பரிகாரம் தேடலாம்.

ஒரு மனிதனை வஞ்சித்த குற்றத்திற்கு, அவனுக்கு உபகாரம் செய்து பரிகாரம் காணலாம். கொள்ளையடித்த குற்றத்தை, கொள்ளையடிக்கப்பட்டவனுக்கு பெரும் பொருளைக் கொடுத்து அழிக்கலாம்... இப்படியே இதர விஷயங்களையும் கவனித்துக் கொள்! நீ ஒரு மனிதனைக் கொலை செய்திருக்கலாம். அந்தச் செயல் உன் உள்ளத்தை உலுப்பிக் கொண்டேயிருக்கலாம். அப்படியானால், உன்னிடமுள்ள அடிமைகளில் ஒருவனுக்கு உரிமையளித்து, அவனை விட்டுவிடு! இதனால், உன் கொலைக் குற்றத்திற்கு நீ ஓரளவு பரிகாரம் தேடிக் கொண்டவனாவாய். ஏனெனில் அடிமையாயுள்ள ஒருவன், தன் எல்லா உரிமைகளையும் இழந்து விடுகிறான்; உயிர்ப் பிணத்தைப் போல் நடமாடுகிறான். அவனுடைய உரிமைகள் எஜமானிடமே அடைக்கலம் புகுந்து விடுகின்றன. அவன் இடும் கட்டளையைத்தான் அந்த அடிமை தெய்வ வாக்காகக் கருத வேண்டும். இத்தகைய நிலையிலுள்ள அந்த அடிமை, பூரண உரிமை பெறும்போது, போன உயிர் திரும்பி வந்தது போன்ற உணர்ச்சியால் உந்தப்படுகின்றான். எனவே, நீ ஓர் அடிமைக்கு உரிமையளிப்பது, நீ செய்த கொலைக் குற்றத்திற்கு ஓரளவாவது பரிகாரமாக அமையும் என்பது திண்ணம். இதைத் தவிர ஒரு மனிதனால் வேறு என்னதான் செய்ய முடியும்? கொலை செய்யப்பட்ட மனிதனுக்குப் புத்துயிரளித்து அவனை உயிர்வாழச் செய்வது சாத்தியமா, என்ன?

இந்த முறையைக் கொண்டு குற்றத்திற்குப் பரிகாரம் தேடிக்கொள்வது ஆகும் என்பதற்கு மார்க்கத்தில் ஆதார முண்டு. ஆனால், இதனால் உன் குற்றத்திலிருந்து முழுக்க முழுக்க நீங்கிவிடலாம் என்று எண்ணிவிடாதே! ஏனெனில் கொலை என்பது ஒரு மனிதனுக்கும் மற்றொரு மனிதனுக்கும்

இடையில் நிகழும் குற்றம். கள் குடித்தல், தொழுகையை விடுதல் முதலிய குற்றங்களைப் போன்றதல்ல இது. எனவே கொலை செய்யப்பட்டவனின் இனபந்துக்களிடமும் நீ மன்னிப்புக் கோரியாக வேண்டும் அல்லது நட்டஈடாக அவர்கள் கேட்கும் தொகையைக் கொடுத்தாக வேண்டும். நீ அவர்களிடம் உன் குற்றத்தை எடுத்துக் கூறி மன்னிப்புக் கோரும் போது, அவர்கள் உன்னை மன்னித்து விடுவார்கள் என்று உறுதியாகக் கூறமுடியாது. அப்படி மன்னிப்பது அவர்களுக்குக் கடமையல்ல. எனவே அவர்கள் விரும்பினால் உன்னை மன்னித்து உனக்குப் புனர்வாழ்வளிக்கலாம். இல்லையேல், உன் குற்றத்திற்குப் பதிலாக உன் உயிரை அவர்கள் வாங்கலாம்.

இதைப் படித்துவிட்டு நீ கண்டிப்பாய்த் திடுக்கிடுவாய்; 'இப்படியும் உண்டா?' என்று திகைப்பாய். ஆனால், திரு நபி (ஸல்) அவர்களின் காலத்தில் மக்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்று எண்ணிப்பார்! இதோ அண்ணலவர்களின் காலத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தைக் கீழே தருகிறேன்.

அந்தச் சம்பவம் நடந்து எத்தனையோ ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. ஆனால் அதன் பசுமை இன்னும் மாறவில்லை; உள்ளத்தை உலுப்பும் அதன் தன்மை இன்னும் குன்றவில்லை.

அது அருமை நபி (ஸல்) அவர்களின் காலம். ஒரு புறம் வல்லவனின் திருவசனங்கள் அருளப்பட்டுக் கொண்டிருக்க, மறுபுறம் உத்தம நபியின் உயர் கருத்துக்கள் பொழிந்து கொண்டிருந்தன. "இறைவனை வணங்கியவனுக்கு நற்கூலியுண்டு" என்று அன்பு ததும்பக் கூறும் நபி (ஸல்) அவர்கள், "சட்டத்தை மீறியவனுக்குக் கொடிய தண்டனை உண்டு" என்று பொறி பறக்கக் கூறினார்கள்.

அன்று ஒருநாள் நபி (ஸல்) அவர்களுக்கெதிரில் ஒருவர் வந்து நின்றார். "அஸ்ஸலாமு அலைக்கும்" என்றார்.

"வ அலைக்கு முஸ்ஸலாம் வரஹ்மதுல்லாஹ்" என்று நபி (ஸல்) அவர்கள் பதிலிறுத்தார்கள். "மாயிஸ்! என்ன வேண்டும்?"

"நபியவர்களே! நான் பெரியதொரு குற்றம் செய்து விட்டேன்!" என்றார் மாயிஸ் பின் மாலிக்.



"அதை என்னிடம் ஏன் கூறுகிறீர்? இறைவனிடம் அதற்கு மன்னிப்புக் கோரும்." -நபியவர்கள் சொன்னார்கள்!

"இல்லை... நான் செய்தது கொடிய குற்றம். அதை இறைவன் மன்னிக்க வேண்டுமாயின் நான் உயிர் துறக்க வேண்டும்."

"அப்படி என்ன குற்றம் செய்தீர்?"

"ஒரு பெண்மணியைத் தவறான முறையில் புணர்ந்து விட்டேன்."

"அப்படியா!"... நபி (ஸல்) அவர்கள் திகைத்தார்கள். இத்தகைய குற்றம் புரிந்தவர்கள் எத்தகைய தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று நபி (ஸல்) அவர்களே விளக்கியிருக்கிறார்கள். இவ்விதமான குற்றத்தை ஒருவன் செய்துவிட்டால், அவனைப் பூமியில் கழுத்துவரை புதைத்து, கல்லாலடித்தே சாகடிக்கவேண்டும் என்ற சட்டம் அப்போது அமுலிலிருந்தது.

மாயிஸ் தொடர்ந்து பேசினார்:

"என் குற்றத்திற்கான தண்டனையை அனுபவிக்கவே நான் வந்திருக்கிறேன். எனக்குத் தண்டனையளித்து என் பாவத்தை அழியுங்கள்!"

நபி (ஸல்) அவர்கள் சற்று நேரம் யோசித்தார்கள். மாயிஸ் உண்மையிலே தவறு செய்திருந்தால் அவர் தண்டனை அனுபவிக்க வேண்டியதுதான். அப்படி அவர் குற்றம் புரியாத வராயிருந்தால்... அப்படியானால் அவன் ஏன் பொய் சொல்ல வேண்டும்? ஒரு வேளை வாழ்க்கையில் ஏற்பட்ட விரக்தியாக இருக்குமோ? எப்படியாவது உயிரைப் போக்கிவிடுவது என்ற தீர்மானத்திற்கு வந்துவிட்டாரோ? அப்படியானால் அவருக்கு அவகாசமளிப்பது அவசிய மாயிற்றே! அதன் பின்னராவது அவர் மனதை மாற்றிக் கொள்ளமாட்டாரா? தீர்மானத்தைத் திருத்திக் கொள்ள மாட்டாரா?

"மாயிஸ்! இன்று உமக்குத் தண்டனையளிக்க முடியாது. நாளை வாரும்" என்றார்கள் நபி (ஸல்) அவர்கள். மாயிஸ் சளைக்கவில்லை. மறுநாள் அவர் வரத் தவறவில்லை. ஆனால் அண்ணலவர்கள் மறுபடியும் ஒத்திப் போட்டார்கள். "இன்று முடியாது நாளை வாரும்!" என்றார்கள்.

இப்படியாக மூன்று நாட்கள் சென்று மறைந்தன. ஆனால், மாயிஸ் தம் தீர்மானத்தை மாற்றிக்கொள்ளவில்லை. எள்ளளவும் தம் வார்த்தையைத் திருத்தவில்லை. "நான் குற்றம் புரிந்தது உண்மை. அதற்குரிய தண்டனை கிடைக்க வேண்டும்" என்று எல்லோர் முன்னிலையிலும் கூறினார்.

நான்காம் தினமும் திரும்பிற்று. நபி (ஸல்) அவர்கள் தண்டனைக்கான ஏற்பாடுகளைச் செய்தார்கள். அவர்களுக் கெதிரில் மாயிஸ் கழுத்துவரை புதைக்கப்பட்டிருந்தார். அவர்முகம் அப்போது எப்படிப் பிரகாசித்தது! செய்த குற்றத்தை நபி (ஸல்) அவர்களிடம் கூறிப் பிடிவாதமாகத் தண்டனையை அடையப்போவதில்தான் அவருக்கு எத்துணை மகிழ்ச்சி!

அடுத்த சில விநாடிகளில் நாலாபுறமிருந்தும் கற்கள் பறந்து வந்து அவரைத்தாக்கின. உதிரம் பீரிட்டடித்தது. அவரது உயிர் கொஞ்சம் கொஞ்சமாகப் பிரிந்தது. சற்று நேரத்திற்கெல்லாம் அவர், தமக்குரிய தண்டனையை உரிமையோடு பெற்றுக் கொண்டு இறையடி சேர்ந்தார்.

இவ்வாறு அவர் நடந்து கொண்டதை நீ 'பைத்தியக் காரத்தனம்' என்று எண்ண ஆரம்பித்துவிடாதே! அப்படி நீ எண்ண வேண்டும் என்று நான் இதைக் குறிப்பிடவில்லை. அவர் குற்றம் செய்தார். சாதாரணக் குற்றமா செய்தார்? கொடிய குற்றமல்லவா அவர் செய்து விட்டார். ஆனால், அதை அவர் மறைத்திருக்கலாம்; அதனால் அவர் உயிரும் தப்பியிருக்கும். எனினும் அவர் குற்றத்தை மறைக்கவில்லை. அவரால் மறைக்க முடியவில்லை. செய்த குற்றத்திற்குத் தண்டனை அடைந்தே தீர வேண்டும் என்னும் சட்டம் அவரை உந்தித் தள்ளிற்று. இது எவ்வளவு சிறந்த குணம்! இத்தகைய குணம் படைத்த மனிதன் ஒருவனை இன்று காண முடியுமா? இவ்விதக் குணம் ஒவ்வொருமனிதரிடமும் இருந்து விட்டால், ஆகா, உலகம் எவ்வளவு ஒழுங்காயிருக்கும்! நீதி மன்றங்களுக்கும் சிறைச் சாலைகளுக்கும் தேவையே இராதே!

இன்னுமொரு சம்பவத்தையும் தருகிறேன். அதையும் நினைவில் வைத்துக் கொள்!

ஒரு நாள் நபி (ஸல்) அவர்களிடம் காமிதிய்யா என்ற ஒரு பெண்மணி வந்தாள். "அஸ்ஸலாமு அலைக்கும்" என்றாள்.



"வ அலைக்கு முஸ்ஸலாம், வரஹ்மத்துல்லாஹ்" என்று நபி (ஸல்) அவர்கள் பதிலிறுத்தார்கள்.

"நபி (ஸல்) அவர்களே! நான் விபச்சாரம் செய்து விட்டேன். அதனால், நான் இப்போது கர்ப்பவதியாயிருக் கிறேன். தயவு செய்து எனக்குத் தண்டனை அளியுங்கள். இவ்வுலகத் தண்டனையைப் பெற்றாவது மறுமை தண்டனையிலிருந்து தப்புகிறேன்..." என்றாள் காமிதிய்யா.

"ஆம், உண்மைதான். ஆனால் இப்போது நீ தண்டனை பெற முடியாது. ஏனெனில் குற்றம் புரிந்தது நீதான். இக்குற்றத்திற்கு உனக்கு மட்டுமே தண்டனை கிடைக்க வேண்டும். இப்போது உன்னுடன் இன்னொரு உயிருமல்லவா சேர்ந்திருக்கிறது! உன் வயிற்றிலிருக்கும் மகவு எவ்விதக் குற்றமும் செய்யவில்லையே. ஆகவே, குழந்தையை பெற்றெடுத்ததும் வா!" என்று நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் பதிலிறுத்தார்கள்.

சில நாட்களுக்குப் பின்னர் காமிதிய்யா மீண்டும் வந்தாள் "இதோ, நான் பெற்றக் குழந்தை, இப்போதாவது எனக்குத் தண்டனை தாருங்கள்!" என்றாள்.

நபியவர்கள் பதில் கொடுத்தார்கள்: "நீ தண்டனை பெற வேண்டியவள்தான்; நீ தண்டனை பெற்றே தீர வேண்டும். இதை நீ விரும்பினாலும் சரி விரும்பாவிட்டாலும் சரி. உனக்குக் கட்டாயம் தண்டனையளிக்கப்படும். ஆனால், இப்போது தண்டனையடைந்து மாண்டுவிட்டால் இந்தப் பச்சிளங் குழந்தையை யார் கவனிப்பது? தாய்ப் பாலுக்காக அது அலறும் போது அதை எப்படிச் சமாதானப் படுத்த முடியும்? எனவே, பால்குடிப் பிராயமெல்லாம் கழிந்த பிறகு நீ தண்டனை பெறலாம். போய் வா!"

சில வருடங்கள் சென்று மறைந்தன. இந்தச் சம்பவமும் மக்களின் உள்ளங்களை விட்டு மறைந்துவிட்டது. ஆனால் அந்தப் பெண்மணி மட்டும் மறக்கவில்லை. நபியவர் களுக்கெதிரில் வந்து நின்றுவிட்டாள்.

காரியங்கள் நடந்தன; கற்கள் பறந்தன. காலித் பின் வலீத் (ரலி) அந்த இடத்திற்கு வந்தார். ஒரு கல்லை எடுத்து வீசி எறிந்தார். அது காமிதிய்யாவின் மண்டையைத் தொட்டுப் பார்த்தது; உதிரம் பீரிட்டு வெளியேறியது. அந்த உதிரத்தில் கொஞ்சம் காலிதின் முகத்திலும் பட்டுவிட்டது. காலித் முகத்தைச் சுளித்தார்; அவளைத் திட்டினார்.

"அவளைத் திட்டாதீர்! அவள் இப்போது செய்யும் தௌபா (பாவ மன்னிப்புக் கோரிக்கை) மகத்தானது. மிகவும் உயர்ந்தது" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

பின்னர் அவள் நல்ல முறையில் அடக்கம் செய்யப்பட்டாள்.

உன் வாழ்க்கையை நீ யோசித்துப்பார்! வாலிப வயதிலிருந்து நீ செய்துவந்த அநியாயங்களை எல்லாம் எழுதி வைத்துக்கொள்! அதைக் கையில் வைத்துக் கொண்டு, ஊர் ஊராகச் சென்று, உன்னால் நட்டமடைந்தவர்களை எப்படியாவது கண்டுபிடித்து, அவர்களின் நட்டஈட்டை நிறைவேற்று!

இம்முறையால் அநியாயக்காரர்கள் பெரிதும் பாதிக்கப் படுவார்கள். ஏனெனில் பல இடங்களுக்கும் அலைந்து சம்பந்தப்பட்டவர்களைக் கண்டுபிடிப்பது அவர்களால் முடியாத காரியம். இத்தகையவர்கள் தங்கள் குற்ற நிவர்த்திக்காக தங்கள் ஆயுள் பூராவையும் வணக்கத்தில் செலவிடத் தயாராயிருக்க வேண்டும். அவர்கள் எத்தனை ஆண்டுகள் அட்டூழியம் புரிந்தார்களோ, அத்தனை ஆண்டு களாவது அவர்கள் நன்மையைச் செய்ய வேண்டும். ஆனால், இதுவும் எத்தனையோ சமயங்களில் நடக்காமல் போய் விடுகிறது. ஏனெனில், கழிந்துபோன நாட்களைவிட மீதி யிருக்கும் நாட்கள் அதிகம் என்று நிச்சயமாகக் கூற முடியாது.

நீ எப்போதாகிலும், ஏதேனும் சில பொருள்களைக் கண்டெடுத்தால், அவற்றை உரிமையாளனிடம் சேர்த்து விடு! உரிமையாளன் யார் என்று உனக்குத் தெரியாவிட்டால், அவற்றை தர்மம் செய்துவிடு!

உன்னிடம் திரண்ட செல்வமிருக்கலாம். ஆனால் அந்தச் செல்வத்தில் பாதியளவு 'குறுக்கு வழியில்' சம்பாதிக்கப்பட்ட பொருளாக இருக்கும். அப்படியானால் அந்த அளவை நீ தான தர்மத்தில் செலவிடு!

இவை யாவும் உன் பாவ மன்னிப்புக்குரிய வழிகள். இவற்றை நீ விட்டுவிட்டால் உனக்கு வேறு வழி கிடைப்பது கஷ்டம். உன் வாழ்க்கையில் எத்தனையோ வருடங்கள் சென்று விட்டன. அவை திரும்ப வரப்போவதில்லை. அதை நீ எதிர்பார்க்கவுமில்லை. ஆனால் உனக்கு எப்போது மரணம் வரும் என்று சொல்ல முடியுமா? அது எப்போதும் வரலாம்



அடுத்த விநாடியே உன்னை மரணம் பிடித்துக் கொள்ளலாம். அப்படியானால், நீ செய்த குற்றங்களை எப்படி அழிப்பாய்? தூண் போன்ற பாவத்தை துரும்பு போன்ற நன்மை அழிக்குமா? சிந்தித்து முடிவு செய்! நேரத்தை வீணாக்காது காரியத்தைக் கவனி!

நீ பாவமன்னிப்புக் கோர முற்படும்போது முக்கியமாக உணவின் விஷயத்தில் கவனம் செலுத்து! கூடாத உணவை எக்காரணம் கொண்டும் உட்கொள்ளாதே! ஏனெனில், கூடாத உணவை உட்கொள்வதுதான் சகல பாவங்களுக்கும் வேர் போன்றது. கூடாத (ஹராமான) உணவை உட்கொள்பவரின் பாவ மன்னிப்பு ஏற்றுக் கொள்ளப்படுவது சிரமமே. அடுத்து, நீ இச்சையை அடக்கியாள வேண்டும்; உடை, உணவு, காமம் முதலிய சகல காரியங்களையும் சீருடன் கவனிக்க வேண்டும்.

ஓர் அறிஞர் கூறினார்:

"ஒரு மனிதன், தன் இச்சையை அடக்கியாண்டு, இறைவனின் பாதையில் தன் உள்ளத்தை ஏழு தடவை திருப்பி விட்டால் அவனை இறைவன் மேற்கொண்டு சோதனை செய்ய மாட்டான்."

மற்றோர் அறிஞர் கூறினார்:

"ஒரு மனிதன், தன் பாவத்திற்கு மன்னிப்புக் கோரிவிட்டு, நேரிய பாதையில் ஏழு ஆண்டுகளை எப்படியாவது கழித்துவிடுவானாயின், அவன் பின்னர் பாவத்தின் பக்கம் திரும்பியும் பார்க்கமாட்டான்."

இவற்றை எல்லாம் நன்கு கவனித்து, உன் வாழ்க்கைக் கான பாதையை வகுத்துக்கொள்!

பாவ மன்னிப்பில் ஈடுபடும் நீ, உன் மீது கடமையான வற்றையும், விலக்கப்பட்டவற்றையும் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும். ஏனெனில், நன்மை எது, தீமை எது என்று உணராதவன், எப்படி நேர்மையான பாதையில் நடப்பான்? அவனால் எப்படி நடக்க முடியும்? நேர்மை யானது என்று எண்ணிக் கொண்டு அவன் கொலை செய் தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இதே போன்று கூடாத செயல் என்று எண்ணிக் கொண்டு அவன் தொழுவதையே நிறுத்திவிட்டாலும் ஆச்சரியப்படுவதற் கில்லை.

# 10. மனோ இச்சைக்கு முற்றுப்புள்ளி

மேலே நான் எழுதியவற்றை நீ நன்றாக அறிந்திருப்பாய் என்றே எண்ணுகிறேன். மறுமை வாழ்க்கையைச் சிந்திப்பது உனக்கு மிகவும் முக்கியம். குறிப்பாக இறை சந்திப்புக் குறித்தே உன் சிந்தனையை ஓட்டு நீ வாலிபனாயிருப்பதால், மறுமையில் கிடைக்கும் பெண்களைப் பற்றியும், இதர இன்பங்களைப் பற்றியும் சிந்திக்காதே! ஏனெனில், சில நேரங்களில் உன் உள்ளம் எதிர்த்திசையில் ஓட ஆரம்பித்து விடும். "மறுமையை ஏன் எதிர்பார்க்க வேண்டும்? அதே இன்பங்கள் இங்கேயும் இருக்கத்தானே செய்கின்றன. உள்ளதை விட்டுவிட்டு இனி வரப்போவதற்காக ஏன் ஏங்க வேண்டும்?" என்று குறுக்குக் கேள்வி கேட்க ஆரம்பித்துவிடும். அது எதில் போய் முடியும் என்று நான் சொல்ல வேண்டியதில்லை.

இதே போன்று, பாவங்களைப் பற்றியும் சிந்தித்து வை! ஆனால், சில நேரங்களில், அந்தச் சிந்தனையே உன் உள்ளத்தைக் கிளறிவிடவும் செய்யலாம். எனவே, பாவச் செயல்களைக் கட்டோடு மறந்துவிடுவது நல்லது.

நீ கூறலாம்:

"மனோ இச்சையைக் கட்டோடு அறுத்தெறிவது சாத்தியமில்லை. அது மனிதனால் செய்ய முடியாத காரியம்."

இப்படியும் சிலர் எண்ணத்தான் செய்கிறார்கள். இச்சையைக் கட்டோடு ஒதுக்கிவிட முடியுமா என்று சிலர் சோதித்துப் பார்த்தார்கள். காம உணர்ச்சிக்கு முற்றுப் புள்ளி வைத்து விடப் பிரயத்தனப்பட்டார்கள். ஆனால், அவர்களால் அதில் வெற்றி காண முடியவில்லை. "காம உணர்ச்சியை விட்டு விலகிப்போவது மனிதனின் ஆற்றலுக்குப் புறம்பானது" என்ற முடிவுக்கு வந்தார்கள். மார்க்கத்தில் அருளப்பட்டதை மறுத்தார்கள். "மனோ விருப்பத்திற்கொப்ப நடப்பதே உயரிய மார்க்கம்" என்று மார்தட்டிப் பேசினார்கள். என்ன மடமை! என்ன வழிகேடு!!

இதைப்பற்றிய முழு விபரத்தை அறிய விரும்பினால், என்னால் எழுதப்பட்ட ஆத்மாவின் பயிற்சி என்னும் நூலை வாசித்துப் பார்.



இன்னுமொரு வினா:

"ஒரு மனிதன் எப்போதும் தன் பாவங்களைப் பற்றியே சிந்திக்கிறான்; மனம் வெந்து உருகுகிறான்; பாவங்களை எண்ணிப் பார்ப்பதையே தன் குறிக்கோளாகக் கொண்டிருக்கிறான். மற்றொருவன் இவனுக்கு நேர் எதிரானவன். அவன் தன் பாவத்தை எண்ணிப் பார்ப்பதே கிடையாது. இவ்விருவரில் யாருக்கு விரைவில் இறை மன்னிப்புக் கிடைக்கும்?"

இதுவும் அபிப்பிராய பேதத்திற்குரிய பிரச்சனையே. இந்த விஷயத்தில் ஏகோபித்த அபிப்பிராயம் கொண்ட பதில் கிடையாது. "குற்றத்தை எண்ணி எண்ணி வருந்துவதுதான் பாவ மன்னிப்பின் அடிப்படை" என்று சிலர் கூறுகிறார்கள்.

"இல்லை... இல்லை; செய்த குற்றத்தை மறந்து விட்டு, நன்மையான காரியங்களில் ஈடுபடுவதுதான் பாவ மன்னிப்பு" என்று வேறு சிலர் சொல்கிறார்கள்.

இவ்விரு கூற்றுகளையும் நான் ஒப்புக் கொள்கிறேன். இவ்விரண்டும் நேர்மையான விடைகள்தாம். ஆனால், இவற்றில் எதுவும் முழு விஷயத்தைக் கொடுப்பதாக இல்லை. ஏனெனில், மெய்ஞ்ஞானிகள் பொதுவாக முழு விவரத்தைக் கூற மாட்டார்கள். அவர்களில் ஒவ்வொருவரும் தாம் எட்டிப் பிடித்திருக்கும் உயரிய அந்தஸ்தின் அடிப்படையில் தான் பேசுவார்கள். எனவே, அவர்களில் சிலரது விடை வேறு சிலரது விடைக்கு எதிராக அமைந்துவிடுகிறது.

இவற்றையெல்லாம் நன்கு அறிந்தவன் இறைவன் ஒருவன்.

# 11. பாவ மன்னிப்புக் கோருபவர்களின் பிரிவுகள்

இப்போது பாவ மன்னிப்புக் கோருபவர்கள் எத்தனை பிரிவினராகப் பிரிகிறார்கள் என்று ஆராய்வோம். பொதுவாகப் பாவமன்னிப்புக் கோருபவர்கள் நான்கு பிரிவுகளில் கட்டுப்பட்டு விடுகின்றனர். அவற்றை வரிசையாக விவரிக்கின்றேன்.

*1.* இவர்கள் தங்கள் குற்றங்களுக்கு இறைவனிடம் பாவ மன்னிப்பு கோருவார்கள். எப்படியாவது பாவ மன்னிப்பைப் பெற்றுவிட வேண்டும் என்று துடிப்பார்கள். அப்படி அவர்களுக்கு மன்னிப்புக் கிட்டிவிட்டால், அவர்களுக் கேற்படும் மகிழ்ச்சிக்கு எல்லையே இருக்காது. ஆனால், இவர்கள் மறுபடியும் ஒரு தடவை பாவ மன்னிப்புக் கோர வேண்டிய நிர்பந்தத்தை உண்டாக்கிக் கொள்ள மாட்டார்கள். தங்கள் மரணம் வரை நேரிய பாதையில் நடந்து, இறையருளைப் பெற்று இன்புறுவார்கள். இது மட்டுமல்ல, இவர்கள் தாங்கள் செய்து வந்த கொடிய செயலையும் எண்ணிப் பார்க்கத் தவற மாட்டார்கள். அவர்கள் தங்கள் வாழ்க்கையில் தீமையைத் திரும்பியும் பார்க்க மாட்டார்கள். என்றாலும், இவர்களும் சாதாரண மனிதர்களே; நபிகள் அல்ல. ஆகையால், சாதாரண மனிதனால் செய்யாதிருக்க முடியாத சில குற்றங்களை மட்டும் விரும்பாமலே செய்வார்கள்.

இத்தகையவர்கள் நபித்துவப் பதவியை எட்டிப் பிடித்து விட முடியாது. என்றாலும், இவர்களின் பாவ மன்னிப்பு மிகவும் உயர்ந்தது; சிறந்தது. இவர்கள் சகலரையும் விட முந்தியவர்கள். இவர்களைக் குறித்துத்தான், "மக்களின் போக்கை விட்டுத் தனித்து நின்று இறை தியானத்தில் ஈடுபட்ட இவர்கள் எல்லோரிலும் முந்தியவர்கள்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இப்பிரிவினர் தங்கள் காம உணர்ச்சியை வெகு தூரம் அடித்து விரட்டிவிடுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. இவர்களின் இறை தியானத்திற்கெதிரில், இவர்களின் தீய உணர்ச்சிகளெல்லாம் மண்டியிட்டுவிடுகின்றன;



இறைவனுக்கு அஞ்சி, காமத்தை வெறுக்கும் இவர்கள், மனத்தோடு போரிட்டு பெருத்த சிரமத்துடன் வெற்றி காண்பார்கள்.

இவர்கள் சிறந்தவர்கள்; உயர்ந்தவர்கள், ஏனெனில், இவர்கள் தீமைகளெல்லாம் நன்மைகளாலேயே அழிக்கப் படுகின்றன; உள்ளத்தை அடக்கியாளும் தன்மையால் பாவங்கள் ஒடுக்கப்படுகின்றன.

இதனால் தான் சிலர் கூறுகிறார்கள்:

"ஒரு பெண்ணை ஒருவன் தவறான முறையில் புணர்ந்து விட்டால், அதற்கு அவன் வெறுமனே பாவ மன்னிப்புக் கேட்டால் மட்டும் போதாது. மேற்குறிப்பிட்ட அதே குற்றத்திற்குரிய சகல காரணங்களையும் ஏற்படுத்தி, குற்றத்தில் ஈடுபடாமல் மனத்தை அடக்கியாள வேண்டும்."

இது உயர்ந்த முறைதான். ஆனால், சாதாரண மனிதனால் இதைப் பின்பற்றி நடக்க முடியாது. குற்றம் செய்வதற்கான சகல காரணங்களும் ஏற்பட்டுவிட்டால் அவனால் தன் உள்ளத்தையும், உணர்ச்சியையும் அடக்கி யாள்வது சிரமமாகப் படலாம்; செயலாற்ற முடியாமலும் போகலாம். ஆகவே, பலவீனர்கள் இம்முறையை விட்டுவிட்டு தங்கள் மனங்களை அடக்கியாள அவர்களால் இயன்ற முயற்சியைச் செய்ய வேண்டும். இதன் பொருட்டால் அவர்களின் குற்றங்கள் மன்னிக்கப்படலாம். அவர்களின் உள்ளத்திற்கு 'அமைதியான உள்ளம்' என்று பெயரிடலாம். இதை அரபியில் 'அந்நப்ஸுல் முத்மயின்னா' என்று சொல்லுவார்கள்.

*2.* இப்பிரிவினர் தங்கள் குற்றங்களுக்குப் பாவ மன்னிப்புக் கோருவார்கள்; நன்மையான காரியங்களையும் செய்வார்கள். தொழுகை, நோன்பு, ஜகாத், ஹஜ் முதலான எல்லாக் காரியங்களையும் செவ்வனே செய்து முடிப்பார்கள். கள் குடித்தல், கொலை செய்தல், கொள்ளை அடித்தல் முதலான தீய காரியங்களிலிருந்து விலகியிருப்பார்கள்.

ஆனால், இவர்கள் சில சமயங்களில் குற்றம் புரிவது முண்டு. வேண்டுமென்றே குற்றம் புரியாவிட்டாலும் குற்றம் புரிந்தே தீர வேண்டும் என்னும் நிர்ப்பந்த நிலை ஏற்பட்டு விடுவதுமுண்டு.

இவ்வாறு இவர்களுக்கு நிர்பந்தநிலை ஏற்படும் போது இவர்கள் பெரிதும் வருந்துவார்கள்; தங்களையே குறை கூறிக் கொள்வார்கள்; 'இனிமேல் இத்தகைய நிர்ப்பந்தம் ஏற்படுவதற்கு நாம் வசதியளிக்கக் கூடாது' என்று திடம் பூணுவார்கள்.

இத்தகைய மனப்பான்மை நிரம்பிய உள்ளத்திற்கு இகழும் மனம் என்று பெயரிடலாம். இதை அரபி மொழியில் 'அந்நப்ஸுல் லவ்வாமா' என்று குறிப்பிடுவார்கள். ஏனெனில், இந்த உள்ளம், குற்றம் செய்து விட்ட தன் எஜமானனை இகழ்ந்து கொண்டேயிருக்கும்.

இப்பிரிவினர் முதல் பிரிவினரைவிடத் தாழ்ந்தவர்களே. எனினும், இவர்களின் பதவியும் உயர்ந்ததே. இந்நிலைமை தான் பொதுவாக எல்லோரிடமும் காணப்படுகிறது. மனிதனின் இயற்கையில் தீமை செய்யும் குணமும் கலந்தே இருக்கிறது. இறைவன் மனிதனை அவ்வாறு படைத்து விட்டான். இக்குணத்தைப் பிடுங்கி எறிந்து விட்டு நேரிய பாதையில் நடப்பவர்கள் மிகவும் சொற்பம். ஒவ்வொரு மனிதனும் தன் உளவலிமையால் இக்குணத்தை வென்று அதை அடிமையாக்குவது அவசியம். சகல பாவங்களிலிருந்தும் விலகியிருப்பது சாத்தியமில்லாவிடினும், இயன்ற அளவு விலகியிருப்பது சாத்தியமே.

இவ்வாறு, சில பாவங்களை மட்டும், விட்டுவிட்டு மற்றப் பாவங்களை - நிர்ப்பந்த நிலையில் - செய்யும் ஒரு மனிதனின் பாவ மன்னிப்பு எப்படி ஏற்றுக் கொள்ளப்படும் என்று சந்தேகப்படாதே!

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"முஃமின் நெற்கதிருக்கொப்பானவன். அது சில நேரங்களில் இடப்பக்கம் சாயும்; வேறு சில நேரங்களில் வலப்பக்கம் சாயும்."

இதை ஆதாரமாக வைத்துக் கொண்டு ஆராய்ந்தால், உன் சந்தேகத்திற்கு விடை கிடைத்துவிடும். மனிதனால் குற்றமே செய்யாமலிருக்க முடியாது. அவன் செய்த ஓரிரண்டு பாவங்களினால் அவன் பாவ மன்னிப்பு மறுக்கப்படாது என்ற முடிவிற்கு வருவாய்.

இறைவன் கூறுகிறான்:



"பாவ மன்னிப்பு வேண்டுபவர்களுக்கு, அவர்கள் பொறுமையை மேற்கொண்ட காரணத்தினால் இரட்டிப்பான கூலியுண்டு. அவர்கள் தீமைக்குப்பின் நன்மையைச் செய்து பரிகாரம் தேடுவார்கள்."

இவ்வசனத்தில் இறைவன் பாவ மன்னிப்புக் கோருபவர்களை தீமைக்குப் பின் நன்மையைச் செய்பவர்கள் என்று குறிப்பிடுகிறானே தவிர, 'தீமையே செய்யாதவர்கள்' என்று குறிப்பிடவில்லை.

3. இவர்கள் தங்கள் குற்றங்களுக்கு இறைவனிடம் மன்னிப்புக் கோருவார்கள்; நன்மையானவற்றைச் செய்வார்கள். சில நாட்கள் வரை குற்றம் புரியாமலும் இருப்பார்கள். ஆனால் சில நாட்கள் சென்ற பிறகு இவர்களின் தன்மை மாற்றமடையும். சில காரியங்களில் இவர்கள் காம வசப்பட்டு வேண்டுமென்றே குற்றம் புரிவார்கள். நிர்ப்பந்தத்தினாலல்ல!

என்றாலும், இவர்கள் நன்மையான காரியங்களைத் தொடர்ந்து செய்வார்கள்; பெரும்பாலான பாவங்களிலிருந்து விலகியிருப்பார்கள். இவர்கள் காமவசப்பட்டுக் குற்றம் புரியும்போதெல்லாம் மனம் புழுங்குவார்கள்; "இறைவன் எனக்கு இந்த உணர்ச்சியை அடக்கியாளும் ஆற்றலைக் கொடுத்தால், அதன் உதவியால் நான் நேரிய பாதையில் நடப்பேன்" என்று எண்ணுவார்கள்; குற்றத்தைச் செய்து முடித்த பிறகு கைசேதப்படுவார்கள். நான் இக்குற்றத்தைச் செய்யாதிருக்கக் கூடாதா? இதற்கு நான் பாவ மன்னிப்புக் கோரப்போகிறேன்" என்று சொல்லிக் கொள்வார்கள்.

ஆனால், இவர்கள் உடனே குற்ற நிவர்த்தி செய்து கொள்ளமாட்டார்கள்; ஒவ்வொரு நாளாக ஒத்திப்போடுவார்கள். இவர்களைப் பற்றித்தான் இறைவன், "அவர்கள் தங்கள் குற்றங்களை உணர்கிறார்கள். ஆனால் அவர்கள் நன்மையான செயல்களைத் தீமையான செயல்களோடு கலந்து விடுகிறார்கள்" என்று குறிப்பிடுகிறான்.

இவர்கள் நன்மையைத் தொடர்ந்து செய்தாலும், ஓரளவு தீமையை விட்டு விலகியிருந்தாலும் இறைவன் இவர்களின் குற்றங்களை மன்னித்துவிடலாம். ஆனால் பாவ மன்னிப்பை இவர்கள் ஒத்திப் போடும் காரணத்தினால் இவர்களின்

முடிவு அபாயகரமாக மாறலாம். இவர்கள் தங்கள் மரணத்திற்கு முன்பே பாவ மன்னிப்புக் கோரி இறையருளை அடைவார்கள் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்? இவர்கள், தங்களை மரணம் அணுகுமுன் குற்ற நிவர்த்தி பெற்று விட்டால், இவர்கள் ஓரளவு வெற்றி காணலாம். இல்லையேல், இவர்கள் நிரந்தர மனத்துயருக்கு இரையாக நேரிடும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"ஒரு மனிதன் நன்மையான காரியங்களைச் செய்கிறான்; 'இவர் சுவர்க்கவாதி' என்று மக்கள் தீர்மானிக்கும் அளவிற்கு அவன் நன்மையிலேயே உழல்கிறான். ஆனால், கடைசி நேரத்தில் அவன் செய்ய ஆரம்பித்த தீய செயல்களால் அவன் நிரந்தர நரகவேதனைக்கு ஆளாகிறான்."

ஆகையால், நீ ஒரு விநாடியையும் வீணாகக் கழிய விடாதே! உன் குறிக்கோளை அடையச் செயலாற்று! இல்லையேல் நீ பின்னர் கைசேதப்படுவாய். ஆனால் அந்தக் கைசேதத்திற்கு உன் விதியை மாற்றியமைக்கும் ஆற்றல் கிடையாது.

4. இவர்கள் பாவ மன்னிப்புக் கோரிவிட்டுச் சில நாட்கள் ஒழுங்காக இருப்பார்கள். பின்னர், பாவம் செய்யத் தொடங்கிவிடுவார்கள்; தொடர்ந்து குற்றம் புரிவார்கள். அதே சமயத்தில் இவர்கள் பாவ மன்னிப்புக் கோரவு மாட்டார்கள்; தங்கள் செயல்கள் குறித்து வருந்தவுமாட்டார் கள். எதிராக, பாவச் செயல்களில் மூழ்கிக் கிடப்பார்கள்; நன்மையைக் கண்டு மிரண்டோடுவார்கள்.

இத்தகைய செயல்களை உண்டாக்கும் ஆத்மாவிற்கு 'பேராசை கொண்ட ஆத்மா' என்று பெயரிடலாம். இதை அரபி மொழியில் 'அந்நப்ஸுல் அம்மாரா' என்று சொல்வார்கள். ஏனெனில், இந்த ஆத்மா தீமையைச் செய்வதில் பேராசை கொண்டலைகிறது. ஏதோ ஒரு சில பாவங்களைச் செய்துவிட்டு இது திருப்தியடைவதில்லை. உலகிலுள்ள சகல குற்றங்களையும் புரிய வேண்டும் என்று விரும்புகிறது; அதற்கு முனைந்தும் வருகிறது.

இவர்கள் மரணத்தின் போது எந்த நிலையை அடைவார்கள் என்று சொல்ல முடியாது. ஈமான் பறிக்கப்பட்டு மரணித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.



இவர்களின் காரியம் இறைவனின் தீர்ப்பைப் பொறுத்தது. அவன் விரும்பினால், இவர்களை நல்ல முறையில் மரணிக்கச் செய்யலாம். இல்லையேல், இவர்கள் நிரந்தரக் கைசேதத்திற்குத் தயாராக இருக்க வேண்டும். ஆனால், பாழடைந்த வீட்டினுள் நுழைந்தவன் புதையலைக் கண்டெடுப்பதுபோல், இவர்களுக்குப் பாவமன்னிப்புக் கிடைத்துவிடுவதும் சாத்தியமே. இறைவழி பாட்டினால் பாவ மன்னிப்புத் தேடுவது, திரைகடலோடி திரவியம் தேடுவதற்கொப்பாகும். தவறான செயல்களைக் குவித்து வைத்துக் கொண்டு பாவமன்னிப்பை எதிர்பார்ப்பது பாழடைந்த இடத்தில் புதையலை எதிர்பார்ப்பதற் கொப்பாகும்.

ஒருவன் தன் வீட்டை இடித்துவிட்டான் என்று வைத்துக் கொள்! அவன் கையிலிருந்த பொருள்களை யெல்லாம் வீசியெறிந்துவிட்டான். தான் பட்டினியாய்க் கிடப்பதோடு, தன் இன பந்துக்களையும் பசியால் வாடி வதங்கச் செய்துவிட்டான். அதே சமயத்தில் அவன், "நான் இறைவனின் அருளை எதிர்பார்க்கிறேன்; அவன் எனக்குப் பொருளளிப்பான்" என்று சொல்லத் தவறுவதில்லை. அவன் இப்படி எதிர்பார்ப்பது நடக்காத காரியமல்ல. இறையருள் கிட்டுவது சாத்தியமே. ஆனால், அறிஞர்கள் அவனை எப்படி எடை போடுவார்கள், தெரியுமா? "வடித்தெடுத்த, சுத்தமான முட்டாள்" என்று அவர்கள் சொல்லத் தயங்கமாட்டார்கள்.

இதே போன்று, குற்றங்களிலேயே ஊறிக்கொண்டிருப் பவன் இறை மன்னிப்பை எதிர்பார்ப்பது மடமையாகும்.

ஆனால், இதை மக்கள் உணருவதில்லை. தங்கள் போக்கிலேதான் அவர்கள் போய்க்கொண்டிருக்கிறார்கள். போதாததற்கு அவர்கள் கூறுகிறார்கள்:

"இறைவன் கருணை வள்ளல். அவனுடைய அருளுக்கு நாங்கள் செய்யும் குற்றங்கள் தடையாக நிற்கமாட்டா. அளவிலாத அவனுடைய கொடைக்கு எங்களுடைய குற்றங்கள் எம்மாத்திரம்? அவன் நாடினால் எங்கள் குற்றங்கள் யாவற்றையும் மன்னித்து விடுவான்..." இப்படிக் கூறுபவர்களுக்கு நீ கீழ்க்கண்டவாறு பதிலளி!

"இறைவன் தயாளன். உலகிலுள்ள செல்வங்க ளெல்லாம் அவனுடையதே. அவற்றை அடையும் பொருட்டு

நீங்கள் கடலோடிப் பொருள் தேட வேண்டியதில்லை. ஏனென்னில், நீங்கள் சோம்பேறித்தனமாயிருப்பது அச்செல்வத் திற்குக் குறுக்கே நிற்காது. எனவே, கையைக் கட்டிக் கொண்டு வீட்டிலேயே உட்கார்ந்துகொள்ளுங்கள்! சம்பாதிக்க வேண்டாம்!"

இதிலிருந்து அவர்கள் உண்மையை உணரலாம். இம்மையின் விஷயத்தில் இறைவன் எப்படி நடக்கிறானோ, அப்படித்தான் மறுமையின் விஷயத்தில் நடப்பான். ஏனெனில், இவ்விரு உலகையும் ஆள்பவன் அவன் ஒருவனே. முயற்சியால்தான் எதையும் அடைய முடியும். முயற்சியற்ற வன் பிணத்திற்கு ஒப்பானவன். இம்மை, மறுமை ஆகிய இரு வாழ்க்கைகளிலும் முயற்சிக்கு முக்கியத்துவமுண்டு.

இறைவனே கூறுகிறான்:

"மனிதனுக்கு அவன் முயற்சி செய்வதுதான் கிடைக்கும்."

முயற்சியற்றவர்கள் முன்னேறுவது துர்லபம்.

உன் குற்றத்திற்குப் பாவ மன்னிப்புக் கோரி நீ மீட்சி பெறாவிடில், உனக்கு அடியிற்கண்ட இறை வசனம் மிகவும் பொருத்தமாக இருக்கும்:

பாவிகள் இறைவனிடம் தலைகுனிந்து நிற்பார்கள். 'இறைவா! நாங்கள் இப்போதுதான் உண்மையை அறிகிறோம். எங்களை மீண்டும் உலகிற்கனுப்பு. நன்மையான செயலைச் செய்து உன் அருளுக்கு அருகதையுள்ளவர்களாக ஆகிவிடுகிறோம்' என்று கதறுவார்கள்.

ஆக, அதிகம் எழுதுவதை நான் விரும்பவில்லை. இது வரை நீ உணர்ந்தவற்றை வைத்துக் கொண்டு செயலாற்று!



# 12. குற்றவாளியின் முதற்கடமை

இப்போது ஒரு மனிதன் குற்றம் புரிந்துவிட்டால் அவன் முதற் கடமை என்ன என்று பார்ப்போம்.

ஒரு மனிதன் தன்னை மீறிய காம உணர்ச்சிக்குத் தலைகுனிந்து ஏதோ ஒரு குற்றத்தைச் செய்துவிட்டான் என்று வைத்துக்கொள்! அவனுடைய முதற்கடமை என்ன? அவன் உடனே இறைவனிடம் தன் குற்றத்திற்கு மன்னிப்புக் கோர வேண்டும்; தன் குற்றம் குறித்து வருந்த வேண்டும்; 'இனிக் குற்றம் செய்வதில்லை' என்று சங்கற்பம் செய்துகொள்ள வேண்டும். இது முதற்கடமை.

இக்கடமையைச் செய்துவிட்டு அவன் வெறுமனே இருந்துவிடக்கூடாது. அதைத் தொடர்ந்து தன் இரண்டாம் கடமையையும் நிறைவேற்ற வேண்டும். செய்த குற்றத்தை அழிக்க வல்ல நன்மையைச் செய்வதுதான் இரண்டாம் கடமை. இக்கடமையிலும் அவன் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும்.

இக்கடமையைச் செய்வதற்குப் பல்வேறு வழிகள் உள்ளன. குற்றம் செய்தவன், இறைவனிடம் மண்டியிட்டு, சிரம் குனிந்து பாவமன்னிப்புக் கோர வேண்டும். தப்பியோடிய அடிமையொருவன், தன் எஜமானனிடம் எப்படி நடந்து கொள்வானோ, அப்படியே அவன் இறைவனிடம் நடந்து கொள்ள வேண்டும். குற்றம் புரிந்து விட்டுத் தப்பியோடி விட்ட ஓர் அடிமை, தன் எஜமானனைக் காணும்போது அவனால் நிமிர்ந்து பார்க்க முடியாது. அதே போன்றுதான் குற்றவாளி இறைவனிடம் நடந்து கொள்ள வேண்டும்.

அடுத்து அவன் தன் குற்றத்தை வாயாலும் சொல்ல வேண்டும். அப்போதுதான் அவன் தன் குற்றத்தை உணர்ந்தான் என்று நன்றாகத் தெரியும். "இறைவனே! நான் எனக்கே தீங்கிழைத்துக் கொண்டேன். நான் செய்த குற்றங்களை இப்போது நான் நன்கு உணர்கிறேன். பிழை பொறுக்கும் நாயகனே! என் குற்றத்தை மன்னித்தருள்!" என்று அவன் வல்லவனிடம் முறையிட்டுக் கதற வேண்டும்.

'தியானமும் இறைஞ்சலும்' என்னும் நூலில் விவரித்தது போல, அவன் தன் பாவ மன்னிப்புக்காக எல்லா வழிகளிலும் இறைஞ்ச வேண்டும்.

நீ ஏதேனும் குற்றம் புரிந்துவிட்டால் அக்குற்றத்தை அகற்றும் பொருட்டு நீ சில காரியங்கள் செய்ய வேண்டும். நீ செய்த குற்றத்திற்குப் பாவமன்னிப்புக் கோரு! அடுத்த படியாக, பாவத்தை விடுவதற்கான உறுதியை உண்டாக்கிக் கொள்! பின்னர், 'குற்றம் புரியும் குணத்தைக் களைந்தெறிய வேண்டும்' என்று திட்டம் போட்டுக்கொள்! அடுத்து, இறைவனின் தண்டனையையும் நினைவுபடுத்திக் கொள்!

இது மட்டும் போதாது. குற்றத்திற்குப் பின் இறைவனை வணங்கு; அவனிடம் உன் குற்றம் குறித்து இறைஞ்சு; உன்னால் இயன்ற அளவு தான தர்மம் செய்; ஒரு நாளைக்கு நோன்புவை.

இம்முறையினால் உன் பாவம் மன்னிக்கப்படும். இதனால்தான் "இரகசியமாகக் கொடுக்கப்படும் தர்மம் இரவின் குற்றங்களை அழித்துவிடும், பகிரங்கமாகக் கொடுக்கப்படும் தர்மம் பகலின் பாவங்களை ஒழித்துவிடும்" என்ற பழமொழி வழக்கிலிருந்து வருகிறது.

நபி (ஸல்) அவர்களிடம் ஒரு நாள் ஒருவர் கூறினார், "நபியவர்களே! நான் ஒரு பெண்ணோடு சல்லாபம் புரிந்தேன். ஆனால், நான் அவளைப் புணரவில்லை. புணர்ச்சியைத் தவிர்த்து வேறு எல்லாம் செய்தேன். எனக்குரிய தண்டனையை அளியுங்கள்!"

"தொழுதீரா?" என்று நபியவர்கள் கேட்டார்கள்.

ஆம், தொழுதேன்-வந்தவர் கூறினார்.

"நன்மைகள் தீமைகளை அழித்துவிடும்" என்று நபியவர்கள் பதிலளித்தார்கள்.

புணர்ச்சியைத் தவிர்த்து மற்ற மங்கையர் சல்லாபம் அத்தனையும் சிறிய பாவங்களே. எனவே அவை, நன்மை களால் அழிக்கப்பட்டு விடுகின்றன.

நீ உன் உள்ளத்தில் கையை வைத்து உன்னை நீயே சோதித்துப்பார்! நீ செய்த குற்றங்களை அகற்றும் பொருட்டு அதிகமான நன்மையைச் செய்!



ஒரு சந்தேகம்:

"குற்றத்தைத் தொடர்ந்து செய்யும் ஒரு மனிதனின் பாவ மன்னிப்பு எப்படி ஏற்றுக்கொள்ளப்படும்? 'தொடர்ந்து பாவம் செய்து கொண்டு பாவமன்னிப்புக் கோருபவன் இறையச்சத்தைக் கேலி செய்பவனாகிறான்' என்று நபியவர்கள் கூறியிருக்கிறார்கள். 'ஆண்டவனே! என்னை மன்னித்தருள்' என்ற வாக்கியத்திலிருந்து என்னைக் காப்பாற்று என்று சிலர் இறைஞ்சியிருக்கிறார்கள். 'என் பிழையைப் பொறுத்தருள்' என்று கூறுவது பொய்யர்களின் வேலை என்றும் சொல்லப்படுகிறது. "நான் கேட்கும் பாவ மன்னிப்பிற்கே மற்றொரு பாவ மன்னிப்புத் தேவைப் படுகிறது" என்று ராபியத்துல் அதவிய்யா (ரஹ்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்... எனவே, பாவ மன்னிப்பைப் பற்றிய விளக்கம் என்ன?

இந்தச் சந்தேகம் இப்படியே இருக்கட்டும். பாவ மன்னிப்பின் உயர்வை முதலில் பார்ப்போம். பின்னர் தானாக சந்தேகம் தீர்ந்துபோய்விடும். பாவமன்னிப்புக் கோருவதன் உயர்வைக் குறித்து எண்ணற்ற நபிமணிக் கருத்துக்கள் காணப்படுகின்றன. அவற்றை எல்லாம் 'தியானமும் இறைஞ்சலும்' எனும் நூலில் வரைந்திருக்கிறேன்.

இறைவன் கூறுகிறான்:

"அவர்கள் பாவ மன்னிப்புக் கோருபவர்களாயிருக்கும் போது அவர்களை இறைவன் தண்டிக்கமாட்டான்." நபி (ஸல்) அவர்களின் தோழர்களில் சிலர் அடியிற் கண்டவாறு கூறிக் கொண்டிருந்தனர்:

"எங்களிடம் இரண்டு செல்வங்களிருந்தன. ஒன்று, அண்ணல் நபியவர்கள். இச்செல்வம் எங்களைவிட்டு மறைந்து விட்டது. மற்றொன்று பாவமன்னிப்பு, இச்செல்வம் எங்களிடம் இல்லையாயின் நாங்கள் அனைவரும் பாவியாகி விடுவோம்."

இவற்றிலிருந்து பாவமன்னிப்பின் மகத்துவம் வெளிப் படுகிறது. "ஆண்டவனே! என் குற்றத்தை மன்னித்தருள்!" என்று வாயளவில் கூறிவிட்டு, அதைச் செயல் முறையில் கொண்டு வராதவர்களே பொய்யர்கள். அவர்களின் பாவமன்னிப்பைத்தான் சிலர், 'பொய்யர்களின் பாவ

மன்னிப்பு' என்று குறிப்பிடுகிறார்கள். வாயால் பாவமன்னிப்பு கோரி விட்டு அதற்கொப்ப செயலாற்றும் மனிதனுக்கு இது எவ்வகையிலும் பொருந்தாது!

ஹலரத் அலீ (ரலி) அவர்கள் கூறினார்கள்:

"மனிதன் எல்லா நேரங்களிலும் இறைவனோடு தொடர்பு கொண்டிருக்க வேண்டும்; ஒவ்வொரு செயலையும் இறைதியானத்திலேயே செய்ய வேண்டும். அவன் ஏதேனும் தவறிழைத்து விட்டால், உடனே இறைவனிடம் பாவ மன்னிப்புக் கோர வேண்டும். 'இறைவா! நான் தவறிழைத்து விட்டேன். என்னை மன்னித்தருள்வாயாக!' என்று இறைஞ்ச வேண்டும். பின்னர், ஏகனே! உணர்ச்சியைக் கட்டுப்படுத்தி, உள்ளத்தைத் தூய்மைப்படுத்தும் ஆற்றலைத்தந்தருள்' என்று பிரார்த்திக்க வேண்டும். இதில் அவன் வெற்றி கண்டு விட்டால், 'நாயகனே! நான் செய்யும் நன்மையான காரியங்கள் யாவற்றையும் ஏற்றுக் கொள்வாயாக! என்று மன்றாட வேண்டும்."

அலீ (ரலி) அவர்களிடம் ஒருவர், 'நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பாவமன்னிப்புக் கோருபவன் இறைவனின் நண்பன் என்று சொல்லியிருக்கிறார்களே இதன் பொருளென்ன?" என்று கேட்டார்.

அதற்கு அலீ (ரலி) அவர்கள் பதிலளித்தார்கள்: "ஒரு நண்பன் தன் நண்பன் விரும்பாததை எக்காரணம் கொண்டும் செய்ய முன் வரமாட்டான். இதே போன்று, பாவ மன்னிப்புக் கோருபவன் தன் நண்பனான இறைவன் விரும்பாதவற்றை எக்காரணம் கொண்டும் செய்ய முன்வரக் கூடாது."

பாவ மன்னிப்புக் கோருவதில் இரு பயன்கள் உள்ளன:

1. பாவ மன்னிப்புக் கோருவதால் குற்றங்கள் அழிகின்றன. இதனால், குற்றம் செய்தவன் குற்றம் செய்யாதவனாக மாறுகிறான்.

2. இறையண்மையைப் பெறுவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கிறது. இதனால் அவன் இறைவனின் நண்பனாக மாறுகிறான்.

இவ்விரு விளைவுகளுக்கும் எத்தனையோ படிகள் உள்ளன. அவற்றில் சில உயர்ந்தவையாகவும், வேறு சில தாழ்ந்தவையாகவும் இருக்கும். உள்ளத்தினால் பாவ



மன்னிப்புக் கோருவது - இப்படி பாவமன்னிப்புக் கோரும் மனிதன் தொடர்ந்து பாவம் செய்யும் குணம் உள்ளவனா யிருந்தாலும் சரியே, மேற் குறிப்பிட்ட படிகளே முதற் படியாகும். எனவே பாவமன்னிப்பு கோருவதில் எத்தகைய பயனும் இல்லாமல் போய்விடாது. குற்றத்தை செய்து கொண்டே பாவமன்னிப்புக் கோருவதில் என்ன பயன் என்று எண்ண ஆரம்பித்துவிடாதே! ஒரு மனிதன் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும்-அது எவ்வளவு சிறியதாயினும் சரியே-கூலியுண்டு. "ஒருவன் அணுவளவு நன்மை செய்தாலும் அவனுக்கு அதன் கூலியுண்டு" என்ற இறை வசனத்தை நினைத்துப்பார்! ஒரு நிறுவையின் தட்டில் வீசி எறியப்பட்ட கோதுமைத் தோலும் கூட கனத்தைக் கொடுக்க வல்லதே. ஒரு வேளை முதலில் போடப்பட்ட ஒரே ஒரு தோல் கனமில்லாததாகத் தோன்றலாம். ஆனால் அதே போன்று பல தோல்கள் ஒன்று சேரும்போது கட்டாயம் குறிப்பிடத் தக்க கனம் உண்டாகிவிடும்.

எனவே, நன்மையானவற்றைச் செய்! அவை எவ்வளவு சிறியவையாயிருப்பினும் அது பற்றி உனக்குக் கவலை இல்லை. நீ செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் கூலியுண்டு. சிறு துளி இல்லையேல் பெருவெள்ளம் உண்டாக முடியாது. இதே போன்று சிறிய பாவங்கள் தாமே என்று எண்ணிக் கொண்டு தீய வழியில் நடக்க ஆரம்பித்து விடாதே! பாம்புக் குட்டிக்கும் மனிதனைக் கொல்லும் ஆற்றல் உண்டு.

# 13. வியாதிக்கு மருந்து

இனிமேல் மக்களின் மனப்பான்மையைப் பார்ப்போம். பாவமான காரியத்தைத் தொடர்ந்து செய்யும் மனப்பான்மை சிலருக்கு உண்டு என்று நான் சொன்னேனல்லவா? அந்த மனப்பான்மையை எப்படி அகற்றுவது?

பாவத்திலேயே புரள்வது கொடிய வியாதியாகும். அந்த வியாதி உனக்கு ஏற்பட்டிருந்தால், அதற்குரிய சிகிச்சையின் மூலம் அவ்வியாதியை அகற்று! இதோ அதற்குரிய மருந்தை விவரிக்கிறேன்.

எந்த வியாதியானாலும் சரி, அது மருந்தின் உதவியால் தான் நீங்கும். மருந்தின்றி எந்த வியாதியும் நீங்குவதை எதிர்பார்க்க முடியாது. இதே போன்று, உன்னுடைய பாவ வியாதியும் அதற்குரிய மருந்தின் உதவியால்தான் நீங்கும். ஆனால், வியாதியையும் அதற்குரிய காரணங்களையும் அறியாத மனிதனால் மருந்து தர முடியாது என்பது உறுதி. எனவே உனக்கேற்பட்டிருக்கும் பாவ மனப்பான்மையையும், அதற்குரிய காரணங்களையும் நீ உணர வேண்டும். அப்போது தான் உன்னால் அதற்குச் சிகிச்சை செய்ய முடியும்.

தீமையிலேயே ஊறிக் கிடக்கும் மனப்பான்மைக்கு கவனக் குறைவும், காம உணர்ச்சியும் அடிப்படையான காரணங்கள். கவனக் குறைவுதான் எல்லாப் பாவங்களுக்கும் அடிப்படை. அதனால் தான் எந்த மனிதனும் பாவத்தில் வீழ்கிறான். ஆகவே தான் வல்ல நாயன், "அவர்கள் கவனக் குறைவுள்ளவர்கள்; அவர்கள் மறுமையில் கட்டாயம் கைசேதப்படுவார்கள்" என்று கூறுகிறான்.

இந்த நோயை அறிவு என்னும் இனிப்பான மூலிகை யினாலும், பொறுமை என்னும் கசப்பான பச்சிலையினாலும் தயாரிக்கப்பட்ட மருந்தின் உதவியால் விரட்டியடிக்கலாம். ஆக, இந்த மருந்தின் மூலப் பொருள்கள் இரண்டு: அறிவு, பொறுமை. இவ்விரு பொருள்களாலும் தயாரிக்கப்பட்ட மருந்தே பாவ நோயைப் போக்கும் ஆற்றல் பெற்றது. ஆகவே, இப்போது அறிவைப் பற்றியும் அதன் பிறகு பொறுமையைப் பற்றியும் ஆராய்வோம்.



"பாவ நோயைப் போக்க எல்லா அறிவும் பயன்படுமா அல்லது குறிப்பான அறிவு வேண்டுமா?" என்று நீ கேட்கலாம்.

கேட்க வேண்டிய கேள்விதான். பதில் தருகிறேன். எனினும் குறிப்பான சில வியாதிகளுக்குக் குறிப்பான சில அறிவுகள் மருந்துகளாய்ப் பயன்படுகின்றன. ஆனால் அந்த அறிவை வெறுமனே கூறினால், அதனால் உனக்கு அவ்வளவு நன்மை ஏற்படாது; அதை நீ புரிந்து கொள்வதும் சிரமமே. ஆதலால், ஓர் உதாரணம் கூறி ஒப்பிட்டு அதை விளக்குகிறேன்.

தன் நோய்க்கு முடிவு காண எண்ணும் ஒருவன் சில விஷயங்களை நம்பியாக வேண்டும்.

1. நோயாளி முதலில் நோயும், ஆரோக்கியமும் ஒன்றுக்கொன்று எதிரான இரு தன்மைகள் என்றும், அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு காரணத்தினால் ஏற்படுகின்றன என்றும், வியாதிக்குரிய காரணத்தை அழித்து ஆரோக்கியத்திற்குரிய காரணத்தை உண்டாக்குவதே வைத்தியத்தின் குறிக்கோள் என்றும் நம்ப வேண்டும்.

இப்படி நம்பாதவன் தன் வியாதிக்குப் பரிகாரம் தேடிக் கொள்ள முன்வரமாட்டான். ஏனெனில், வைத்தியத்தில்தான் அவனுக்கு நம்பிக்கை இல்லையே! பின் ஏன் வைத்தியம் செய்யப்போகிறான்? இவன் தன் வியாதியாலேயே மாண்டு மடிந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இதே போன்று பாவ நோயால் பீடிக்கப்பட்டவன் முதலில் பாவமும், நன்மையும் ஒன்றுக்கொன்று எதிரான இரண்டு தன்மைகள் என்றும், அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு காரணத்தினால் ஏற்படுகின்றன என்றும், நன்மைக்குரிய காரணம் இறை வழிபாடு என்றும், தீமைக் குரிய காரணம் இறை முரண்பாடு என்றும் நம்பவேண்டும். இந்த நம்பிக்கை இல்லாதவன் எதை மறுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. என்ன உளறினாலும் யோசிப் பதற்கில்லை!

2. நோயாளி, தனக்கு வைத்தியம் செய்ய வந்திருக்கும் வைத்தியனை நம்ப வேண்டும். அவன் வைத்தியத் துறையில் பாண்டித்தியம் உள்ளவன் என்றும், அவன் தரும் மருந்து குறி தவறாது என்றும், அது பற்றி அவன் கூறுவது யாவும் உண்மை என்றும் உறுதி கொள்ள வேண்டும். ஏனெனில், வியாதியை நீக்கும் ஞானமே வைத்தியம் என்று நம்பி விட்டால் மட்டும் வியாதி நீங்கிவிடாது.

இதே போன்று பாவ நோயாளி தன் உள வியாதிக்குப் பரிகாரம் செய்ய வந்திருக்கும் அண்ணல் நபி (ஸல்) அவர்களை நம்ப வேண்டும். அவர்கள் சொல்பவை யாவும் உண்மை என்றும், அவர்கள் பொய்யுரைக்க மாட்டார்கள் என்றும் உறுதி பூண வேண்டும்.

3. நோயாளி வைத்தியனின் ஒவ்வொரு வார்த்தையையும் செவி மடுக்க வேண்டும். அவன் "அணுகாதே" என்று சொன்னவற்றிலிருந்து விலகியிருப்பதோடு. "செய்து முடி" என்று கூறியவற்றைக் கண்டிப்பாய்ச் செய்து முடிக்க வேண்டும். ஏனெனில், வைத்தியத்திற்கு முறிவு ஏற்பட்டுவிடக் கூடாதல்லவா?

இதே போன்று, தீமைப் பிணி கொண்டவன், அண்ணல் நபி (ஸல்) அவர்களின் கூற்றுக்கும் அவர்கள் எடுத்தியம்பும் திருமறைக் கருத்திற்கும் செவி சாய்க்க வேண்டும். அவர்கள் "கடமை" என்று குறிப்பிட்டதை அவன் செய்து முடிக்க வேண்டும், "அணுகாதே" என்று சொன்னதை விட்டு அவன் வெகு தூரம் ஓட வேண்டும்; அதன் பக்கம் திரும்பியும் பார்க்கக் கூடாது.

இவ்வாறு அவன் நபி (ஸல்) அவர்களைக் கிஞ்சித்தும் சந்தேகமில்லாமல் நம்பிச் செயலாற்றி வந்தால், அதன் உதவியால் இவனுக்குத் தன் உள்ளத்தை அடக்கியாண்டு, பொறுமை காக்கும் குணம் தானாகவே வந்துவிடும்.

எனவே, பாவப்பிணி கொண்டவன் தன் பிணியை அகற்ற வழி தேட வேண்டும்; அதற்குரிய மார்க்க மேதைகளிடம் சென்று தன் வியாதிக்கு முடிவு காண வேண்டும். சிலர், தங்களைப் பாவப்பிணி பிடித்துக் கொண்டிருக்கிறது



என்பதையேஉணரமாட்டார்கள்; சொன்னாலும் நம்ப மாட்டார்கள். இத்தகையவர்களுக்கு மார்க்க அறிஞர்கள் தாம் உண்மையை உணர்த்த வேண்டும். இது அவர்களுக்கு முக்கியம்; கடமை, மக்களுக்கு வழிகாட்ட வேண்டிய பொறுப்பை ஏற்றுக் கொண்ட இவர்கள், தங்களிடம் மக்கள் வந்து கேட்கும் வரை காத்திருக்கக் கூடாது. எத்தனையோ பேர் வெட்க வசப்பட்டு அறிஞர்களிடம் கேட்பதையே விட்டு விடுகிறார்கள். எனவே, அறிஞர்கள் தாங்களாகவே சென்று மக்களின் அறியாமையை அழிக்க வேண்டும். அறியாமையில் கிடக்கும் மக்களைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருப்பது பெருங்குற்றம். இவர்கள் ஒவ்வொரு வீடாய்ச் சென்று ஒவ்வொரு மனிதனாகப் பிடித்து உபதேசித்தாலும் நல்லதே.

ஏனெனில், மனோ வியாதி ஏற்பட்டவர்கள், தங்கள் வியாதியை உணரமாட்டார்கள். கண்ணாடி வைத்திராத ஒருவனின் முகத்தில் வெண் கு டம் ஏற்பட்டுவிட்டால், அது அவனுக்கே தெரியாது. அதைப் பார்த்தவர்கள் தாம் அதை அவனிடம் கூறிப் பரிகாரம் தேடச் செய்ய வேண்டும். இதே போன்று மனோ வியாதி ஏற்பட்டவர்களுக்கு மார்க்க மேதைகள் தாம் அறிவுறுத்த வேண்டும். இது அவர்களுக்குக் கட்டாயக் கடமையாகும். ஒவ்வோர் ஊரிலும், மக்களை நேர்வழியில் செலுத்தும் அறிஞர்களைக் கொண்டு நல்வழிச் சுடரைக் கொளுத்துவது ஒவ்வொரு அரசனுக்கும் கடமையாகும். ஏனெனில், பொதுவாக எவ்வித அறிவும் பெற்றிராதவர்களாகத்தான் மனிதர்கள் பிறக்கிறார்கள். அவர்களுக்கு இம்மையைப் பற்றியும், மறுமையைப் பற்றியும் எடுத்துரைப்பது மிகவும் அவசியம்.

உலகம் என்பது நோயாளிகளின் வீடு. ஏனெனில், அதன் வயிற்றினுள் கிடப்பவை பிணங்கள்; எலும்புக் கூடுகள், அதன் முதுகின்மீது இருப்பவர்கள் நோயாளிகள்; மரணத்தை அணுகிக் கொண்டிருப்பவர்கள்.

உள்ளத்தின் வியாதி, உடலின் வியாதியைவிட அதிகமே. அந்த வியாதிக்குரிய வைத்தியர்கள் மார்க்க அறிஞர்களே. உலகம் எனும் இந்த நோய் மடத்திற்கு அதிகாரிகளா

யிருப்பவர்கள் அரசர்கள். மார்க்க அறிஞர்களின் மூலம் சிகிச்சை பெற விரும்பாத நோயாளியை அரசனிடம் ஒப்படைக்க வேண்டும். அவன் வியாதி பிறருக்கும் பரவிவிடக் கூடாதல்லவா?

ஒரு மனிதன் தன் வியாதிக்குப் பரிகாரம் செய்து கொள்ளாத காரணத்தினால், அவன் வியாதி முற்றிப் போய், அவனுக்குப் பைத்தியம் உண்டாகிவிட்டால், அவனை அரசாங்கத்தாரிடம் ஒப்படைத்து கை, கால்களைச் சங்கிலிகளால் பிணைக்கிறோமல்லவா? இதே போன்று மார்க்க மேதைகளின் மூலம் தன் உளநோய்க்குப்பரிகாரம் தேடிக் கொள்ளாத காரணத்தால் அவனை அரசனிடம் ஒப்படைத்துத் தண்டனை பெறச் செய்ய வேண்டும். பிற மக்களுக்கு அவனால் ஏற்படும் தீங்கை இம்முறையால் தடுக்கலாம்.

"உள்ளத்தின் வியாதி, உடலின் வியாதியைவிட அதிகம்" என்று நான் கூறினேனல்லவா? அதற்குக் காரணம் என்ன என்று இப்போதே பார்த்துவிட்டு நமது பிரச்சினையைத் தொடர்வோம்.

உள வியாதி அதிகமாகக் காணப்படுவதற்கு மூன்று காரணங்கள் உள்ளன.

1. இவ்வியாதியால் பீடிக்கப்பட்டவன் தன் வியாதியை உணர்வதில்லை.

2. இவ்வியாதியின் பயங்கரமான முடிவை இவ்வுலகில் கண்கூடாய்க் காண முடியாது. ஆனால், உடல் வியாதியின் நிலைமை இப்படியல்ல. அதன் முடிவு மரணம் என்பதை எல்லோரும் அறிவார்கள். வியாதியால் மாண்டவர்களையும் மக்கள் கண்டிக்கிறார்கள். எனவே, உடல் வியாதியுள்ளவர்கள் வைத்தியத்தின் பக்கம் விரைகிறார்கள்; வைத்தியனின் காலைக் கட்டிக் கொண்டு கதறுகிறார்கள்.

3. உள நோய்க்கு இப்போது மருந்து கிடையாது. ஏனெனில், இவ்வியாதிக்கு வைத்தியம் செய்பவர்கள் மார்க்க அறிஞர்கள். மார்க்க அறிஞர்களே இக்காலத்தில் இந்த



வியாதியால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தங்கள் வியாதிக்கு தீர்வு காண முடியாத இவர்களால் பிறருக்கு எப்படி வைத்தியம் செய்ய முடியும்? இவர்களின் இத்தகைய போக்கு பிற மக்களின் வியாதிக்குத் தூபம் போட்டு விடுகிறது. இவர்களின் முயற்சிகள் யாவும் மக்களின் வியாதியை மிகைப்படுத்துகின்றன. ஏனெனில் மிகவும் கொடிய வியாதி உலகப் பற்றுத்தான். இந்த வியாதி இன்று அறிஞர்களைத் தாம் பெரும்பாலும் பிடித்து உலுக்குகிறது. இந்த நிலைமையிலிருக்கும் அறிஞர்கள் மக்களுக்கு எப்படி உபதேசம் செய்வார்கள்? அவர்கள் அப்படியே உபதேசம் செய்தாலும் அதனால் பலனேற்படுமா? "உபதேசம் செய்ய வந்துவிட்டீர்களா? அதன்படி நீங்கள் நடப்பதில்லையே. நாங்கள் எடுத்து நடக்குமாறு ஏன் கூறுகிறீர்கள்?" என்று யாராவது கேட்டுவிட்டால் இவர்களால் என்ன பதில் கூற முடியும்?

இக்காரணங்களினால்தான் இன்றைய உலகில் மனோவியாதி அதிகப்பட்டுவிட்டது; அதை அழிப்பதற்குரிய மருந்து இழக்கப்பட்டுவிட்டது; அதற்கான வைத்தியர்களின் ஆற்றல் பறிக்கப்பட்டுவிட்டது, அந்தோ கைசேதம்!

இத்தகைய அறிஞர் மக்களுக்கு உபதேசம் செய்யா விட்டாலும் அவர்கள் மக்களை வழி கெடுக்காமலாவது இருக்கலாம்; நன்மையைச் செய்யாவிட்டாலும் தீமையாவது செய்யாமலிருக்கலாம். ஆனால் இவர்கள் அப்படியும் இருப்பதில்லை பரிதாபம்!

இவர்கள் உபதேசம் புரிவார்கள். ஆனால் அது உபதேசமாகவே இருக்காது. இனிமையான கதைகளையும் உருக்கமான சம்பவங்களையும் எடுத்துரைத்து மக்களை இன்புறுத்துவார்கள். "பே ... பே" என்று மக்களை சொல்ல வைப்பார்கள். இந்த பிரசங்கத்தால் என்ன பயன்? பிரசங்கத்தின் குறிக்கோள் இதனால் கிட்டுமா? "பிரசங்கத்தில் வசிய சக்தியுண்டு" என்று நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டது இவர்களின் பிரசங்கத்திற்குப் பொருந்துமா? பொருந்தாது என்றால் அந்தப் பிரசங்கத்தினால்தான் என்ன பயன்?

உபதேசம் முடிந்ததும் மக்கள் போய்விடுகிறார்கள். அவர்கள் கேட்டதெல்லாம் மூலைக்கொன்றாகச் சிதறிப் போய்விடும் நன்மையானவற்றைச் செய்ய வேண்டும் என்ற எண்ணமோ தீமையானவற்றை விட வேண்டும் என்ற தீர்மானமோ அவர்களுக்கு ஏற்படாது. எப்படி ஏற்படும்? அவர்கள் கேட்ட பிரசங்கம் வெறும் கதைகளையல்லவா படிப்பித்தது?

"அப்படியானால், ஓர் அறிஞர் எப்படித்தான் உபதேசம் செய்ய வேண்டும்?" என்று கேட்கலாம்.

ஆனால், அதை விவரிக்க இச்சிறிய நூல் இடந்தராது. என்றாலும், பாவம் செய்யும் மனப்பான்மையை எப்படி அகற்றுவது, மக்களின் உள்ளங்களில் நன்மை மனப்பான்மையை எப்படி உண்டாக்குவது என்று ஓரளவு குறிப்பிடுகிறேன்.

உபதேசம் செய்பவர்கள் வீணான கதைகளையும், அர்த்தமில்லாத சம்பவங்களையும் எடுத்துரைப்பதை விட்டுவிட்டு, குர்ஆன், ஹதீது ஆகியவற்றிலிருந்து தெளிந்த கருத்துக்களை எடுத்து மக்கள் மன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும்; மக்களின் வாழ்க்கை, அவர்களின் முன்னேற்றம், அவர்களின் கலாச்சாரம், அவர்கள் செய்ய வேண்டியவை. அவர்கள் விட்டு ஒதுங்க வேண்டியவை முதலிய சகலத்தையும், குர்ஆனிலும், ஹதீதிலும் மெருகிட்டுப் பிரசங்கம் செய்ய வேண்டும். அறிஞர்கள், மேதாவிகள், நபிமார்கள் முதலியோரின் வாழ்க்கையைக் கூற வேண்டும். அவர்கள் செய்த செயல்கள், அதற்கு அவர்கள் தேடிய பரிகாரங்கள், அதனால் அவர்கள் பட்ட க டங்கள் முதலியவற்றையும் கூறவேண்டும். ஆதம், ஐயூப், சுலைமான் தாவூத், மூஸா, ஈஸா (அலை) ஆகியோரின் வாழ்க்கைக்குறிப்புகளையும் சந்தர்ப்பத்திற்குத் தக்கவாறு கூறலாம், அறிஞர்கள் செய்த பிரசங்கங்கள் அவர்கள் எழுதிய கடிதங்கள் முதலியவற்றையும் வெளியிடலாம்.

முஆவியா (ரலி) அவர்கள் ஆயிஷா (ரலி) அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். அதில் அவர்கள் கீழே கண்ட சில வரிகளை வரைந்திருந்தார்கள்: "என் வாழ்க்கை வளமுற



ஏதேனும் உபதேசம் செய்யுங்கள், ஆனால் என்னால் செய்ய முடியாததைச் சுமத்தி விடாதீர்கள்!"

அதற்கு ஆயிஷா (ரலி) அவர்கள் பதில் எழுதினார்கள்:

'இறைவனின் கோபத்தையும், மக்களின் அன்பையும் பெற்றவனை இறைவன் மக்களிடமே விட்டுவிடுகிறான்; மக்களின் கோபத்தையும், இறைவனின் அன்பையும் பெற்றவனுக்கு இறைவன் போதுமானவன்' என்று நபி (ஸல்) அவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன்."

அபூ சயீத் (ரலி) அவர்களிடம் ஒருவர் கேட்டார்:

"எனக்கு உபதேசம் செய்யுங்கள்!"

அதற்கு அபூ சயீத் (ரலி) அவர்கள் பதிலளித்தார்கள்:

"இறைவனுக்கு அஞ்சுங்கள், அதுதான் எல்லா நன்மைகளுக்கும் தலைபோன்றது. குர்ஆனைப் பற்றிக் கொள்ளுங்கள்! அது உங்கள் வாழ்க்கையின் ஒளி விளக்கு, நன்மையைத் தவிர்த்து வேறு எதிலும் வாய் திறக்காதீர்கள்!"

ஹஸன் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

"இறைவனின் காரியத்தைக் கண்ணியப்படுத்துங்கள்! உங்கள் காரியங்களை இறைவன் கண்ணியப்படுத்துவான்..."

அறிஞர் லுக்மான் (ரஹ்) அவர்கள் தம் மைந்தனுக்கு உபதேசம் புரிந்தார்கள்:

"அறிஞர்கள் என்று பெயர் பெற்றவர்களில் மடையர்களும் இருக்கிறார்கள். அவர்களிடம் நீ எது குறித்தும் வாதிக்காதே! அப்படி நீ அவர்களிடம் நல்ல விஷயத்தை வாதித்தாலும் அவர்கள் சரியான விடை தரமாட்டார்கள்; கோபிப்பார்கள். உனக்குத் தேவையானதை உலக வாழ்க்கையில் எடுத்துக்கொள்! உன் செலவை விட்டு மிஞ்சியதை உன் மறுமை வாழ்க்கைக்காகச் செலவிடு! உலக வாழ்க்கையையே உதறித் தள்ளிவிடாதே! தொழுகையைக் கெடுக்கக் கூடிய வகையில் நோன்பு வைக்காதே! ஏனெனில், நோன்பைவிடத் தொழுகை உயர்ந்தது. மடையனிடம் உறவாடாதே!

ஆச்சரியம் ஏற்படும் வரை சிரிக்காதே! திமிராக நடக்காதே! உனக்குத் தேவையில்லாததை அடைய விரும்பாதே! பொருள் விரயம் செய்யாதே! மகனே, அன்பு செலுத்துபவன் அன்பு செலுத்தப்படுவான். வாய் மூடியவன் கவலைப்பட மாட்டான். தன் நாவை அடக்கியாளாதவன் கைசேதப் படுவான்...."

கிலுரு (அலை) அவர்கள் மூஸா (அலை) அவர்களிடம் கூறினார்கள்:

"அன்பு செலுத்துபவராக இரும்! எரிந்து விழுபவராக இராதீர்! நன்மை செய்பவராக இரும்! தீமை செய்பவராக இராதீர்!"

உமர் பின் அப்துல் அஜீஸ் அவர்கள் ஹஸன் (ரலி) அவர்களுக்கு எழுதிய கடிதம் இதோ இருக்கிறது.

"எனக்கு ஏதேனும் உபதேசம் செய்யுங்கள்! நபிகள் நாதர் முஹம்மது (ஸல்) அவர்களிடமிருந்து தாங்கள் அறிந்தவற்றை எனக்கு எழுதுங்கள்!" ஹஸன் (ரலி) பதில் அனுப்பினார்கள்:

"தன்னையே சோதனை செய்து கொண்டவன் வெற்றி கண்டு விட்டான். இதை மறந்தவன் தோல்வியடைந்து விட்டான். முடிவைப் பார்த்து நடப்பவன் மகிழ்வான். இச்சைக்கு வழிப்பட்டவன் குப்புற விழுவான். பொறுத்தவன் அரசாள்வான்..... பாவம் செய்து விட்டால் கைசேதப்படுங்கள்! உங்களுக்கு ஏதேனுமொன்று தெரியாவிட்டால் தெரிந்தவரிடம் கேட்டுக்கொள்ளுங்கள்!"

இவ்வகையிலெல்லாம் பிரசங்கம் செய்யலாம். இவற்றினால் ஏற்படும் பயன் எண்ணிலடங்காதவை. பிரசங்கம் என்றால் மனிதனின் உள்ளத்தில் ஆத்மீகத்தை உண்டாக்குவதை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். இது முக்கியம், இந்தக் குறிக்கோளைக் கொண்டிராத எந்தப் பிரசங்கமும் மதிக்கத்தகுந்ததல்ல.

சரி, இப்போது நாம் எடுத்துக்கொண்ட பிரச்சினைக்கு வருவோம். பாவ வியாதி கொண்டவர்களுக்குரிய மருந்தில் இரண்டு மூலிகைகள் உள்ளன. ஒன்று அறிவு. மற்றொன்று பொறுமை. அறிவை ஓரளவு விவரித்து விட்டேன். எந்த அறிவு பாவ நோய்க்கு மருந்தாக அமைகிறது என்று பார்த்து விட்டோம். இப்போது பொறுமையைப் பார்ப்போம்.



"இந்தப் பொறுமைக்கு என்ன தேவை?" என்று கேட்கலாம்.

இதற்குத் தேவையுண்டு என்பதை விரைவில் உணர்வாய்.

ஒரு மனிதனின் வியாதி அதைத் தூண்டிவிடக்கூடிய பொருள்களை உட்கொள்வதனால்தான் அதிகப்படுகிறது. வியாதி அதிகப்படாமலிருக்க வேண்டும் என்றால், உடம்புக்கு ஒவ்வாத பொருள்களை உட்கொள்ளாது பொறுமையைக் கையாள வேண்டும்.

வியாதியஸ்தன் ஒருவன் தன் வியாதிக்கு நெருங்கிய ஏதேனும் சிலவற்றை உட்கொண்டுவிடுவதால், அவன் நிலைமை மேலும் பாதிக்கப்படுகிறது.

அப்படி அவன் உட்கொள்வதற்குக் காரணம் பொறுமையின்மையே. ஏனெனில் தன் உள்ளத்தை அடக்கி அவற்றை உட்கொள்ளாமல் இருந்திருந்தால் அவன் நிலைமை இப்படி மாறப்போவதில்லை.

அவன் அவற்றை உட்கொள்ளாமலிருக்க வேண்டுமாயின் முதலில் அவ்விதமான பொருள்களின் மீது அவனுக்குக் கவனம் திரும்பக் கூடாது. பின்னர், அப்படியே கவனம் வந்துவிட்டாலும், அவற்றினால் ஏற்படும் தீங்கை எண்ணிப்பார்க்க வேண்டும். அப்போது தானாகவே வெறுப்பு ஏற்பட்டு விடும்.

இதே போன்று, உள நோயாளியும் நடந்து கொள்ள வேண்டும். அவன் மனம் எத்தனையோ எண்ணங்களால் அலைமோதலாம், எத்தனையோ இன்பங்களை எண்ணி அவன் மனம் துடிக்கலாம். ஆனால், இவற்றுக்கெல்லாம் அவன் இடம் கொடுக்கக்கூடாது; அடக்கியாளத் தவறக்கூடாது.

இது உனக்கு கசப்பாகத்தானிருக்கும், ஆனால் கசப்பான இந்த மருந்தினாலேதானே உன் வியாதி நீங்கமுடியும்.

இவ்விதமான பொறுமை மனப்பான்மை எல்லோருக்கும் உண்டாகிவிடாது. நன்கு ஆராய்ந்து முடிவு கண்டவர்களுக்குத்தான் இந்தப் பேரின்பம் கிடைக்கும்.

சிலருக்கு மார்க்கத்தை அலசி ஆராயும் தன்மை இல்லாதிருக்கலாம். அவர்களுக்குப் பிறர் எடுத்துச் சொல்லித்தான் தெரிய வேண்டும் என்ற நிலைமை இருக்கலாம். இவ்விதமானவர்கள் அறிஞர்களிடம் நன்றாகப் பழக வேண்டும்; பிரசங்க மேடைகளுக்குச் செல்ல வேண்டும்.

இந்த முறைகளையெல்லாம் நபிமார்கள் கற்றுக் கொடுக்கவே செய்தார்கள். அவர்களால் அதுதான் முடியும், அவர்கள் எடுத்துரைப்பார்களே தவிர அப்பாதையில் மக்களை அழைத்துக் கொண்டு போகமாட்டார்கள். அவர்களுக்கு அப்படி இழுத்துச் செல்வது கடமையல்ல. ஏனெனில் அவர்கள் மனிதர்களுக்காகத்தானே அனுப்பப் பட்டிருக்கிறார்கள். சொன்னதை எடுத்து நடக்கும் ஆற்றல் மனிதனிடம் இல்லையா, என்ன?

இது வரை நான் மன்னிப்பைப் பற்றி ஓரளவு விளக்கி விட்டேன். பாவத்தின் மருந்தான அறிவு, பொறுமை ஆகிய வற்றையும் விளக்கிவிட்டேன். ஆனால், பொறுமைக்குத் தனிப்பட்ட ஒரு நூலே எழுத வேண்டும். இதோ பொறுமையைப் பற்றியும் எழுதுகிறேன்.

- (முற்றும்) -